மாதப் பத்திரிகை

ஆசிரியர்

கா. வே. ராமசந்திரன்

நான்காவது வால்யூம் விக்கிரம வருஷம் புரட்டாசிப் பகுதி

15—9—1940.

# விஷய ஸூசிகை.

பக்கம்.

## கவிதா விமர்சம்


1. அழகு அழகினை நாடும் ... "குட்சிபூர்ணன்" ... 513
2. அமுதப் பங்கீடு ... தமிழ் வித்துவான் R. முத்துவையர் ... 515
3. தேசிகமாலைக் கண்ணன் ... சே. திருமலை அய்யங்கார் ... 518
4. ஸ்ரீராமசுகந்தம் ... "விசாரதன்" ... 557


## புதுக் கற்பனைகள்


1. விடாதே! பிடிகாக்கையை ... ஸ்ரீ ய. மஹாலிங்க சாஸ்திரிகள் M.A., B.L., ... 521
2. பிரதாபஸிம்ஹர் (நாடகம்) ... K. வரதாச்சரி B.A., B. L., ... 523
3. காபிகீ ஜே! ... "விசாலி ராஜம்" .... 534
4. இராயர் சீமைகனவு—ஓர் கற்பனை... "ராஜம்" ... 537
5. குற்றத்திற்குத் தகுந்த தண்டனை ... வ. வேணுகோபாலன் ... 541
6. நீதியற்ற கதைகள் ... "ஸ்ரீ" ... 543
7. வண்ணான் முட்டை ... மா. கிருஷ்ணன் ... 545
8. மைலாப்பூர் வக்கீல் ... மா. பா. ... 548


## கீதப் பகுதி


1. ஸ்ரீதியாகையர் அவர்களது ஸம்ஸ்கிருத கீர்த்தனைகள் ... ஸ்ரீ. ய. மஹாலிங்க சாஸ்திரிகள் M.A., B. L., ... 553


## அனுஷ்டானப்பகுதி


1. விநாயக வைபவம் ... டாக்டர் வே. ராகவன் ... 558
2. கண்ணபிரானது முகமதிய பக்தர்கள் ... "பார்க்கவன்" ... 563
3. கண்ண கண்ணே ... "வே. ரா." ... 565

ரேடியோப் பகுதி

1. ... கா. வே. ராமசந்திரன்

சிறுவர் பகுதி

1. பூனை ... பார்வதி ... 569

மொழிபெயர்ப்புப் பகுதி

1. கதைக் கடல் ... டாக்டர் வே. ராகவன் .... 571
2. உமருகையூமின் ருபையத்து ... "பாத்வாஜன்" ... 576

## சந்தாதாரருக்கு ஒரு விண்ணப்பம்.

சந்தாதாரர்கள், தங்கள் சந்தா பாக்கியை இந்த மாதமாவது தவருமல் அனுப்புமாறு பிரார்த்திக்கிறோம்.

1941-வது வருஷத்திலும், சில்பஸ்ரீயை ஆதரிக்க எண்ணியவர்கள் இப்பொழுதே அடுத்த வருஷ சந்தாவையும் அனுப்புமாறு பிரார்த்திக்கிறோம்.

இப்படிக்கு,

பத்திராதிபர்—சில்பஸ்ரீ.

# அறிவிப்பு.

'சில்பஸ்ரீ'க்குக் கட்டுரை எழுத விரும்புவோர் முதல் வால்யூம்தைப்பகுதியில் **2, 3-வது** பக்கங்களில் உள்ள 'சில்பஸ்ரீ மாதப் பத்திரிகையின் நோக்கங்கள்' 'சில்பஸ்ரீயில் எழுதப்படும் விஷயங்கள்' என்னும் குறிப்புகளைக் காண்க. அனுப்பப்படும் கட்டுரைகளைத் தாளின் ஒரு பக்கத்திலே மட்டும் எழுதுமாறு பிரார்த்திக்கிறோம். பிரசுரிக்கப்படாத கட்டுரைகளைத் திரும்பப் பெறவிரும்புவோர் தபால் தலையும் உடன் அனுப்புமாறு பிரார்த்திக்கிறோம்.

இப் பத்திரிகையில் வெளிவரும் புனைந்துரைகளிலுள்ள பெயர்கள் யாரையும் குறிப்பன அல்ல; எல்லாம் கற்பனைப் பெயர்களே அவை. கட்டுரைகளிலே கூறப்படும் அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்கள் அபிப்பிராயங்களே; அவைகளுக்கு பத்திரிகாசிரியர் ஜவாப்தாரி யல்ல.

---

## சில்பஸ்ரீ

தமிழ் மொழியையும் கலைகளையும் வளர்ப்பதற்காகவே அமைந்ததொரு பத்திரிகை. டபிள் க்ரௌன் (Double Crown) அளவில் **64** பக்கங்கள் கொண்டு, மாதந்தோறும் வெளிவரும்.

**தனிப்பிரதி விலை அணா 4.**

**வருஷ சந்தா (உள்நாட்டுத் தபால் சார்ஜும் உள்பட) ரூ. 3.**

# கவிதா விமர்சம்.

## அழகு அழகினை நாடும்.

"குட்சிபூர்ணன்."

மிதிலையென்னும் மாது கொடிகள் என்னும் கைகளை நீட்டி ஒல்லைவா என்றழைத்தாள். ஒருவனை அழைக்க அங்கே சென்றவர் மூவர். ஒருவன் ஐவரை அடைத்தவன்; இன்னொருவன் ஐயன்; பிறிதொருவன் அவன் தம்பி.

அங்கே அம்மூவரும் மணிக்கொடிகள் ஆடக்கண்டார். மருப்பியானை மலையக்கண்டார். புலர்வன வாடக்கண்டார். பின்னர் மிதிலை புக்கார். புகுந்து வெறுத்து நீத்த பொற்கலன் கிடந்த நெடுந்தெருவதனிற் போனார். மறுகிற் சென்றார்; ஆடும் ஆடகவாரங்குங் கண்டார்; மகளிர் மைந்தர் சிந்தையோடு லவக்கண்டார். மணி, பொன், ஆரம், கவரி வால், அகில் மஞ்ஞைத்தோகை, தும்பிக் கொம்பு இவை நிறைந்துள ஆவணம் பல கண்டார். மகளிரீந்த இசைத் தீந்தேன் செவிமடுத்து இனிது சென்றார். சாளரந்தோறுஞ் சந்திர உதயங்கண்டார். மங்கையர் விரும்பியாடும் வாவிகள் பலவுங் கண்டார். கண்டாரேயன்றி நின்றிலர்.

பின்னர் அங்கோர் பொழில் கண்டார்; அதனை யடுத்து ஒரு மதிலையும் அகழையுங் கண்டார்; அதனை யடுத்துக் கன்னிமாடம் ஒன்று. அதனைக் கண்டு அதனயல் நின்றார். நிற்பானேன்? இதற்குமுன் எத்தனையோ காட்சிகளைக் கண்டும் அங்கே நிற்கவில்லையே என்றால் அந்த மாடத்தில்தான் இருக்கிறது சூக்குமம். அங்கே நிற்கத்தான் வேண்டும். கண்டார், சென்றார் என்று கூறிவந்த கம்பர் இங்கே 'கண்டு நின்றார்' என்றார்.

இவர்கள் இங்கே நிற்க மாடத்தும்பர் ஒரு பெண்கனி நின்றாள், அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்; இருவரும் மாறிப் புக்கிதயமெய்தினார். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமா?

மேற்கூறியது மிதிலைக்காட்சி. மிதிலையில் எந்த அழகினைப் பார்க்கவேண்டுமோ அதனைப் பார்த்துவிட்டார். சனகனும் முனிவனும் ஒருவர்க்கொருவர் யோகக்ஷேமங்களை விசாரித்துக்கொண்டதில் இச்சிறுவர்கள் யாவரென அனைவரும் அறிந்துகொண்டனர்.

விசுவாமித்திரன் 'புனைந்த சடைமுடி துளக்கிப் போரேற்றின் முகம் பார்த்தான்.'

வள்ளலும் நெடுஞ்சிலையை நோக்கினன்; கொழுங்கனலென்ன வெழுந்தான். விண்ணவர் அழிந்தது வில்லென ஆர்த்தார். இங்கே ஒரு வில் முறிவதற்குள் ஆயிரம் ஆயிரமாக அனங்கன் மங்கையர் மனந்தோறும் எய்தான்.

ராமன் வந்தால் என்ன? வாராக்கால் என்ன? வில்லை முறித்தால் என்ன? முறியாது விட்டால் என்ன? சீதையினிடத்து உண்மையாகவே மிதிலைப் பெண்களுக்கு அவ்வளவு அன்பிருக்க என்ன காரணம்? சீதையினிடத்தில் இருந்ததுகூட அவ்வளவு ஆச்சரியமில்லை. இராமனிடத்து ஏன் அவ்வளவு அநுதாபப் படவேண்டும்? தந்நயங்கருதியா!

கம்பர் என்ன சொல்லுகிறார் பார்ப்போம்: ஒருத்தி, "அடீ! இந்த வில் பெரிய வில்லடீ. சீதையின் கைகள் இராமன் கைகளைப் பிடிக்காவிட்டால் சீதையின் வாழ்வு என்ன வாழ்" வென்றாள்.

இன்னொருத்தி, "இந்த இராமன் வில்லை நாணேற்றாவிட்டால் நங்கையும் நாமும் நெருப்பில் விழுந்துவிடுவோ"மென்றாள்.

மற்றொருத்தி, "சனகன் சீதைக்கு மணமுடிக்கக் கருதினால் இந்த இராமனைப் பார்த்ததும் இந்தா, சீதை—இவள்தான் உன் மனைவி என்று கொடுப்பதை விட்டு சிவபெருமானது வில்லையெடுத்து நெஞ்சு துணிந்து இந்தப் பிள்ளைக்குமுன் இட்டது அறியாமை"யென்றாள்.

பிறிதொருத்தி, "சனகனுக்குத் தாடியும் நரைத்தது, அறிவும் பெருகியது; வெட்கந்தான் இல்லை"யென்றாள். இன்னொரு பெண் "சனகன் கொடுங்கோலன்" என்றாள்.

இப்படி யிவர்கள் பேசி நிற்க இராமன் நாகமும் நாண நடந்தான். மாலையென்ன எடுத்தான்; எடுத்தது கண்டனர்; இற்றது கேட்டார்.

அழகான பொருளை விரும்பாதார் யார்? அழகிய பொருளை ஆடவரும் விரும்புவர்; மகளிரும் விரும்புவர். விசுவாமித்திரர்கூட இராமனைப் பார்க்கும்போது 'ஆடவர் பெண்மையை அவாவுந் தோளினாய்' என்கின்றார்.

கம்பர் இராமனது அழகை ஆனமட்டும் சொல்லிப் பார்த்தார்; ஆசை தீரவேயில்லை. என்ன சொன்னாலும் அழகின் அளவைக் கூறினதாக அவருக்கு ஆத்ம திருப்தி ஏற்படவில்லை. அந்தப் பாழுங் கவி என்ன செய்தார் தெரியுமா? கங்கைப் படலத்திலே,

..................................................

..................................................

மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ
ஐயோயிவன் வடிவென்பதொரழியா வழகு
டையான்

எனப் பெருமூச்சு எறிகிறார். அவ்வளவு அழகுள்ள பொருளாம்—அப்பொருளை அடைவதே வாழ்க்கையின் குறிக்கோள்.



# அமுதப் பங்கீடு.

(தமிழ் வித்துவான் R. முத்துவையர்.)

அயோத்தி மன்னனாகிய தசரத சக்கிரவர்த்தி, கலைக்கோட்டு முனிவர் தலைமையில் நடத்திய புத்திரகாமேஷ்டி யாகத்தில் தோன்றின அமுதத்தை அவரது பட்டமகிஷிகளுக்கு உரிய முறையில் பங்கிட்டுக் கொடுத்த வரலாற்றைக் கம்பராமாயணத்தை முதன்மையாக வைத்து விவரிப்பது இக்கட்டுரைப் பொருளாகும்.

முதன் முதல் அமுதம் பெற்ற விதத்தைக் கம்பர் கூறியபடி கவனிப்போம். தசரத மன்னன் கலைக்கோட்டு முனிவரை வரவழைத்தான். புத்திரப்பேறில்லாக் குறையை நீக்கியருள வேண்டுமென்று பிரார்த்தித்தான். உடனே வேள்விக்கு வேண்டுவன யாவும் சித்தம் செய்யக் கட்டளை யிட்டார் முனிவர். எல்லாம் உடனே தயாராயின. முறைப்படி ஒரு வருஷ காலம் அசுவமேத யாகம் நடைபெற்றது. இறுதியில் அந்த ஓமகுண்டத்தில் தானே புத்திரப் பேற்றிற்குரிய ஆகுதிகளையும் வழங்கினர் முனிவர்.

அப்பொழுது அந்த ஓமகுண்டத்திலிருந்து சூழ்ந்து எரிகின்ற தீ போன்ற தலைமயிரும், சிவந்த கண்களுமுடைய ஓர் பூதம் விரைந்தெழுந்தது. அது தன் கையில் வைத்திருந்த பரிசுத்தமான இனிய அம்ருதம்போன்ற பிண்டம் வைத்த ஓர் அழகான பொன் தட்டைக் கீழே வைத்துவிட்டு மறுபடியும் அதிலேயே மறைந்தது. உடனே கலைக்கோட்டு முனிவர் பூதங் கொண்டுவந்த அம்ருதத்தை உரிய மனைவியர்க்குத் தக்கமுறையில் கொடுக்கும்படி தசரதரிடம் கொடுத்தார், என்பதாகும்.

முதனூலாகிய வான்மீகத்தில் இவ்விரண்டு யாகங்களும் தனித்தனி செய்யப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கின்றன. அதற்கு 'அசுவமேத யாகத்தால் புத்திரப்பேற்றிற்குத் தடையாயிருந்த பாவங்கள் தீரவும், புத்திரகாமேஷ்டியால் புத்திரப்பேறு உண்டாகவும் காரணமாயிற்று' என்று உரையாசிரியர்கள் வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். தவிர, அந்த யாக குண்டத்திலிருந்து ப்ராஜாபத்திய புருஷன் வெள்ளி மூடியிட்ட ஸ்வர்ண பாத்திரத்தில் திவ்ய பாயஸம் கொண்டு வந்ததாகக் கூறப்பட்டுள்ளது. அன்றி, துளஸிதாஸர் அத்யாத்ம ராமாயணத்தையும் மேற்கோளாகக் கொண்டு அக்நிதேவனே ஒரு பாத்திரத்தில் ஹவிஸைக் கொண்டு வந்து கொடுத்து விவரங்களையும் தெரிவித்துப் போனதாகக் கூறியிருக்கிறார்.

ஆகவே, கம்பர் யாககுண்டத்திலிருந்து ஒரு பூதம் தங்கத் தகட்டில் அமுதபிண்டம் கொண்டு வந்ததாகவும், வான்மீகி ப்ராஜாபத்திய புருஷன் வெள்ளி மூடி போட்ட பொன் பாத்திரத்தில் பாயஸம் கொண்டு வந்ததாகவும், துளஸீதாஸர் முதலியோர் அக்நிதேவனே ஹவிஸை கொண்டுவந்ததாகவும் கூறியிருக்கின்றனர். இவ்விஷயத்திலே ஒவ்வொரு ஆசிரியரும் வெவ்வேறு விதமாகக் கூறுகிறார்கள். பொதுவாகக் கவியாசிரியரானவர் நூலின் தன்மை, தம் மனோபாவம், பாஷையின் ஒழுக்கம், தம் நாட்டியற்கைக்கு ஏற்ற பழக்க வழக்க நாகரிகம் முதலான சிறந்த குணங்களுக்கு ஏற்பக் கதைகளைத் திரித்துக் கூற வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏராளமாயிருக்கின்றன. அதற்கு இலக்கணமும் இடங்கொடுத்திருக்கிறது. அதாவது,

> "முன்னோர் நூலின் முடிபு ஒருங்கொத்து
> பின்னோன் வேண்டும் விகற்பம் கூறி
> அழியாமரபினது வழிநூலாகும்"

என்றபடி வழிநூலாசிரியன் தான் எடுத்துக்கொண்ட முதனூற் கதையின் தொடக்க ஒடுக்கம் ஒன்றாகக்கொண்டு வேண்டும் இடங்களில் கதையை மாற்றியும் திரித்தும் கூறிச் சிறந்த முறையில் நிலைபெறச் செய்வான்' என்பதாகும்.

அம்முறையில் ராமகதையை எல்லோரும் வான்மீகியிடமிருந்து தான் பெற்றார்கள். வேண்டுமிடங்களில் தக்க காரணத்துடன்

கதையைக் கூட்டியும் குறைத்தும் திரித்தும் கூறியிருக்கிறார்கள். எப்படியானாலும் ராம ஜனனத்திற்குரிய பொருள் யாககுண்டத்திலிருந்து தோன்றியது என்பது வெளிப்படையாகும்.

வான்மீகி கூறிய திவ்ய பாயஸத்தின் பெருமையைத் தன் நூலில் விளக்கும் காளிதாஸர் "மஹாவிஷ்ணுவே இந்தப் பாயஸமூலமாகத் தான் பிறக்கவேண்டுமென்று விரும்பினரென்றால் அதன் பெருமை அளவிடற்கெளிதோ" என்று கூறினர். கம்பரோவென்றால் "தூயநற் சுதை நிகர் பிண்டம்" என்றும், 'சுதை' என்றும் கூறியிருக்கிறார். பாயஸமென்று கூறினால் அதை வருணித்து உயர்த்த வேண்டும். தவிர அது பலவகைச் சுவைப் பொருள்களால் தயார் செய்யப்பட்ட செயற்கைச் சுவை யுடையது. அன்றி, நன்றாகச் சுவையறியும் ஒருவரிடம் சென்று 'ஐய! அருமையான பாயஸம் எப்படி?' என்று கேட்டால், உடனே அவர் 'ஆஹா! பாயஸமா! அம்ருதம்' என்று அநுபவித்துக் கேட்பவர் நாவிலும் நீர் ஊறும்படி உணர்ச்சியோடு பதிற் சொல்வார். ஆதலால், இந்த இயற்கை முறைப்படி எவ்வகைச் சுவைப்பொருளுக்கும் எடுத்துக் காட்டாயிருக்கிற அமுதத்தையே, தன்னிகரில்லாத தலைவனாகிய ராமன் பிறக்கக் காரணமான பிண்டப்பொருளுக்கு உவமித்ததுமன்றி மீண்டும் அதை 'சுதை' என்றும் கூறின கம்பருடைய கற்பனையின் மேன்மை வியக்கத்தக்கதல்லவா! ஓமகுண்டத்தில் தோன்றிய பொருளான பிண்டம் என்ற சொல்லைக் கம்பர் நாஸிம்ம புராணத்திலிருந்து எடுத்துக் கையாண்டிருக்கிறார் என்பது மல்லிநாதர் வ்யாக்கியானம் பார்க்கும்போது வெளியாகின்றது. நிற்க, இனி அந்த அமுதத்தைப் பங்கிட்ட முறையைக் கவனிப்போம்.

முதன் முதல் ராம காதைகளுக்கெல்லாம் முதனூலும் ஆதிகாவியமுமான வான்மீகத்திற் கூறப்பட்டிருப்பதையே கவனிப்போம். "தசரதர் பாயஸம் பெற்றதும் கிடைத்த முறையில் நேர்பகுதியைக் கோசலைக்கும், மீதியில் நேர்பகுதியைச் சுமித்திரைக்கும், பிறகு மீதியுள்ளதில் நேர்பகுதியைக் கைகேயிக்கும், அதன்பிறகு மீதியுள்ளதை நன்றாய் ஆலோசித்து மீண்டும் சுமித்திரைக்குமாகப் பங்கிட்டுக் கொடுத்தார்" என்பதாகும்.

கம்பர் பங்கிடும் முறையைக் கவனிப்போம். வான்மீகி கூறியபடியே 'அவ்வமுதத்தில் அரைப்பங்கை முதலில் கோசலைக்குக் கொடுத்தார். மீதியுள்ளதை இரண்டாகப் பகிர்ந்து ஒரு பாகத்தை அதாவது, காற்பங்கை இரண்டாவதாகக் கைகேயிக்கும் மீதி காற்பங்கை மூன்றாவதாகக் கொடுத்தபிறகு மறுபடியும் அப்பொன் தட்டில் பிதிர்ந்து கிடந்ததையும் கூட்டித் திரட்டி நான்காவதாகச் சுமித்திரைக்கே கொடுத்தார்' என்பதாகும். இதனால் கம்பருடைய பங்கீட்டின் தன்மையும் கொடுத்த வரிசைக்கிரமும் முதநூலுடன் மாறுபட்டிருக்கிறது. இம்முறைப்படி பார்க்கும் போது கோசலைக்கு அரைப்பாகமும் ஏனையோருக்குக் தனித்தனி காற்பாகமும், பாத்திரத்தில் சிந்திக் கிடந்தது கடைசியில் சுமித்திரைக்கும் கிடைத்திருக்கிறது என்பது வெளியாகின்றது.

இனி காளிதாஸனது சமத்காரத்தைப் பார்ப்போம். "சூரியனானவன் தனது இளவெயிலை ஆகாசத்திற்கும் பூமிக்கும் பங்கு வைத்துக் கொடுப்பதுபோல தசரதர் பாயஸத்தைக் கோசலைக்கும் கைகேயிக்கும் ஸமபாகம் வைத்துக் கொடுத்துவிட்டார்" என்பது முதல் அபிப்பிராயம். ஏன் அவ்வாறு கொடுத்தார்? என்ற வினா உடனே எழுகின்றது. அதற்கு 'பெருமைக்குப் பாத்திரமாய் மதிக்கத்தக்க மனைவி கோசலை. காதலுக்குத் தக்க அழகும் தகுதியும் வாய்ந்தவள் கைகேசி. ஆனதால் கொடுத்தார்' என்று கூறப்படுகிறது. இதனால் கோசலையின் மதிக்கத்தக்க பெருங்குணத்திலும் கைகேசியினது காதலிக்கத்தக்க அழகிலும் ஈடுபட்டுக் கொடுத்தார் என்றாகிறது. தசரதர் கைகேசிக்குட்பட்டு இன்பத்திலீடுபட்டவரென்று கோஸலையே கூறுவதாக அத்யாத்ம ராமாயணத்திற் கூறப்பட்டிருக்கிறது. இவைகளிலிருந்து இம் மனைவியர் இருவரின் குணாதிசயமும் தசரதரின் மனோபாவமும் நம் அகக்கண்ணாடியில் தெளிவாகப் பிரகாசிக்கின்றன.

அப்படியானால் சுமித்திரையின் ஸ்தானம் எப்படி? அவளுக்குக் கிடைத்தவிதம் என்ன?

என்பதற்குப் பதில் கீழ்வருமாறு காளிதாஸனால் கூறப்பட்டிருக்கிறது. 'பெருமைக்கும் காதலுக்கும் தக்கவர்களான அவ்விரு மனைவியரைக் கொண்டும் சுமித்திரையை நன்கு மதிக்க செய்யவேண்டுமென்று விரும்பினான் அரசன். உடனே கணவன் குறிப்பறிந்த மனைவியர் இருவரும் தத்தம் பாகத்திலிருந்து நேர் பகுதியைச் சுமித்திரைக்குக் கொடுத்தார்கள்' என்பதாகும்.

இதனால் சுமித்திரைக்குப் பங்கு கூடியது மட்டுமல்ல, கோசலை கைகேசி என்ற இருவரின் குணநிசயமும் ஒருங்கே சுமித்திரை பெற்றவள் என்பதும், அவளிடம் தசரதர்க்குள்ள அபிமானமும் பற்றுதலும், பிறவும் வெளியாகின்றன. அன்றிப் பொதுவாகத் தான் மதிப்பதைவிடத் தன்னால் மதிக்கப்பட்டவரைக் கொண்டு மதிக்கச் செய்து மதிப்பைப் பெறுபவர்க்குப் பெருமதிப்பும் கௌரவமுமாகுமென்பது நிதர்சனமாகத் தெரிந்த விஷயம். அம்முறையில் சுமித்திரைக்கு மற்ற இருவர்களையும் கொண்டு கொடுக்கச் செய்யவேண்டுமென்று கருதினர் தசரதர் என்று கருதவும் இடம் ஏற்படுகின்றது.

பங்கு வைத்த முறைமையன்றிக் கொடுத்த முறையிலும் வான்மீகருக்கும் கம்பருக்கும் வித்தியாசமிருக்கிறது. வான்மீகர் இரண்டாவது சுமித்திரைக்கும் மூன்றாவது கைகேயிக்கும் பிறகு சுமித்திரைக்கும் கொடுத்ததாகக் கூறுகிறார். ஏன் அவ்வாறு கொடுத்தார் என்பவற்றுக்கு ஒரு வ்யாக்யான கர்த்தா 'கைகேசி மிகவும் சிறியவளாதலால் அவளுக்கு அரைக்காற் பங்கு கொடுத்தார்' என்று காரணம் கூறுகிறார். கம்பரோ இரண்டாவது கைகேயிக்கும் மூன்றாவது சுமித்திரைக்குங் கொடுத்ததாகக் கூறுகிறார். அதற்கு அநுகுணமாக சுமித்திரையை மற்றவர்களுக்கு இளையவளாகவும் கூறியிருக்கின்றார். வான்மீகர் கூறிய முறைப்படி பார்த்தால் ராமனுக்கு அடுத்த படியாக லக்ஷ்மணனும், அதன் பிறகு பரதனும், பிறகு மீண்டும் சுமித்திரைக்குச் சத்துருக்கனனும் பிறந்து வரிசைக் கிரமத்தில் சகோதரர்களாக வேண்டும். பாஸகவி தம் நூலில் லக்ஷ்மணன் பரதனுக்கு மூத்தவனென்றே அபிப்பிராயப்பட்டிருக்கிறார். இந்த இடைஞ்சலை நிவர்த்திப்பதற்காகக் கம்பர் சுமித்திரையை இளையவளாக்கி அவளுக்கு கடைசிப் பாகமும் கொடுத்து நிரப்புகிறார். ராமாயணங்கள் எத்தனையோ இருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் முதனூல் வால்மீகமேயன்றி வேறில்லை. முதனூற் கூற்றுக்கு மாறாகக் கூறுபவர் தங்கத்தைப் பல்வேறு நகைகள் செய்வது போலத் தமது கொள்கைக்கும் குறிப்புக்கும் தக்கவாறு திரித்துக் கொள்வது இயல்பாகும். அதிலும் ஒரு நயமும், கருத்தும், அழகும் இருப்பது கவனிக்கத்தக்கது.

ராமாயணப் பெருங்காப்பியத்திற்குப் பாட்டுடைத் தலைவன் அல்லது கதா நாயகன் ராமனேயாம். ஏனையோர் உபநாயகர்களாவார். கதாநாயகர்களெல்லோரும் முதல் நாயகனுடைய காரியத்திற்கு ஏற்ற முறையில் துணை புரிகின்றனர். இம்முறையிலேயே கம்பர் பெருங்காப்பிய நிர்மாணஞ் செய்திருக்கிறார் என்பது நன்கு விளங்கும். சான்றாகத்தக்க சந்தர்ப்பங்களேற்படும் போதெல்லாம் தம் காவியக் குறிப்பு ராவணவதமே என்பதை அடிக்கடி நினைப்பூட்டிக் கொண்டே போவதையும் காணலாம்.

ஆதலால் அந்த அரும் பெரும் காரியத்தைச் செய்து முடித்து உலகத்தில் தருமம் செழித்தோங்கக் கடவுள் அவதாரஞ் செய்வதற்கு அரைப்பங்கு அமுதத்தைப் பட்டமகிஷியான கோசலைக்குக் கொடுத்தார். தவிர, ராமன் ராவணவதம் மட்டும் செய்யவில்லை. அதற்கிடையில் எத்தனையோ அரியகாரியங்கள் செய்து முடித்திருக்கிறான் என்பதற்கும் அரைப்பாகம் கொடுத்திருக்கிறார். இதிலிருந்து ராமாயணத்தில் பெரும் பாகம் ராமனைப்பற்றியதேயாகும் என்பதை ஒருவாறு ஊகிக்கலாம்.

# தேசிகமாலைக் கண்ணன்.

[தமிழ் வித்துவான், பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரே. திருமலை அய்யங்கார்]

"உயிரு முடலு முடலாக வோங்கித்
தயிர் வெண்ணெய் தாரணி யோடுண்டான்—
பயிரில்
களைபோ லசுரரைக்காய்ந்தான் றன்கையில்
வளைபோலெம் மாசிரியர் வாக்கு"

—தேசிகமாலை.

உலகில் தற்போது "தேசிகப்பிரபந்தம்" என வழங்கிவருவதே "தேசிகமாலை". இங்குள்ள தேசிகனே வேதாந்த குரு. இவரே தூப்புல்வள்ளலார். கண்ணன் என்பவன் செங்கண்மால், முக்கண்ணனுன ஆளரி, கரிய செம்மலான தசரதராமன், யசோதை இளஞ் சிங்கம் என்ப. அவர்களுள் ஈண்டு எடுத்துக் கொண்டது தேவகி தநயனை என்க. தேசிக மாலையில் வேதாந்த வாசிரியனை சந்தமிகு தமிழ் மறையோன் "கண்ணனை"க் கண்டு களித்தமையை ஒருவாறு காட்டப்புகுவதே இக்கட்டுரையின் நோக்கு. சான்றோர் குற்றங் கடிந்து குணமே கொள்வர்.

கண்ணனது திவ்யசரிதங்களில் அதிபாலி யத்திலேயே அவன் புரிந்த திருவிளையாட்டுக் களில் சகடமுதைத்தது, பூதனையை மாய்த் தது, கஞ்சனைக் கடிந்தது, காளிங்கநர்த்தனஞ் செய்தது, விடையேழடர்த்தது, வரை யெடுத்து மாரிகாத்தது முதலியவற்றை ஆங்காங்குக் கூறும் அழகே அழகு.

"உருளுஞ்சகட மோன்றுதைத்தாய்"

(நவமணிமாலை 5);

"(அடியவர் மெய்யர் மலர்ப்பதங்கள்)" சகடமுடைந்து கலங்கவென்றன"

(ஷை, 1);

"வஞ்சனைசெய் பூதனையை மலியுஞ்சாட்டை மல்லரையோர்
மதக்களிற்றைவானரைஞ்சும்
கஞ்சனை முன் கடிந் தவனிபா ரந்தீர்த்த காவலனே"

(ஷை, 6);

(பெரிய பெருமாள் மெய்ப்பதங்கள்)

"உறுசகடமுடையவொரு காலுற்றுணர்ந் தன"

(அதிகாரச்சுருக்கு. 51);

ஷை

"அடலுரக படமடிய வாடிக்கடந்தன"

(ஷை. ஷை);

(மலர்ப்பதங்கள்)

"உரக படங்க ளரங்கு கோண்டன"

(நவமணிமாலை. 1);

"விடையுடனழன்றடர்த்தவன்"

(அமிர்தாஸ்வாதினீ 34);

"வரையெடுத்து மழைதடுத்த மழையோ டொத்த மெய்யினன்"

(நவமணிமாலை 3);

(மெய்ப்பதங்கள்)

"உடன்மருத மோடியவொரு போதிற்ற வழ்ந்தன"

(அதிகாரச்சுருக்கு. 51);

ஷை

"உரிதடவு மளவிலுர லோடுற்று நின்றன"

(ஷை, ஷை);

"நகரந்துவரை யெனவுகந்து வரைகரத் தெடுத்தனை"

(நவமணிமாலை. 2);

"வஞ்சனைசெய் பூதனையை மாய்த்தார் வந்தார்
மல்லர் மதகரி மாளமலைந்தார் வந்தார்
கஞ்சனைப்போர்க் கடுஞ்சினத்தாற் கடிந்தார் வந்தார்"

(திருச்சின்னமாலை. 9.);

"மத்துறு மிகுத்ததயிர் மொய்த்த வெணெய்
வைத்ததுண்ணு மத்தன்"

(அத்திகிரிமான்மியம். 9 ) ;

"வரையெடுத்து நிரையளித்த மாசில் வாசு
தேவன்"

நவமணிமாலை. 8) ;

என்பன காண்க,

பஞ்சபாண்டவசகாயனாய் நின்று, அவர்களை எக்காலுங் காத்து, தூது நடந்து, பார்த்தன் தேரூர்ந்து, வெஞ்சமர் வெல்வித்து, பாஞ்சாலி குழல் முடித்தான் கண்ணன் என்பதை,

"வண்டுவரை நகர்வாழ வசுதேவர்க்காய்
மன்னவாக்குத்
தேர்ப்பாகனாகி நின்ற தண்டுளவமார்பன்"

(அமிர்தாஸ்வாதிநீ. 10) ;

"பார்த்தன் தேர் முன்னேதான் தாழ நின்ற,
உத்தமனார்"

"கோதவமொன்றில்லாத தகவே கொண்ட
கொண்டலென வந்துல கிலவர்க்கன்றோர்
தூதுவனா யொருகோடி மறைகளெல்லாந்
தொடர்ந்தோடத் தனியோடித் துயரந்தீர்த்த
மாதவனார்"

பரமதபங்கம். 53) ;

"தருமன்விடத் தூது போனார் வந்தார்"

(திருச்சின்னமாலை. 8) ;

"பார்த்தனுக்குத் தேரூர்ந்தார் வந்தார்"

(ஷை. ஷை) ;

"பஞ்சவரைப் பல வகையுங் காத்தார்
வந்தார் பாஞ்சாலி குழல் முடித்தார் வந்தார்
தாமே"

(ஷை. 9) ;

"வாரிதி விட்டு மலர்மகளோடு மதுரை
வந்து
பாரத வெஞ்சமர் பார்மகள் பாரஞ் செக
வுகந்து
சாரதியாய் முன்புதூதனுமாய்த் தளரும்
விசயன்
தேரதினின்று"

(சரமசுலோகச்சுருக்கு. 3) ;

(மலர்ப்பதங்கள்)

"தருமனிரந்ததிசைந்து சென்றன"

(நவமணிமாலை. 1 ) ;

(மெய்ப்பதங்கள்)

"உறுநெறியோர் தருமன்விடு தூதுக்குகந்
தன"

(அதிகாரச்சுருக்கு. 5) ;

"அறமுடைய விசயனமர் தேரிற்றிகழ்ந்தன"

(ஷை. ஷை) ;

என்பனவற்றில் நன்கு தெளியவைக்கின்றார் தூப்புற்கோன். கண்ணன் கீதாசாரியனாய்த் திகழ்ந்து பரமோபகாரம் புரிந்தான் என்பது,

"உனக்கித மென்றொரு பாகன் உரைத்தது"

(அமிர்தரஞ்சனி. 8) ;

"தண்டுளவ மலர்மார்பன் தானே சொன்ன
தனித்தருமம்"

(அமிர்தாஸ்வாதிநி. 10) ;

"அடற்புள்ளரசிலு மந்தணர் மாட்டிலு
மின்னமுதக்
கடற்பள்ளி தன்னிலுங்காவிரி யுள்ளுமுகந்த
பிரான்
இடைப்பிள்ளையாகி யுரைத்தது"

(பரமபதஸோபாநம். 1) ;

"தீவகைமாற்றி யன்றோர் தேரிலாரணம்
பாடிய நம்
தேவகி சீர் மகனார்"

(பரமதபங்கம். 7) ;

"பரமெனது நீ புலம்பலென்பார் வந்தார்"

(திருச்சின்னமாலை. 8) ;

"ஓரறநெறியன்றுரைத்தான்"

(சரமசுலோகச்சுருக்கு. 2) ;

என்றவற்றில் விளக்கம்.

கண்ணன்து சீர்பாதத்திறனை,

(பெருமாள் மெய்ப்பதங்களை)

"விழ்கரியோர் குமரனென்ன மேவிச் சிறந்
தன"

(அதிகாரச்சுருக்கு. 51);

"வேந்ததோரு குழவியை நற்குமரனுக்கும்
வெறித்துளபவித்தகனர்"

(பரமபதஸோபா நம். 9);

என்பதால் விளக்கிக்காட்டுதல் வெளிப்படை,

கண்ணன் கறவைகளை நன்கு பரிபாலித்த
னன் என்பதை,

'மாட்டுக்கருள் தருமாயன்".

(அதிகாரச்சுருக்கு. 50);

"கறவையுகந்த பிரான்"

பரமபதஸோபாநம். 8);

"கோவலனாய் நிரையளித்த நிரை"

பரமபதபங்கம். 44);

என்று விளம்புகிறார் வேதாந்தவாரியன்.

வேதமௌலியினாசிரியன் கண்ணனிடத்து மிக வீடுபட்டு அவன் கழல்களையே அடைய வேண்டுமென முறையிட்டு அநுபவிக்கும் அழகு பேரழகே. அப்பாசுரங்களை அன்பர்கள் கற்றுய்வதற்காக அவை இங்கு தரப்பெறுகின்றன:

"அறியாத விடைச்சியரு மறியும் வண்ணம்
அம்புயத்தா ளுடன்அந்நாள் அவதரித்த
குறையாதும் இல்லாத கோவிந்தா! நின்
குரைகழற்கீழ் அடைக்கலமாங் குறிப்புத்
தந்தாய்
வெறியாரு மலர்மகளும் நீயும் விண்ணில்
விண்ணவர்க ளடிசூட விருக்குமேன்மை
குறையாத வினையகற்றி அடிமைகொள்ளக்
குறுகவொரு நன்னாள்நீ குறித்திடாயே"

—அமிர்தாஸ்வாதினீ. (12);

"மஞ்சுலாவு சோலைசூழ யிந்தை மன்னு
மன்னு சீர்
வரையெடுத்து நிரையளித்த மாசில்வாசு
தேவனே!
செஞ்சொலன்பர் சிந்தைகொண்டு தீதிலாத
தூதனாய்த்
தேருமூர்ந்து தேசுயர்ந்த செல்வதெய்வ
நாயகா!
வெஞ்சொலாளர் காலதூதர் வீசுபாசம் வந்
தென்மேல்
வீழ்ந்தழுந்தி யானயர்ந்து வீழ்வதற்கு முன்
னம் நீ
அஞ்சலஞ்ச லஞ்சலென்ற ளிக்கவேண்டு
மச்சுதா;
அடியவர்க்கு மருளியக்கு மடியவர்க்கு
மெய்யனே!"

—நவமணிமாலை. (8);

கண்ணன் கழலிணையே கதியென்றிருப்பார்க்கு எண்ணியயாவும் பெறலாம் இங்கே. தேசிகமாலைக் கண்ணன் தேசுயர்த்த நந்தேசுயரும். வேதாந்த குருபாதமே துணை.

# புதுக் கற்பனைகள்.

## விடாதே! பிடி காக்கையை.

(ஸ்ரீ. ய. மஹாலிங்க சாஸ்திரிகள், M.A., B.L.,)

பட்டம் பெற்ற மாணவர்களுக்கு என்னை உபதேச மொழி கூறக்கேட்டுக் கொண்டதாய் ஸ்வப்னம் கண்டேன், "பிடி காக்கையை" என்றேன். முன்னொரு யுகத்தில் நளன் ஹம்ஸத்தைப் பிடித்தான். உத்தமஸ்திரீ லாபமடைந்தான். இக்கலியுகத்தில் காக்கையைப் பிடித்ததால பணமும் பதவியும் பெறலாம். கலியுகபக்ஷி காக்கைதான். சாஸ்திரம் கூட அப்படித்தான் சொல்லுகிறது. "ஸங்கே சக்தி: கலௌயுகே". கூட்டம் போட்டு ஜீவிப்பது காக்கையல்லவா? இதை நம்மவரில் உணராதவரில்லை. பாருங்கள். பால பாடபுஸ்தகங்களில் காக்கையைப்பற்றி அவசியம் ஒரு பாடம் இருக்கிறது. ஸ்கூல் இன்ஸ்பெக்டர் வந்தால் பையன்களை "காக்கை என்ன நிறம்" என்று கேட்கிறார். காக்கையைத் தெரிந்து கொள்ளாமல் "அது வெள்ளை நிறம்" என்று சொல்லுகிற பையன் வகுப்பை விட்டு நீக்கப்படவேண்டியவன். ஏன் அதில் என்ன தப்பு? காக்கையைத் தெரிந்து கொள்ளாமல் இவ்வுலகில் இவன் எப்படி ஜீவிக்கப் போகிறான்?

இரண்டாம் பாட புத்தகத்தில் "காக்கையின் தந்திரம்" என்ற பாடம். கோடை காலத்தில் ஒரு காக்கைக்குத் தாகம் எடுத்தது. எங்கும் ஜலம் இல்லை. சுற்றி அலைந்தது—நாம் உத்யோகமில்லாமல் அலைவதுபோல். தற்செயலாக ஒரு குடத்தைப் பார்த்தது. அதில் கொஞ்சம் ஜலம் அடியில் தென்பட்டது. ஆனால் அது காக்கையின் மூக்கிற்கு எட்டவில்லை. உடனே அந்தப் புத்திசாலிக காக்கை என்ன செய்தது? இது தான் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயம். தனக்குக் கிட்டாத ஜலத்தைக் கிட்டும்படி செய்து கொண்டது. மூக்கை நீளமாக்கிக் கொண்டதென்று நினைக்கிறீர்களா என்ன? இல்லை யில்லை. இருக்கிற மூக்கை வைத்துக்கொண்டே ஜலத்தை எட்டியது. என்ன விந்தை! ஆஹா என்ன ஸாமர்த்தியம்! என்ன சமயோசிதபுத்தி! அக்குடமாகிற எஜமானை "தாஜா" பண்ணிற்று. சிறுகற்களை உள்ளே தள்ளியது. மெல்ல ஸொட்டுக் கொடுத்து ஸ்தோத்திரம் செய்து ஆழ்ந்த அடியுள்ள கும்பேச்வரரை அடியற்ற பேதையாகச்

செய்தது. ஜலத்தை கழுத்தண்டை கொண்டு வந்து கக்கும்படி செய்தது.

பருகினர் காக்கையார் ஜலத்தை. கொஞ்சம் மனமும் குளிர்ந்தார். ஆனால் காக்கை மட்டும் ஸந்தோஷப்பட்டதாய் நினைக்காதீர்கள். உள்ளம் கல்லான குடமும் "இந்த அதிதி நமக்கு கிடைக்க என்ன புண்ணியம் செய்தோமோ" என்று மனம் மகிழ்ந்தது.

ஆனால் காக்கையே! ஜாக்கிரதையாய் இரு. நீ குடத்திற்கு பிரயோகித்த அஸ்திரத்தை உனக்கு ஒரு நரி பிரயோகித்து உன் வாய் வடையை கவ்விக் கொண்டு போகக் காத்திருக்கிறது.

ஆகையால் இக் கலியுகத்தில் காக்கையை நம்புங்கள். ஸ்வர்ணசாரியும் சுப்பிரமணியனும் திண்ணைப்பள்ளிக்கூட ஸகபாடிகள். ஸ்வர்ணசாரி வக்கீலாய் வந்து மோட்டாரில் உருள்கிறான். சுப்பிரமணியம் ஸங்கீதம் அப்பியாசம் செய்து விட்டு சோத்துக்குத் தாட்டணம் போடுகிறான். நாய்போல் அலைந்து திரிந்து கொண்டிருந்த சுப்பிரமணியம் சற்று நப்பாசையுடன் ஸ்வர்ணசாரி இருக்கும் ஊருக்கு வந்து சேர்ந்தான். வக்கீல் அவர்கள் புது டிஸ்டிரிக்டு ஜட்ஜு துரைக்கு பார்டி கொடுக்கிறார். சுப்பிரமணியனுக்கும் ஒரு நாற்காலி கிடைத்தது. ஆனால் பாவம், அவன் ஒரு வைதீகபிச்சு. ஒரு பதார்த்தத்தையும் விரலால் தொடாமல் பேந்தப் பேந்த விழித்துக் கொண்டிருந்தான். அத்தருணம் ஸ்வர்ணசாரி அவனிடம் வந்து "ஏன் ஒன்றும் சாப்பிடவில்லையோ?" என்று கேட்டு விட்டுப் பதிலை எதிர்பார்க்காமல் "துரைக்கு நம்ம ஸங்கீதத்தில் பிரீதி உண்டு. நீ எதிர்ச்சையாய் வந்திருப்பது நல்ல காலம். ஏதாவது ஹிந்தி பாட்டு—தேசீய கீதம்—முதலியவை ஒரு பத்து நிமிஷம் நடக்கட்டும்" என்று பரிவுடன் முதுகைத் தடவிக் கொடுத்துக்கொண்டு சொன்னான். சுப்பிரமணியம் வறுமையானாலும் தன்மதிப்புள்ளவன். தான் கற்ற வித்தையை மிக்கப் போற்றுபவன். ஹீனக்கிரயத்திற்குச் சரக்கை விற்க மனமில்லாதவன். சற்றுத் திகைத்து விழித்தான். "என்ன? யோஜிக்கிறாயா? நாழியாகிறது. ஆரம்பி" என்று பாலியத்தோழன் புன்சிரிப்புடன் வற்புறுத்தினான். சுப்பிரமணியனுக்கு ஆத்திரம் பொங்கிற்று. "இவனை ஒரு பழைய கக்ஷிக்காரன் திடீரென்று காலை பத்தரை மணிக்கு ஓடிவந்து பெஞ்சு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் ஒரு நியூஸன்ஸ் கேஸுக்கு ஆஜராகவேண்டுமென்று பலவந்தம் பண்ணினால் இவனுக்கு எப்படி இருக்கும்?" என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டான். ஆனால் அதையெல்லாம் அடக்கிகொண்டு, "சாரீரம் சரியாயில்லை; மேலும் திடீரென்று பாடு என்றால் என்ன செய்வது? முதலிலேயே தெரிந்திருந்தால் அதற்கு வேண்டிய ஏற்பாட்டுடன் தயாராக இருப்பேன். இந்தமாதிரி பாடி எனக்கு வழக்கமில்லை" என்று முகத்தில் சங்கடத்துடன் முணுமுணுத்துச் சொன்னான். வக்கீலுக்கு உடனே மூக்கு சிவந்துவிட்டது. பொய்ச் சிரிப்புத் தவழும் உதட்டுடன் அழுத்தமாய்ப் பேசினார். "அப்படியா? வாய்ப்பாட்டுக்காரனுக்கு என்ன முன் ஏற்பாடு? சரிதான் பாட முடியாதென்றால் நிர்ப்பந்தம் ஒன்றுமில்லை" என்று ஒரு மூலையைப் பார்த்துச் சொல்லி விட்டுப் பதிலை எதிர்பார்க்காமல் விடுவிடு என்று நடந்தார். சுப்பிரமணியம் மறுமுறை இந்த ஜன்மத்தில் ஸ்வர்ணசாரியைப் பார்க்க விரும்பவில்லை. எழுநூறு மைலானாலும் நடந்தே ஊருக்குப்போய் விடுவதென்ற தீர்மானத்துடன் (மானத்துடன்) அன்று இரவே கம்பி நீட்டினான்.

ஸ்வர்ணசாரி டீ பார்டியில் ஸங்கீதம் நடக்காமல் போகவில்லை. தன் ஜூனியர் ஒருவனைச் சற்றுக் கடாக்ஷித்ததுதான் தாமதம், அவர் அங்கீகரித்து ஒரு சினிமா பாட்டு அடித்தார். எதை?—"ஞானக்கண்"—அடித்தார். ஞானதிருஷ்டியில் அவருக்குக் காக்காய் இருக்குமிடம், பிடிக்கும் வழி எல்லாம் திடீரென்று பிரகாசித்தது. அவர் தொழிலில் முன்னுக்கு வந்து தன் ஸீனியர்போல் இப்போது மோட்டாரில்—தன் சொந்த மோட்டாரில்—உருள்கிறார் என்பதற்கு என்ன சந்தேகம்? சுப்பிரமணியன் பால்யத்திலேயே காக்காய்ப் பாடம் சரியாய் வாசிக்காததினால் இன்னும் கால்நடையாய்—உலகத்தவரால் கால்நடை கோஷ்டியில் சேர்க்கப்பட்டவனாய்—என்ன யோக்கியதை

யிருந்தும் பிரகாசிக்காதவனைத் திண்டாடுகிறான்.

அப்படி என்ன காக்காய் பிடிப்பது நிரம்ப கஷ்டமா? நீ ஒரு மனுஷ்யனாக அதற்குத் தெரியும்படி நடந்துகொள்ளக்கூடாது. அவ்வளவுதான். அது "கிரா, கிரா" என்று கத்தினால், கூடக் கத்தவேண்டும். சிலசமயம் அந்த வாயஸத்திற்குக் கொஞ்சம் பிண்டத்தையும் போடவேண்டும். அது வலம் போனால் கன்னத்தில் அறைந்துகொண்டு "ஆஹா! நல்ல சகுனம்! நல்ல தருணம்!" என்று ஆனந்திக்கவேண்டும். இது தானா பிரமாதம்? இதன் பலனோ, காக்கை, அதன் அனுக்ரஹ ரூபமான ஐச்வர்யம், பெருமை, புகழ் எல்லாம் கைவசம். த்ரிலோகாதிபதியான இந்திரன் புதல்வனல்லவா காக்கை!

# பிரதாபஸிம்மர்

(K. வரதாச்சாரி, B.A., B.L.,)

(டி. எல். ராய் அவர்களது நாடகத்தின் ஹிந்தி மொழிபெயர்ப்பைத் தழுவி எழுதப் பட்டது.)

[நாடக பாத்திரங்கள்.]

| | |
|---|---|
| பிரதாபஸிம்மர் | ... மேவார் மன்னன். |
| சக்தஸிம்மர் | ... ப்ரதாபஸிம்மரின் இளைய ஸஹோதரர். |
| அமரஸிம்மர் | ... பிரதாபஸிம்மரின் புதல்வர். |
| கோவிந்தஸிம்மர் | ... மேவார் தேசத்து சேனாதிபதி. |
| பாமாசா | ... மேவார் மந்திரி. |
| மாஹூ | ... வேடர்த் தலைவன். |
| அக்பர் | ... முகலாய பாதுஷா. |
| ஸலீம் | ... அக்பரின் மகன். |
| மானஸிம்மர் | ... அக்பரின் ஸேனாதிபதி. |
| மஹாபத்கான் | ... அக்பரின் ஸேனாதிபதி. |
| பிருத்வீ ராஜர் | ... முகலாய தர்பார் கவி. |
| லக்ஷ்மீ | ... பிரதாபஸிம்மரின் மனைவி. |
| ஈரா | ... பிரதாபஸிம்மரின் புதல்வி. |
| ஜோஷீபாய் | ... பிருத்வீராஜரின் மனைவி. |

(பிரதாபஸிம்மரைச் சேர்ந்த சிற்றரசர்கள், பாதுஷாவைச் சார்ந்த பீகானியர், குவாலியர், ஆமேர், சந்தேரி, மார்வாட் மன்னர்களும், இதரர்களும்.)

அங்கம் 1. காட்சி 1.

காட்டில் துர்க்காதேவி கோயில்; சந்நிதியெதிரில் குலபுரோகிதர் நின்றுகொண்டிருக்கிறார்; ராணா ப்ரதாபஸிம்மரும் அவர் சேனைத்தலைவர்களும் தங்கள் தங்கள் எதிரில் கிடக்கும் கத்திகள்மீது வலது கையும் தரையில் மண்டியிட்ட வலது காலுமாக வீற்றிருக்கின்றனர்.

பிரதாபஸிம்மர் :—நமது தாயின்முன் சத்தியம் செய்யுங்கள்.

தலைவர்கள் :—(ஒன்றுபட்டு) நமது தாய் சாட்சியாகச் சொல்லுகிறோம்.

பிரதாப :—சித்தூரை மீட்க எங்கள் உடல் பொருளாவியையும் அர்ப்பணம் செய்தோம்.

தலைவர் :—சித்தூரை மீட்க எங்கள் உடல் பொருளாவியையும் அர்ப்பணம் செய்தோம்.

பிரதாப :—சித்தூரை மீட்கும் வரையில்...

தலைவர் :—சித்தூரை மீட்கும் வரையில்...

பிரதாப :—சருகுகள் மீதே யுண்போம்.

தலைவர் :—சருகுகள் மீதே யுண்போம்.

பிரதாப :—புல் தரையிலே படுப்போம்.

தலைவர் :—புல் தரையிலே படுப்போம்.

பிரதாப :—அலங்காரங்களை விரும்போம்.

தலைவர் :—(கழுத்து மணிகளைப் பிடுங்கி எறிந்து) அலங்காரங்களைத் துறந்தோம்.

பிரதாப :—உயிரே போவதாயினும்.........

தலைவர் :—உயிரே போவதாயினும்.........

பிரதாப :—முகலாய உறவை வெறுப்போம்.

தலைவர் :—முகலாய உறவைத் துறந்தோம்.

பிரதாப :—அந்நியனுக்கு அடிமை செய்யோம்.

தலைவர் :—அந்நியனுக்கு அடிமை செய்யோம்.

ப்ரதாப :—அவர்களுக்கும் எங்களுக்கும் நடுவே.........

தலைவர் :—அவர்களுக்கு மெங்களுக்கும் நடுவே.........

பிரதாப :—உருவிய கத்தியே யென்றும்!

தலைவர் :—உருவிய கத்தியே யென்றும்!

புரோகிதர் :—ஸ்வஸ்தி! ஸ்வஸ்தி! ஸ்வஸ்தி!!

(மந்திரஜலத்தை புரோக்ஷிக்கிறார். யாவரும் தலை வணங்கி ஏற்றுக் கொள்கின்றனர். பிறகு எழுந்திருக்கின்றனர்.)

பிரதாப :—தலைவர்களே! துர்க்காதேவிக்கு முன் சபதம் செய்து கொண்டீர்கள். உடைவாளைத் தொட்டு உறுதி கூறினீர்கள். இதை யென்றும் மறக்கலாகாது, மீறவொண்ணாது; தெரியுமா?

தலைவர் :—அப்படியே நடப்போம், நம்புங்கள்; உயிர் உள்ளவரையிலும் இச்சத்தியத்தினின்றும் வழுவோம். பழுதிலாது பாதுகாப்பது எங்கள் கடமை.

பிரதாபர் :—ஆம். இதே உங்கள் கடமையெனக் கொள்ளுங்கள். தன் நாட்டின் பொருட்டுப் பாடுபடுவதென்பது எளிதில் வாய்ப்பதன்று; எல்லோருக்கும் கிட்டுவதுமன்று. உபந்நியாஸங்களாலும் தேசீய கீதங்களாலும் ஆவதன்று. கடுந்துன்பங்களை ஏற்று, உயிரையும் அளித்து அடைவதே தேச சுதந்திரம். அதனால்தான் இக்கடும் விரதத்தை உங்களுக்கு விதித்தேன். இறுதிவரையில் உறுதியுடன் பொருது, வீரக்கழலும், பேரும் புகழும் பெறுமின்! (எல்லோரும் தலைவணங்கி அங்கீகரிக்கின்றனர்.) நல்லது இனி நீங்கள் நகரத்துக்குச் செல்லலாம்.

(தலைவர்கள் போகிறார்கள். பிரதாபஸிம்மர் சிந்தனையில் ஆழ்ந்து நிற்கிறார்.)

புரோஹிதர் :—ராணா! (பிரதாபஸிம்மர் புரோஹிதர் அருகில் வந்து வணங்கி நிற்கிறார்.) ராணா! இக் கடுமையான நோன்பைக் கைக்கொண்டீர்களே, கடைசி வரையில் காப்பாற்ற முடியுமா?

ப்ரதாப :—குருதேவ! முடியாவிடின், மூற்படுவேனு? தாய் நாட்டை மீட்கும்பேறு பெறுவனே அன்றே, அதன் பொருட்டுப் பிராணனை இழக்கும் பாக்கியம் எனதேயல்லவா? அதுவே போதும்.

புரோ :—ஆம். கவலைப்படவேண்டாம். ஈசன் அருள்புரிவார். நானும் ஆசி கூறுகிறேன். உங்கள் விரதம் இனிது நிறைவேறும்! (அனுக்கிரகித்துச் செல்லுகிறார்.)

பிரதாப:—அக்பர்! நீர் சித்தூரைப் பிடித்துக் கொண்டீர். தர்மயுத்தம் புரிந்து அன்று. வஞ்சனையால் ஜயமல்லரை வதைத்துக் கைப்பற்றினீர். எங்கள் முறை அதுவல்ல. அந்நியாய வழியில் திரும்பிப்பெறமாட்டோம். தர்மயுத்தத்தால் கிடைத்தால் கிடைக்கட்டும். இல்லாவிட்டால் வேண்டாம். ராஜபுத்திரர்கள் நாங்கள்! ஆம். அந்நியதேசத்தினின்றும் வந்தவர் நீர். இத்தேசத்துச்சக்ரவர்த்தியாகவும்ஆகிவிட்டீர். பாரத சிங்காதனத்தில் வீற்றிருந்து நீர் கண்டது, தர்மத்தைத் துறந்த அரசப்பதர்களையும், போர்க்களத்தில் புறமுதுகிட்டோடிய புல்லர்களையும், அடிமைப்பட்டும் உம் புகழ் பாட இசைந்த அற்பர்களையுமே. ஆதலால் ராஜபுத்திர வீரத்தை நீர் அறியவில்லை. இனி அறிவீர், ஆண்மையெது, பேராற்றல் எத்தன்மையது அயர்விலாவூக்கம் எம்மாத்திரம் கொண்டது என. காணுமின், தாய் நாட்டின் பொருட்டுத் தலை கொடுக்கும் தியாகிகளை, தங்கள் பெண்களின் மானத்தைக் கருதி, வறுமையை விரும்பியேற்கும் தீரர்களை, அந்நியன் அருளும் பரிசில்களை உதைத்து உருட்டும் உயர்குலத்தோரைக் கண்டு தெளிவீர். ஆம். சித்தூரை விட்டு ஓடிய என் தந்தையைக் கண்ட கண்களால், காணும், அவர் தனயன் சித்தூருக்குள் நுழையும் நேர்மையை. (தேவி முன் மண்டியிட்டுக் கைகுவித்து) தாயே! அருள்வாய். தர்மம் தழைக்கவேண்டும். நோன்பு பலிக்கவேண்டும். மாண்பு மிளிர வேண்டும். தாயே! என் சித்தூர், என் உயிருக்குயிரான சித்தூர், அந்நியன் அடியில் மிதிபடும் சித்தூர், எனக்குத் திரும்பக் கிடைக்குமா? தாயே! அருள் புரிவாயா?

(பிரதாபஸிம்மர் எழுந்து நிற்கிறார். பின்னால் சக்தஸிம்மர் நிற்கக் காண்கிறார்.)

பிரதாப :—சக்தா! நீயா?

சக்த :—ஆம். நான் தான்.

பிரதாப :—இவ்வளவு நேரம் எங்கு சென்றிருந்தாய்?

சக்த :—எவ்வளவு நேரம்?

பிரதாப :—துர்காதேவிக்குப் பூஜை நடந்ததே.

சக்த :—ஓ! அவ்வளவுதானே! நான் ஜீவிய தத்வத்தைப் பராமர்சித்துக் கொண்டிருந்தேன்.

பிரதாப :—ஜீவதத்வமா?

சக்த :—ஆம். அண்ணு! ஓர் சிக்கலான விஷயத்தை ஸித்தாந்தம் செய்து விட்டேன்.

பிரதாப :—பூஜை செய்ய வேண்டாமா?

சக்த :—எனக்கு எதற்குப் பூஜை? வேண்டாம். எனக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. நாக்கை நீட்டிக் கொண்டு, பேச்சு மூச்சற்று நிற்கும் மண்பதுமையையா பூஜிப்பது? இதை ஏன் வீணே வணங்கி, வேண்டி நிற்கிறீர்! ஜீவ்யதத்வத்தை பராமர்சித்தாலும் பயனுண்டு; பல நாட் புதிர்களைப் பகுத்தறிந்திடின் புகழுண்டு.

பிரதாப :—புதிர் என்ன?

சக்த :—ஏனில்லை? ஜன்மாந்தரம் உண்டாயில்லையா? ஜீவன் என்பது என்ன? தூமகேதுவெனத் திடீரெனத் தோன்றி, சிறிது காலம் திரிந்துவிட்டு, சென்றவிடமும் தெரியாமல் மறையும் ஓர் சுடர்தானு! அல்லது தொடர்புதான் ஆத்மாவென்பதா? ஏதோ சில செயற்கைப் பொருள்கள் சேர்வதே சீவன், பிரிவதே மரணம் என்று ஏன் கொள்ளக்கூடாது? அப்படியாயின் ஒரு "நான்" என்னும் சீவனிலிருந்து அநேக சின்னஞ் சிறு "நான்கள்" எப்படிச் சம்பவிக்கின்றன?

பிரதாப :—சக்தா! ஆயுள் முழுவதும் இதே சர்ச்சைதானு உனக்கு? உலகில் சர்ச்சைகளுக்கு எல்லையேது, பிரச்னங்களுக்குத்தான் குறைவேது? இவ்வீண் வியாபாரத்தை விட்டு

ஒழி. நம் கடமை நம் முன் காத்துக்கொண்டு நிற்கிறது.

சக்த :—கடமையா? எனக்கேது கடமை?

பிரதாப :—இதோ, உன் தாய் நாட்டைப் பார். அந்நியர்கள் ஆக்கிரமித்து காலிலிட்டு மிதிப்பதைப் பார். பொலிவு அழிந்து, தன்மதிப்புத் துலைந்து, தவிப்பதைப் பார். வா! ஒரு மனப்பட்டு தொண்டு செய்வோம். பிராணனைக் கொடுத்து நம் நாட்டுக்குப் பணி செய்வோம்.

(பாமாசா வருகிறார்.)

பாமாசா :—குதிரை சித்தமாய் நிற்கிறதே.

பிரதாப :—போவோம். வா, சக்தா.

(பிரதாபஸிம்மர் முன்பும் பாமாசா பின்னுமாகப் போகிறார்கள்.)

சக்தசிம்மர் :—(உலவிக் கொண்டே) தாய் நாடா? எனக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? ஆம். நான் இங்கு பிறந்தேன். அதனால் என்ன? இங்குப் பிறக்காவிடின் ஆகாயத்தில் பிறக்கிறேன்; சமுத்திரத்தில் பிறக்கிறேன். வேறு எங்காவது பிறக்கிறேன். இங்குப் பிறந்தேன் என்பதனாலா எனக்கு இதைக்குறித்துக் கடமை என்று ஒன்று ஏற்பட்டுவிடும்? இல்லை இல்லை. நான் தான் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டவனாயிற்றே! இம் மேவாரைவிட்டு இளமையிலேயே துரத்தப்பட்டேன். காடும் மலையுமாக அலைந்தேன். என்னை அன்புடன் அழைத்து ஒரு கவளம் அன்னமிட்டதோ இந்நாடு? இதற்காக என் பிராணனையும் அர்ப்பணம் செய்து போர்புரிய வேண்டுமாம். தொண்டு பூணவேண்டுமாம்! நன்று நன்று! அவர் ராணா! இந்நாட்டை ஆளும் அரசன் அவர் செய்ய வேண்டியதுதான்; செய்யட்டும் எனக்கென்ன? எனக்கேன் கவலை? எனக்கேது கடமை?

(போகிறார்)

## காட்சி 2.

கும்பல்மேர் மாளிகை; எதிரில் தடாகம்; சாயங்காலம்; ஈரா சூர்யாஸ்தமனத்தைப் பார்த்துக்கொண்டே நிற்கிறாள்.

ஈரா :—ஆஹா. என்ன அழகு! உலகமே செந்நிறம் ஏற்றது. ஆகாயம் முழுவதும் ஸூர்யவெள்ளம்.........மாண்புடன் எழுந்தது. மாண்புடனே மறைகிறது......... இதோ ஆரத்தியுடன் வந்தனள், ஸந்த்யா தேவி. ஏனம்மா இவ்வளவு ஒய்வு உனக்கு? இவ்வளவு சலிப்பும் அயர்வும் ஏன்? உன் அருமைத் தோழியன்றோ நான், என்னிடம் சொல். என்ன உனக்கு?

(லக்ஷ்மீ வருகிறாள்)

லக்ஷ்மி :—ஈரா!

ஈரா :—(திரும்பி) அம்மா!

லக்ஷ்மி :—இவ்வளவு நேரமும் இங்கேயா யிருக்கிறாய்?

ஈரா :—ஆமாம். இது எவ்வளவு அழகு தான் பாரம்மா! உஜ்வலமான ஆகாயம். நிச்சப்தமான பூமி. பார்க்கப் பார்க்க ஆனந்தம் பொங்குகிறதல்லவா?

லக்ஷ்மி :—தினம் பார்த்து வருவதுதானே இது, புதுமை என்ன?

ஈரா :—என்றும் புதிது. ஆராத அழகு. ஸூர்யோதயமும் இப்படியே ஆயினும் அஸ்தமன அழகில் ஒரு தனி வசீகரம். அடக்கி வைத்த துயரம், பிரிவின் ஆற்றாத் துடிப்பு; ஜீவன் உள்ள ஸௌந்தர்யம் இது. ஆகையால் தான் எப்பொழுதும் பார்க்கப் பிடிக்கிறது.

லக்ஷ்மி :—பனியில் நின்று ஜலதோஷம் பிடிக்கப்போகிறது. வா, போவோம்.

(தூரத்தில் பாட்டு. இருவரும் கவனிக்கிறார்கள்.)

ஈரா :—வேதனை துடிக்கிறது இப்பாட்டில்! ஆயினும் இதுவே யென் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகிறது.

லக்ஷ்மி:—நன்றாகக் கொண்டது போ!

ஈரா :—அப்படியல்ல அம்மா! சுகத்தைவிடத் துக்கத்துக்குத்தான் கவர்ச்சியதிகம். நீயே பார்: எவ்வளவு பேர்கள், ஸரஸஸல்லாபம் செய்து கொண்டு, உல்லாஸமாக உரக்கச்

சிரித்துக் கொண்டு, செல்கிறார்கள். அவர்களுள் ஒருவரையாவது நாம் கூர்ந்து கவனிப்போமோ? ஆனால் அவர்களுள் யாராவது ஒருவன் ஒரு சொட்டுக் கண்ணீர் வடிக்கட்டும். உடனே நாம் அவனை அழைக்கச் செல்லுகிறோம். அன்புடன் விசாரித்து ஆறுதல் அளிக்கிறோம்.........போரிலும் அப்படியே. தோற்றவரிடமே நமது அநுதாபம் முழுவதும். செல்வம் திகழும் டில்லியைக் காணவா நமக்கு ஆர்வம்? இல்லை. பாழடைந்த புண்ய மதுரையே நாம் காணக் கரையும் காட்சி. சுகமே வேண்டாம் அம்மா! அதில் ஓர் செருக்குத் துலங்குகிறது, குரூரமாகப் பல்லை இளிக்கிறது; 'கீச்' சென்று உயரக் கிளம்பி ஒன்றுடனும் சேராமல் தனித்து நிற்கிறது. அப்படியல்ல துக்கம்; வணக்கம் விளங்க, பெருந்தன்மை பரவ, அதன் பண்பே பரிசுத்தமானது.

லக்ஷ்மி :—அது உண்மைதான்.

ஈரா :—சந்தேகமென்ன அம்மா! துக்கமே உயர்ந்தது. துக்கமே ஆக்குவது, கண்டு பிடித்துக் கூட்டுவது. அதைச் செலவு செய்து நுகர வருவது சுகம். மரத்தின் வேரைப்போல் மண்ணினின்றும் சுவைக்கும் துக்கம் புஷ்பங்களாகக் கண்டு களிக்கும் சுகம். வற்றிவறண்ட பூமிக்குத் தண்ணீர் வார்க்கும் மாரிகாலம் துக்கம். விண்ணுள, மேலே கிளம்பி நகைத்து உலவும் சரத்கால பூர்ணிமை சுகம்.

லக்ஷ்மி :—என்ன என்னமோவெல்லாம் சொல்லுகிறாயே! எனக்கு எப்படி விளங்கும் இவையெல்லாம்? ஒன்றுமட்டும் தெரிகிறது. உலகத்தார், எவரை, சுகி என்று எண்ணிப் பொறாமையும் கொள்கிறார்களோ, அவரே உண்மையில், சொல்லொணாத் துயரத்துக் காட்பட்டுத் தவிக்கிறவர். பகவானுடைய அனுக்கிரஹமே விசித்திரம்!

(அமரஸிம்மன் வருகிறான்.)

அமர :—அம்மா! அப்பா வந்து விட்டார். கூப்பிடுகிறார்.

லக்ஷ்மி :—இதோ வந்தோம். வா, ஈரா! (போகிறார்கள்.)

அமர :—(உட்கார்ந்து கொண்டு) ராம ராம! பயிற்சியாம் பயிற்சி! நல்ல பயிற்சி! இப்பொழுதாவது சற்று ஓய்வு கிடைத்ததே! பகலில்லை இரவில்லை, ஊணில்லை, உறக்கமில்லை. யுத்த சிக்ஷை நடந்தால் போதுமவருக்கு! நல்ல வாழ்க்கையிது! ராஜகுமாரன் என்று பெயர் தான். சாதாரண ஸைனிகனைப் போலவே எனக்கும் இப்பயிற்சியும் துக்கமும் தரித்திரமும் தான். அதோ என் சிறிய தந்தை வருகிறார். அவருடன் சற்றுப் பேசலாம். சித்தப்பா, சித்தப்பா!

(சக்தஸிம்மர் வருகிறார்.)

சக்த :—என்ன அமரஸிம்மா!......அப்பா! காற்று வீசுகிறது. வீட்டிற்குள் இருக்கவே முடியவில்லை. அவ்வளவு புழுக்கம்! இது நல்ல இடம். நல்ல காற்று அப்பா!

அமர :—ஏன்? நீங்கள் இருந்த ஊர்களில் இதைப் போன்ற ஏரிகளே யில்லையா?

சக்த :—இல்லை.

அமர :—ஆனால் இந்தவூர் உங்களுக்குப் பிடிக்கிறதா?

சக்த :—பாதகமில்லை.

அமர :—உங்களையும் போருக்காகவேதான் தகப்பனார் வரவழைத்தாரோ?

சக்த :—போருக்காகவல்ல, புகலிடமின்றித் திரிந்தேன். அதனால் என்னைக் கூப்பிட்டுக் கொண்டு தங்க இடமும் தக்கமரியாதையும் தந்து தன்னுடன் அமர்த்திக்கொண்டார்.

அமர :—ஆனால் தங்கவும் இடமின்றியா தவித்தீர்கள்? உங்களுக்குச் சொந்தமான உறைவிடம் ஒன்றுமில்லையா?

சக்த :—இல்லையென்றே சொல்லலாம்.

அமர :—ஏனப்படி? என் தந்தையும் நீங்களும் உடன்பிறந்தவர்களாயிற்றே!

சக்த :—ஆமாம். ஆயினும் நான் இளையவன்.

அமர :—அதனாலென்ன? ராஜ்யம் இருவருக்கும் சமமாகக் கிடைக்கவேண்டியதுதானே.

சக்த :—அப்படியல்ல. சாஸ்திர ரீதியாக மூத்தவனுக்குத்தான் ராஜ்யம்.

அமா :—அப்படியுமா ஓர் முறை! நன்றுயில்லையே. ஜ்யேஷ்டன் என்றால் ச்ரேஷ்டன் என்று முடிவு?

சக்த :—அது என்னவோ, சாஸ்திர முடிவு அதுதான். (தனக்குள்) ஆம். நல்ல பிரச்னம் தான் இது. மூத்தவன் என்பதால் உயர்ந்தவன் என்று உறுதி. உண்மையாக எவன் தகுந்தவனோ அவனன்றோ அரசு பெறவேண்டும். தகுந்தவன் தரணியாள்வது என்பது தான் தர்மநெறி. மற்றவை யாவும் அர்த்த மற்ற கட்டுப்பாடே.

அமர :—சித்தப்பா என்ன பேச வில்லை. என்ன யோசிக்கிறீர்கள்?

சக்த :—ஒன்று மில்லை. நேரமாகிறது. போவோம்.

(போகிறார்கள்.)

## காட்சி 3.

(ஆக்ராவில் ராஜகவி பிருத்வீராஜரின் மாளிகை முன்புறம். பாதுஷாவின் ஸபையோர்களான மார்வாட் க்வாலியர் ஆமேர் சாந்தேரியரசர்களும் பிருத்வீராஜரும் பேசிக்கொண்டிருக்கின்றனர்.)

மார்வாட் :—உங்கள் புதிய கவனத்தை மறு முறை கேட்க ஆவலாகயிருக்கிறது. (ஆமேரைப் பார்த்து) அருமையான கவி. கேளுங்கள்.

ஆமேர் :—ஏன் வீணே மண்டையை உடைத்துக் கொள்ள வேண்டும்? சற்று வேடிக்கையாகக் காலத்தை கழிப்போமென்றால் பிராஸசர்ச்சையும், மோனை முறை விசாரமும் ஏன் நமக்கு?

மார்வாட் :—அது தானில்லை. இப்பாக்களைக் கேட்டுப் பார்த்தால் தெரியும். ஆஹா, பெயருக்கேற்ற பாவம்; பாவத்துக்கேற்ற மெட்டு, இவ்வளவு பொருத்தமாக வேறெதுவும் அமைந்ததேயில்லை. சொல் நயம், பொருள் நயம், வன்மை, மிடுக்கு இவ்வளவும் ஒருங்கே சேர்ந்து விளங்கும். இதை கேட்க, ஆஹா! கொடுத்துவைக்க வேண்டும்.

சாந்தேரி :—என்ன பெயர்?

பிருத்வீ :—"பிரேம விகாஸம்"

சாந்தேரி :—ரஸமானதுதான்! சொல்லுங்கள் ஓர் அடி கேட்போம்.

ஆமேர் :—என்ன என்ன! "பிரேம விகாஸமா?" பிரேமையைப்பற்றிக் கவனமும் வேறு?

பிருத்வீ :—கேட்டு விட்டுச் சொல்லுங்கள்.

க்வாலியர் :—ஆமாம், பாதுஷா தர்பாரில் என்னவோ சொல்லிக் கொள்கிறார்களே. என்ன விசேஷமாம் தெரியுமோ?

பிருத்வீ :—விசேஷமென்ன! ஒன்றுமில்லை. ராணா பிரதாபஸிம்மர் யுத்தம் தொடங்கி விட்டாராம்.

க்வாலி :—பாதுஷாவுடனா யுத்தம்? வேடிக்கைதான்!

ஆமேர் :—பைத்தியம்! பாதுஷாவையாவது, எதிர்த்து நிற்பதாவது! கூடுங் காரியமா? முடியுமானால் நாம் செய்திருக்க மாட்டோமா?

சாந்தேரி :—அது தானே நானும் கேட்கிறேன்.

மார்வாட் :—ஆஹா என்ன அழகு! என்ன வனப்பு; "நவவிகஸித குஸுமித, கனபல்லவ" ஆஹா கவியென்றால் தாங்களே கவி! கல்ப கோடிகாலம் வாழவேண்டும்!

க்வாலி :—கேலிக் கூத்துத்தான்! ராணாவாம் ராணா! ஓர் கை அகலம் இல்லை அந்த தேசம், அதற்கு ராணா!

சாந்தேரி :—அதற்குள்ளதே, ஒரு கோட்டை. அதுவும் முகலாயர் வசமாயிற்று!

ஆமேர் :—ராஜ்யமில்லாத ராஜா!

மார்வாட் :—யுத்தமா செய்யப் போகிறாராம்! செய்துதான் பார்க்கட்டும். அவரவர் திறன் புலப்படவேண்டியதுதானே. நடக்கட்டும்.

பிருத்வீ :—திறன் இல்லை. துணிவு தான். திடீரென்று மூன்றிடங்களில் முகலாயப்படைகளைத் தாக்கி, முறியடித்து துரத்தினாராம்.

ஆமேர் :—ஸரிதான்! திமிர் தலைக்கேறிவிட்டது. இனி இரங்கிவிடும்.

சந்தேரி :—நேரமாகிறது. தர்பார் கூடும் வேளை.

மார்வாட் :—ஆனால் போவோமா? (புறப்படுகிறார்கள்.)

ஆமேர் :—நல்ல பைத்தியம்!

சந்தேரி :—அசட்டுத் துணிவு—பட்டால் தெரியும். (பிரதாபஸிம்மரைப் பழித்துக் கொண்டே போகிறார்கள்.)

பிருத்வீ :—மார்வாட்பதிதான் ரஸிகன். சுவை அறிந்தவர். கேட்டுக் கேட்டுப் பரவசமானார்.........வேறு ஒன்று கவனம் செய்ய வேண்டும். சந்தநெறி பிறழாது, கற்போர் மனம் இன்புறும் எளிய நடையில் இயற்ற வேண்டும்......"பிரேமவிச்லேஷம்" என்று தலைப்பிடலாமா?......மெட்டு? காவியத்தின் சிறப்பே சந்தத்தைச் சார்ந்தது. சோக ரஸத்துக்கு ஏற்றது எது?

(ஜோஷீபாய் வருகிறாள்.)

பிருத்வீ :—என்ன இங்கேயே வந்துவிட்டாய்?

ஜோஷீ :—தர்பாருக்கு இன்று செல்லப் போகிறீர்களோ?

பிருத்வீ :—பின்? நான் போகாமலா? ராஜ கவியில்லாத தர்பாரும் உண்டா? அபுல்பாஸலுக்கு அடுத்தபடி பாதுஷாவின் அருளுக்கு நான்தானே இலக்கு. நான் போகமலா இருப்பது?

ஜோஷீ :—(பரிதாபமாக) ஐயோ! இதுவுமா கர்வம்? வெட்கப்படுவதற்கு மாறாக அகங்காரம் கொள்ளுகிறீர்களே! (ஏளனமாக) பாதுஷாவின் தர்பார் கவி! அக்பரின் கிருபா பாத்திரங்களுள் இரண்டாமவராம்! அப்பா! தொலைந்தது கர்மபந்தம்!

பிருத்வீ :—இது கருணாரஸம். நன்றாகவே அபிநயம் செய்தாய். ஆயினும் அக்பரின் மஹிமை தெரியுமோ உனக்கு? ஆஸமுத்ரக்ஷிதீசன் அவர். ஆர்யாவர்த்தம் முழுவதும் தலைவணங்கும் தனிச்செங்கோலன்.

ஜோஷீ :—ஆர்யாவர்த்தம் முழுவதுமா தலைவணங்கி விட்டது? இல்லையே. உவகையுடன் உரைக்கின்றீர்களே; பூரிப்புடன் புகழ்கிறீர்களே; எங்கிருந்தோ வந்து, உங்கள் ஜன்ம பூமியைக் காலிலிட்டு மிதிக்கும் அந்நியன் ஒருவனை அவன் அடி வருடி, அவன் சரணகமலங்களுக்குப் புகழ்மாலை புனைவதே புருஷார்த்தமெனக் கொண்டுவிட்டீர்களே! கொஞ்சமாவது வெறுப்பைக் காணோம்; வெட்கத்தையுங் காணோமே. ஐயோ, இவ்வளவு அழிவா இந்த ஜாதிக்கு? தன் நிலைமையை உணரும் சக்தியையும் இழந்துவிட்டதே! ஆயினும் இன்னும் முழுவதும் நசித்துவிடவில்லை. இருக்கிறார் மஹாராணா பிரதாபஸிம்மர்! உங்கள் பாதுஷாவின் ஸம்மானத்தைத் 'தூ'வெனத் தள்ளும் புண்ணியன்! அடிமை செய்தெய்தும் ராஜபோகங்களை அறவே வெறுக்கும் ஆரியன்! ஆண்மை திகழத் தாயின் மணிக்கொடியைத் தாங்கி நிற்கும் தன்யன்!

பிருத்வீ :—கருத்து உயர்ந்ததுதான். காவிய திருஷ்டியாக இது மாண்பு பொருந்தியதுதான், ஸந்தேகமில்லை. அலையெறியுங் கருங்கடலில் மூழ்கியழியும் கிராமங்களுக்கும் நடுவில் நின்றுயரும் குன்றேபோல்' என்று ஓர் உபமானம் சேர்த்துக்கொள்ளவேண்டும். ஆம், நல்ல உபமானமிது! ஹா...ஹா...ஹா! என் ஜன்மத்திலும் நான் கடலையும் கண்டதில்லை. நடுவே நீளும் குன்றையுங் கண்டதில்லை! இருந்தாலும் உபமானம் எவ்வளவு அழகாக சேர்கிறதுபார்!

ஜோஷி :—அவரன்றோ மஹான்! மாடமாளிகைகளை விட்டுக் குடிசைகளிலே வாழ்கிறார். உலர்ந்த இலைகளையே உண்டு, புல்லணையிலேயே படுக்கிறார், சித்தூரை மீட்கும்வரையில் வறுமையே செம்மையென நோன்பு பூண்டார். இதுவன்றோ பெருவாழ்வு!

பிருத்வீ :—ஆதலால்தான் என் உபமானம் உயர்ந்ததென்கிறேன். நல்ல பொருத்தமாக

வன்றே அமைந்திருக்கிறது. மலைபோலவே இவரும் உயர்ந்து நிற்கிறார். மலைபோலவே இவரும் கடினர். மலைபோலவே தரித்ரமும். பின் என்ன? தாரித்ரியம், காவ்யரீதியில், உயர்ந்ததுதான். ஆனல், நம் வாழ்க்கையில் வரவழைத்துக் கொள்ளவேண்டாம்.

ஜோஷி:—ஏனே?

பிருத்வீ:—ஏன? ஏன் என்று கேட்கிறுளே! வெய்யிலும் குளிருமாய் அல்லல்படமுடியுமா? பசியும் தாகமுமாய்த் தவிப்பதா? விரும்பிய வஸ்துவையும் வாங்க இயலாமல் வருந்துவதா? குழந்தைகள் நம் கண் முன்பே வாடிவதங்குவதைக் கண்டு சகிப்பதா? என் என்கிறுளே!

ஜோஷி:—நாமாகத்தேடி அடையும் தரித்ரமே நமக்கு இன்பம். முடிவேந்தர் மகுடத்தைக் காட்டிலும் மேற்பட்டது, பாதுஷாவின் சாம்ராஜ்யத்தைவிடப் பதின்மடங்கு சிறந்தது......செயற்கைப் பொருள்களாலா நமக்கு மஹத்வம் கைகூடும்? இல்லை. நலிந்தாலும் நற்குணமே பயக்கும். நல்லோர் வறுமையைக் கண்டு அஞ்சார். எதிர் சென்று ஏற்று, தேசும் திறலும் திகழ, மாண்புற மன்னி வாழ்வார். அதுவே வாழ்வு.

பிருத்வீ:—ஆமாம். காவியத்துக்குகந்ததே. அங்கேயே இருக்கட்டும். உலகவாழ்க்கைக்கு இழுத்து விடாதே.

ஜோஷி:—ராஜகுமாரனே உலகத்தைத் துறந்து புத்தரானது என்ன? வெறும் காவியமா, பெருவாழ்வா?

பிருத்வீ:—முழுமுட்டாள்தனம்! வீடுவாயில் இல்லாதவன் துறவறம் பூணட்டும். இருப்பவன் ஏன் விடவேண்டும்?

ஜோஷி:—அதுதான் தியாகம். தியாகமின்றி மேன்மையில்லையே.

பிருத்வீ:—வேண்டாம் அம் மேன்மை நமக்கு வேண்டவே வேண்டாம்.

ஜோஷி:—இல்லாவிடின் தங்களைப் போன்ற ஸௌகியா மேன்மை அடையப் போகிறார்? இல்லை அதற்குரிய போராற்றல் தங்களிடமில்லையென்று முன்பே தெரியும். ஆயினும் இது போராற்றலை நாடுவதல்லவே. துன்புற்றுத் தவிக்கும் நம் தாய் நாட்டைத் தாங்க நிற்க வேண்டியதென்பது ஒவ்வொரு ஆண்மகனும் கைக் கொள்ளவேண்டிய முக்கிய கடமையாயிற்றே. மறுக்கவொண்ணுத தொண்டாயிற்றே! அதுவுமா தங்களால் ஆகாது?

பிருத்வீ:—இதோ பார். இத்தர்க்கவிதர்க்கங்களெல்லாம் பெண்களுக் கழகல்ல. ஸ்த்ரீகள் நியாயவாதிகளாகி விட்டால் புருஷர்கள் வெளியேறவேண்டியதுதான்.

ஜோஷி:—ஆனல் உண்பதும் உறங்குவதும்தான உங்கள் வாழ்க்கையின் உயரிய நோக்கம்? விலங்குகள் வாழ்க்கையது. அது வேண்டாம். தன் நலத்தைத் துறக்கமுடியாதவன் மனிதனல்லனே. தாயின் அவமானத்தைக் கண்டு தரிப்பவன் ஆண்மகனல்லன்.

பிருத்வீ:—ஏது, அதிகரித்து விட்டதே! போதும். போ, உள்ளே.

(ஜோஷி பேசாமல் உள்ளே செல்கிறுள்.)

பிருத்வீ:—அப்பப்பா! என்ன பேச்சுப் பேசுகிறுள். ஸ்த்ரீகளே சுடச் சுடச் சொல்லுவார்கள். ஜோஷியைப்பற்றிக் கேட்பானேன்? கைதேர்ந்தவள். அதற்காகத்தான் பெண்களைப் படிக்க வைக்கக்கூடாதென்று முட்டிக்கொள்கிறேன். யார் கேட்கிறுர்? (போகிறுர்.)

## காட்சி 4.

*சித்தூருக்கருகில் ஓர் காடு; காலை; வாள்வேல் தாங்கிய ராண பிரதாபஸிம்மர் வருகிறுர்.*

பிரதாப:—(சற்று நோக்கிப் பிறகு) அக்பர்! நீர் மேவாரை வென்றீர். ஆயினும் அதை நீர் ஆளமுடியாது. ஆள்பவன் நானே. கிராமங்களும் நகரங்களும் காடுகளாயின. அங்குள்ள ஜனங்கள் என் மலைச் சாரலில் குடி ஏறினர். நானுள்ள வரையிலும், ஓர் செல்லாத காசுகூட உம் பொக்கிஷத்துக்கு வந்து சேரப்போவதில்லை. வர்த்தகத்துக்காக இவ்வழிச் செல்லும் பண்டங்களும் என்னையே அடையும். ஆம், இராஸ்தாக்கள் காடுகளாயின. விளக்கெரிய வீடுகளில்லை. மனிதன் உல்லாஸமாக உலவிய இடங்களில் காட்டுமிருகங்களே வாழ்கின்றன.

தானியம் விளைந்த வயல்களில் காட்டுப் பூண்டுகளே மண்டுகின்றன............மேவார்! என் அருமை அன்னை! வீரர்களை ஈன்ற உனக்கு இக் கோலம்தானா?......என் செய்வேன்? இக் கோலத்தில் தான் உன்னை நான் 'தாயே' என்று மனமார அழைக்கலாம். அம்மா! ஆபரணங்களுக்காகவா கவலை கொள்வாய்? யாவும் ஓர் காலம் வந்தடையும். உன் திருவடியில் நானே ஸமர்ப்பிப்பேன். முடியாவிடில் இம் மயானத்திலேயே தபஸ்வினி என வீற்றிரு. தாயே! முகலாயர்களுக்கு அடிமையாக உன்னைக் காணக் கூசுகிறதே! (தொண்டை உலர்ந்து பேச்சற்று நிற்கிறார். (படைவீரன் ஒருவன் ஆட்டுக்காரனுடன் வருகிறான்.)

படைவீரன் :—(நமஸ்கரித்து) வேந்தே! வெல்க!

ப்ரதாப :—என்ன?

படைவீரன் :—உத்தரவுக்கு மாறாக இவன் ஆடுகள் வளர்க்கிறான் இங்கு.

பிரதாப :—(சீறி) அப்படியா?

ஆட்டுக்காரன் :—ஆம்.

பிரதாப :—என் உத்தரவை அறிந்துமா அப்படிச் செய்கிறாய்? மேவாரில் ஓரிடத்திலும் ஒருவரும் பயிரோ, ஆடுமாடுகளோ வளர்க்கலாகாது, மீறி வளர்த்தால் தூக்குத் தண்டனை என்று பறை சாற்றப்படவில்லையா?

ஆட்டுக்காரன் :—ஆமாம்.

பிரதாப :—பின்?

ஆட்டுக்காரன் :—இக் கோட்டை அதிகாரியின் ஆணைப்படியே நடக்கிறேன். அவரே என்னை ஆடுகள் வளர்க்க நியமித்தார்.

பிரதாப:—ஓ! ஆனால் அவரே வந்து உன்னை மீட்கட்டும். உனக்கு மரண தண்டனை விதித்தேன்.

ஆட்டுக்காரன் :—அவருக்குத் தெரிந்தால் நிச்சயம் வந்து மீட்பார்.

பிரதாப :—அவருக்கு நானே சொல்லியனுப்புகிறேன். (படை வீரனைப் பார்த்து) இவனை விலங்கிட்டு வைத்துக்கொள். இன்று முதல் ஏழாவது நாளில் இவனைத் தூக்கிவிடு. துண்டித்த சிரத்தை அக்கோட்டைக்கு எதிரில் உயர்த்தி நட்டுவைத்து விடு. கண்டு யாவரும் என் ஆணையின் தன்மையை உணரட்டும். மேவாரை ஆள்பவன் நானே என்று தெரியட்டும், போ.

(இருவரும் போகிறார்கள்.)

பிரதாப :—பாவம், ஏழை! எங்களிருவக்கும் நடுவில் பட்டு வீணே இறக்கிறான். என்ன செய்வது! ஆம். துரியோதனுடைய பாபத்தால் பீஷ்மத்துரோணர்களே இறக்கவில்லையா? ராஜ நீதியே இவ்வாறு கடுமைதான். தாயே! உன் பொருட்டே இவ்வளவு கொடியனானேன். உன் ஸர்வாபரணங்களையும் கழற்றி வைத்தேன். என் அன்பின் அரசியைக் குடிசையில் அமர்த்தினேன். செல்வப்புதல்வர்களை சீரின்றி வாழவிட்டேன். நானும் துறவறம் பூண்டேன்.

(வாள்வேல்களுடன் சக்தஸிம்மர் வருகிறார்.)

பிரதாப :—பார்த்தாயா?

சக்த :—பார்த்தேன்.

பிரதாப :—என்ன?

சக்த :—அங்கு ஒருவருமில்லை.

பிரதாப :—ஒருவருமா இல்லை? ஏன்?

சக்த :—ஏன் என்றால்? யாராவது இருந்தால்தானே கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

பிரதாப :—கோவில் பிராம்மணர் கூடவா இல்லை? முகலாயப்படை ஒன்று வந்து கொண்டிருப்பதாகச் செய்தி அனுப்பினாரே!

சக்த :—அங்கு ஒருவரையுங் காணோம்.

பிரதாப :—ஆனால் நாம் வந்தது வீண் தானே.

சக்த :—வீண் என்ன? காடு கொள்ளாமல் துஷ்டமிருகங்கள் சுற்றித்திரிகின்றன. வேட்டையாடிவிட்டுச் செல்வோம்.

பிரதாப :—மிருக வேட்டைக்காகவா வந்தோம்?

சக்த :—வேறு என்ன செய்வது? இக் காட்டின் கோரசோபைக்கு ரக்த பிரவாஹம் ஒன்றுதான் குறை. அக்குறையை நிவிர்த்திக்க மனிதரத்தம் அகப்படவில்லை யாதலால், மிருக ரத்தம் அகப்படுகிறது ஓடவிடுவோம்.

பிரதாப :—வீணுகக் கொலை புரிவதா? பயனின்றி ரக்தப் பிரவாஹமேன்?

சக்த :—அப்படியல்லவே, குறிப்பயிற்சியும் ஆகவேண்டியதுதானே! நம்மில் யார் தேர்ந்தவர் என்றும் தெரிந்து கொள்ளலாம்.

பிரதாப :—அவ்வளவுதானே நீ விரும்புவது? ஸரி, வா.

சக்த :—ஆம். (தனக்குள்) பார்த்து விடுவோம். எந்த விசேஷ தேர்ச்சியை யடைந்து நீர் ராணுவாக வீற்றிருக்கிறீர். நான் உம் கருணைக்கு இலக்காகி நீர் அருளும் பிச்சையை உண்டு உயிர் வாழ்வேண்டும். தெரிந்து கொள்வோம்.

பிரதாப :—வா, வேட்டைக்கு வேட்டையுமாயிற்று. அப்யாஸமும் ஆயிற்று. (இருவரும் போகிருர்கள்.)

(அதே காடு. வேறு இடம். ஓர் புலி அடிபட்டு வீழ்ந்திருக்கிறது. சக்தஸிம்மரும் பிரதாபஸிம்மரும் தங்கள் ஈட்டிக் காயத்தைக் காணப் புலியைப் பரிசோதிக்கிருர்கள்.)

பிரதாப :—இதைக் கொன்றது நானே.

சக்த :—இல்லை, நான் தான்.

பிரதாப :—இதோ! இது என் ஈட்டியல்லவா?

சக்த :—ஆயினும் என் ஈட்டி தைத்துத் தானே புலி சாய்ந்தது.

பிரதாப :—ஆனல் போ. வேறு ஒன்றில் பார்ப்போம். அதோ, காட்டுப்பன்றி. எறிவோமா?

சக்த :—ஸமதூரத்தில் நின்று.

(அதே காடு. வேறு இடம். சக்தஸிம்மரும் பிரதாபஸிம்மரும்.)

சக்தஸிம்மர் :—ஓடி விட்டதே!

பிரதாப :—ஒருவர் ஈட்டியும் படவில்லை!

சக்த .—ஆமாம். என்ன செய்யலாம்?

பிரதாப :—போகட்டும். ஒன்றும் தீர்மானமாகாது. நேரமாகிறது, வேறு ஓர் சமயம் தான் பார்க்கவேண்டும். போவோம் வா.

சக்த :—ஏனப்படி? வேண்டாம். இன்றே இதை முடித்துக் கொள்வோம்.

பிரதாப :—எப்படி முடிப்பது? முயன்று தான் பார்த்தோம். ஒன்றும் தீர்மானமாக வில்லையே.

சக்த :—நாம் ஒருவர்மீது ஒருவர் வீசிக் கொள்வோம் வாருங்கள்.

பிரதாப :—சே, அப்படியுமா செய்வார்கள்?

சக்த :—என்? ஏன் கூடாது? என்ன தவறு அதில்?

பிரதாப :—கூடவே கூடாது. பயனற்ற எதுவும் செய்வது தவறே.

சக்த :—பயனில்லை, சேதமும் இல்லையல்லவா? இரண்டு துளிகள் இரத்தம் சிந்தினல் தான் என்ன மோசம் வந்து விடும்? நாமோ கவசம் அணிந்து கொண்டிருக்கிறோம். இறந்துவிடப் போவதில்லை. பின் ஏன் அஞ்சுகிறீர்?

பிரதாப .—அஞ்சுகிறவன் நானே?

சக்த :—பின் எடுத்துக் கொள்ளுங்கள் ஈட்டியை. மனித ரத்தத்தை தேடிப் புறப்பட்டோம். நம் ரத்தமே கிடைக்கிறது. சரி, எறியுங்கள் என் மீது. எறியுங்கள். ஏன் நிற்கிறீர்கள்? (ஆக்ரஹமாக) எறியுங்கள்!

பிரதாத :—நீயே முதலில் எறி என்மீது.

சக்த :—சேர்ந்தே எறிந்து கொள்வோம். இதோ!

(கத்தியைக் கீழே வைத்துவிட்டு நேர் எதிராக நின்று குறிபார்க்கிருர்கள். எறியும் தருணம் குலபுரோஹிதர் ஓடி வந்து குறுக்கிடுகிருர்.)

புரோஹிதர் :—இப்படியுமா உண்டு? அண்ணன் தம்பிகளா வெட்டி மடியவேண்டும்? போதும், நிறுத்துங்கள்.

சக்த :—விலகி நில்லும். நீர் ஏன் நடுவில் வரவேண்டும்? விலகி நில்லும்; இல்லாவிட்டால் சேர்ந்தே இறப்பீர்.

புரோஹிதர் :—இறக்கப் பயந்து விடவில்லை நீங்கள் சற்றுச் சாந்தமடைந்தால் சொல்லலாம். சற்று நிதானியுங்கள்.

சக்த:—சாந்தமா? நரரத்தத்துக்காகப் புறப்பட்டோம், அதை அடைந்தால்தான்.

புரோஹிதர் :—நரரத்தமா வேண்டும் உமக்கு? இதோ தருகிறேன்.

(தரையில் கிடந்த சக்தஸிம்மர் வாளை எடுத்துத் தன் மார்பில் ஆழமாகக் குத்திக்கொண்டு கீழே விழுகிறார்.)

பிரதாப :—(ஓடிவந்து) ஐயய்யோ! என்ன செய்து விட்டீர்!

புரோஹிதர் :—ஒன்றுமில்லை. இதனாலாவது நீங்கள் சாந்தமடையுங்கள். போதும் சண்டை. ஸஹோதரர் சண்டைகளால் நமது தேசம் பட்டது போதாதா? இனியாவது ஒத்து வாழுங்கள். (இறக்கிறார்.)

பிரதாப :—சக்தா! பார்த்தாயா? என்ன செய்து விட்டாய் நீ?

சக்த :—(பயந்து) நான் தான் கொன்றதா?

பிரதாப :—உன்னாலே விளைந்தது இப்பிரம்மஹத்தி. உன் தேசம் உன்னாலேயே அழியும் என்று உன் ஜாதகத்தில் கண்டிருக்கிறது. இதுவரையில் நம்ப மறுத்தேன். இப்பொழுது தான் தெரிகிறது. முற்றிலும் உண்மையே அது.

சக்த :—ஐயோ! பிரம்மஹத்தியாயிற்றே! நானே செய்தேனே!

பிரதாப :—தங்க இடம் இன்றித் தவித்தாய். அன்புடன் அழைத்து ஆச்ரயம் அளித்தேன். ஆதரவுடன் மேவாரிலேயே அமர்த்தினேன். மேவாரையே நீ நாசம் செய்யப் போகிறாய். ஆம், நீ நிச்சயம் செய்யத்தான் போகிறாய்!......வேண்டாம். நீ இனி இங்கு இருக்கக்கூடாது. உன்னை தேசப்பிரஷ்டம் செய்து விட்டேன். போ.

சக்த :—ஆனால் சரி. அப்படியே!

பிரதாப :—போ!......தகனக்கிரியைகளை தக்கவாறு செய்து முடிக்கவேண்டும். இப்பாதகத்துக்கு என்ன பிராயச்சித்தம் விதித்திருக்கிறார்களோ! ஈமக்கடன்களை செவ்வனே செய்ய வேண்டும்.

(இருவரும் வெவ்வேறு புறமாகப் போகிறார்கள்.)

(தொடரும்.)

# 'காபிகி ஜே!'

"விசாலி ராஜம்."

[நாடக பாத்திரங்கள்.]

வேங்குவய்யர் ...
சாம்பசிவசாஸ்திரிகள்... வெங்குவய்யரின் சிநேகிதர்.
கோபாலன் .... வெங்குவய்யரின் பிள்ளை.
சீதா ... வெங்குவய்யரின் மனைவி.

*வெங்குவய்யர், சாம்பசிவசாஸ்திரி.*

வெங்கு :—வாங்கோ! வாங்கோ! ஏது ரொம்ப நாளாச்சே! எங்கே ஊரிலில்லையா என்ன?

சாம் :—ஆமாண்டாப்பா! கிராமத்துக்குப் போயிருந்தேன். தைமாசம் வந்துடுத்தோன்னோ? அறுவடை ஆயிண்டிருக்கு. பிள்ளை யாண்டான் ஒண்ணும் சரியாய்க் கவனிக்கிறதே யில்லை. பாத்துட்டு வரலாம்னு போயிருந்தேன் 5, 6 நாளாய்த் தூக்கம்கூடச் சரியாயில்லே.

வெங் :—அதான் உடம்புகூட ரொம்ப இளைச்சுப் போயிருக்கு. கொஞ்சம் காப்பி சாப்பிடுங்கோ. யாரடி அங்கே சீதா? (கூப்பிடுகிறார்; கோபாலன் வருகிறான்.) அடே பயலே கோபு! மாமாவுக்குக் காப்பி வாங்கிண்டு வாடா அம்மாட்டச் சொல்லி. (கோபாலன் போகிறான்.)

சாம் :—நீ காப்பின்னதும் ஞாபகம் வரது. ஏதோ இன்னமே காப்பி குடிக்கப்படாதுன்னு சட்டம் வரப் போரதாமே. பேப்பர்லெல்லாம் போட்டிருக்குன்னு பேசிக்கிண்டா கிராமத்திலேகூட.

வெங் :—ஆமாம்! ஆமாம்! Coffee Prohibition Bill ஒண்ணு கொண்டு வந்திருக்கா. அது Pass ஆய், Act ஆயிடுத்துன்னு, இன்னமே காப்பி குடிப்பதே சட்ட விரோதமாகும்.

சாம் :—அப்படின்னு என்ன பண்ணுவா?

(கோபாலன் பிரவேசிக்கிறான்).

கோ :—அப்பா! அப்பா. காப்பி போடரத்துக்குப் பாலில்லையாம். பால்காரன் வந்தா விட்டுப் போட்டுக் கொடுக்கிறேன்னு அம்மா.

சாம் :—என்னத்துக்கு இவ்வளவு சிரமம்? எனக்குக் காப்பி வேண்டாம்னு—இப்போ தான் சாப்பிட்டுட்டு வந்தேன் ஆபிஸிலே.

வெங் :—நன்னாருக்கு— காப்பிக்கென்ன— எத்தனை தரம் சாப்பிட்டா—என்ன அது ஒன்னும் பண்ணாது.

கோபு :—அப்படின்னு, இப்போ மந்திரிகளெல்லாம் காப்பிக்குடி விலக்குச்சட்டம் கொண்டு வருவானேன். காப்பிக்குடி உடம்புக் கெடுதல்னு, நாங்கள் எல்லாம் குடிக்கப்படாதுன்னு, எங்க வாத்தியார்கூட நேத்திக்கிச் சொன்னாரே! ஆனால் அப்பா, அவர் மாத்திரம் வீட்டிலேயும் சாப்பிட்டுட்டு, பள்ளிக்கூடத்திலே ஓய்வு நேரத்திலெல்லாம், எதித்தாப்பலே இருக்கற காப்பிக்கிளப்பிலே போய் காப்பி சாப்பிட்டுட்டு வந்துட்டார். அப்பா— மந்திரிகள் எல்லாரும் சொல்றா இன்னுட்டுத் தானும் கூடச் சேர்ந்துக்கிறார். நம்ப ஊரே இப்படி அநியாயமாயப் போச்சு அப்பா. ஒத்தர் சொன்னாக்கே எல்லோரும் கூடக் கத்தறது.

சாம் :—காப்பிக் குடிக்கிறது சட்டத்துக்கு விரோதமுன்னு குடிக்கிறவாளை என்ன பண்ணுவா?

வெ :—ஏன்! தண்டிப்பா. அபராதம் போடுவா—ஜெயிலுக்கு அனுப்பிடுவா.

சாம் :—காப்பி குடிக்கிறது என்னமோ கெடுதல்தான். இருந்தாலும் சட்டத்துக்குள் படுத்துவது, எனக்கென்னமோ பிடிக்கலே. கெடுதலிருந்தாலும் நல்ல குணங்களும் இருக்கே? களைச்சுப்போயிருக்கிறபோது உடம்புக்குத் தெம்பு கொடுக்கிறது.

வெ :—அதெல்லாம் யார் கேக்கறது? அதுவும் நம்ப பிரதம மந்திரி யிருக்காரே—பிடிச்

சார்ஞ ஒரே பிடிதான். அவருக்கு ஏதாவ தொண்ணு தப்புன்னு தோணிப்புடுத்துனு, அதை ஒழிச்சுப்புட்டுத்தான் தூங்குவார். எத்தனையோ டாக்டர்களுடைய அபிப்பிராயங்களை யெல்லாம் சேத்து வச்சிண்டிருக்காராம். காப்பிக் குடியினுல் வரும் தீமைகளையெல்லாம் Catalogue பண்ணி, ஒண்ணு ரெண்டுன்னு நம்பர்ஞ போட்டு வச்சுண்டிருக்காராம்!

கோபு :—அதெல்லாம் தெரியுமா மாமா, ஏன் இந்தக் காப்பி குடிக்கிறது கெடுதல்னு சொல்ரா?

சாம் :—ஏன்?

கோ :—காப்பிக்குடி நின்னு போச்சுன்னு பாலுக்குச் செலவில்லே. வெறும் பாலாய்க் குடிக்கணும். வயத்துக்குப் போரதில்லேன்னு நிறையக் குடிச்சுடுவா. அஜீர்ணம் பிடுங்கிக்கும். வேட்டைதானே அப்புறம் டாக்டர்களுக்கெல்லாம். (சீதா காப்பிக்கூஜாவுடன் பிரவேசிக்கிருள்.)

சீதா :—அடே கோபு! இந்தா காப்பியைக் கொண்டுபோய்க் கொடு. (வெங்குவய்யரும் சாஸ்திரிகளும் காப்பி அருந்துகிருர்கள்; குடிகாரன் பிரவேசிக்கிருன்.)

குடிகாரன் :—எஷமான் இருக்காரா? ஏ! எஷமான்—ஏவ்! (ஏப்பம் விடுகிருன்.)

சாம்:—ஐயையோ! இது யாரோ கள்ளைக் குடிச்சுப்பிட்டு வீட்டுக்குள்ளே நுழைஞ்சுட்டானே. சீ! நாத்தம் நாறது.

கோபு :—யாருமில்லே மாமா—இவன் எங்காத்து வண்டிக்காரன்.

குடி :—எடே! யாரடா அவன் தொந்திப் பாப்பான்! யாரடா குடிச்சான்? கள்ளுல்லே காப்பி மாத்திரம் குடிக்கலாமா? காப்பி சாப்பிட்டாத்தான் உனக்கு வேலே ஓடாது. கள்ளுத்தண்ணி ஊத்தினுல்தான் நமக்குத் தெம்பு வந்து உச்சாகம் பிறக்குது. கள்ளை ஒழிக்க வந்துட்டாங்க! முதல்லே இந்தக் காப்பியை ஒழிச்சுப்பிடரேன் பாரடா!

வெ :—அடே, என்னடா வீட்டுக்குள்ளே வந்து தாறுமாருய் உளர்ரே! போ வெளியே.

குடி :—போரேன்! எஷமான்! போரேன். போயி மந்திரி மவராசாகிட்ட சொல்லிப் போடரேன். நீங்களெல்லாரும் திருட்டுத்தனமா காப்பிக் குடிக்கிறீங்கன்னு. (பாடுகிருன்.)

கள்ளுக்கு மிஞ்சி வந்த பொருளேது
துள்ளிக்குதிக்கப்பண்ணும் பானமது
காப்பி, டீ, கொள்ளும் நீங்கள்.
சாதுர்யமாய்ப்பேசுதல்—நன்ருே
நீங்கள் குடியரன்ருே! (போகிருன்.)

சாம் :—அவனென்னமோ குடிவெறியில் உளறினுலும் சொல்வதென்னமோ உண்மைதான். நான் வரேண்டாப்பா. (போகிருர்.)

(சீதா பிரவேசிக்கிருள்.)

சீதா :—சவரணைங்ரது உங்களுக் கொஞ்சம் கூடக் கிடையாது. எத்தனை தரம் சொல்லித் தொலேக்கிறது. வேலேயில்லே கிலேயில்லே! யாரையாவது கூப்பிட்டு வச்சுக்கிண்டு அரட்டை அடிக்கிறது. உள்ளேருந்து காப்பி கொண்டு வரச் சொல்லிப்பிடாது. எந்தக் குசத்தி வந்து போட்டுக் கொண்டிருப்பாளோ?

வெ :—என்னடி! சாஸ்திரிகள் வந்து ரொம்ப நாளாச்சு என்று கொஞ்சம் காப்பி கொண்டு வாச்சொன்ஞ சள்புள்ளென்னு இரையரெயே? காப்பில்லேன்னு அழுதுப்பிட்ரதுதானே!

சீதா :—ரொம்ப வக்கணைதான் பேச்சு. ஊரிலெல்லாம் நீங்கள் நல்லவான்னு பேர் எடுக்கணும். நாமாத்திரம் கெட்டவளாக்கும். எனக்கென்ன வந்தது. இதோ பாருங்கோ! வீட்டிலே காப்பிக்கொட்டையும் சர்க்கரையும் ஆயிப்போயிடுத்து. வாங்கிக்கொண்டு வந்து வச்சுப்புட்டு மறு காரியம் பாருங்கோ! இல்லாட்டா நாளைக் காலே காப்பி கிடையாது.

கோ :—அப்பா Coffce Prohibition Act ஐ நாளைக்கே நம்மாத்திலே forceக்குக் கொண்டு வந்துட்டா அம்மா.

சீதா :—சும்மா இருடா—நானுந்தான் கேக்கரேன். இந்த பாழுங் காப்பியை என்னத்துக் குடிக்கனும்னு. காப்பி குடிச்சுக் குடிச்சு உடம்பு கெட்டாச்சு. சாத்தீர்த்தத்திலே

இருக்கிற சத்தும் உற்சாகமும் இதற்குண்டா? நீங்க புருஷாளெல்லாம் இப்படித்தான். ஒரே கட்டுப்பாடாய் நிறுத்தணும்னு, காப்பியை ஒழிக்க முடியாதா வென்ன?

வே :—சரி! சரி! நான் வெளியே போகணும். போயிட்டு வந்து உன் லெக்சரைக் கேக்கரேன். (போகிறார்.)

சீதா :—இது ஒண்ணுதாந் தெரியும். (காப்பிக் கூஜாவைப் பார்க்கிறாள்.) கூஜாவை உள்ளே யெடுத்துண்டு போவோம். ஐயோ எழவே! இவ்வளவு காப்பியையும் மிச்சம் வச்சுட்டுப் போயிருக்காரே. பண்டத்தைப் போட்டுப் பாழாக்கத்தான் தெரியும். நாலுவது கொஞ்சம் குடிச்சு வைக்கிறேன். வெளியிலே போனவர் எப்ப வாரரோ? சோத்துக்கடை இன்னிக்கு எத்தனை மணிக்கோ? அதுவரைக்கும் யார் பட்டினி கிடக்கிறது. காப்பியைக் குடிச்சு வைச்சாக்கக் கொஞ்சமானும் வேலை செய்றதுக்கு முடியும். காலு கையெல்லாம் ஒஞ்சு போச்சு. (கூஜாவை எடுத்துப் போகிறாள்.)

கோபு :—(மேஜைமேல் இருக்கும் காப்பி டம்ளரைப் பார்த்துவிட்டு) அடேடே! அம்மா மறந்து வைச்சுட்டுப் போயுட்டா! பலே பேஷ்! நமக்கு ஜோர்! மூணாவது டோஸ் காப்பி, நமக்கு இன்னிக்கு. நரி முகத்திலே முழிச்சோண்டா. Cofteeக்கு ஜேய்!

# இராயர் சீமை கனவு—ஓர் கற்பனை.

"ராஜம்"

பகற் போஜனத்திற் கடுத்த அரை மணி நேரம் நித்திராதேவிக்கு உரியதென்றும், அவ்வேளையில் கவனத்துடன் புத்தகங்களைப் படிக்க முயலுவது வீணேயாகுமென்பதும், நான் நன்றாய் அறிந்தவனே. அப்படியிருக்க, சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து, பிரபல ஆங்கிலக் கவியான டென்னிஸனுடைய (Tennyson) செய்யுள் புத்தகத்தை, மடியில் வைத்திருந்ததின் காரணம், அதனட்டையிலுள்ள சித்திரங்களைத் தனக்குக் காட்டவேண்டுமென்று என் குழந்தை தொந்தரவு பண்ணியதேயாகும். அவனைத்திருப்தி செய்தபிறகு, சோம்பேறித்தனமாக, பக்கங்களைத் திருப்பிக்கொண்டிருந்தேன். "எழில் மாதர் கனவு" (A Dream of Fair Women) என்னும் செய்யுள் என் கண்ணில் பட்டது. பத்துப் பன்னிரண்டு வரிகள்கூடப் படித்திருக்கமாட்டேன். அதற்குள் உண்ட மயக்கத்தில் ஆழ்ந்து கண்ணயர்ந்தேன்.

*　　*　　*　　*

அடர்ந்த இருண்ட காடு! வானளவு தாவி நின்ற மரங்கள் சூரியவெளிச்சமே படவொட்டாமல் கண்ணிற்குக் குளிர்ச்சியாய் நின்றன. நாலாபக்கமும் ஒரே பச்சையாய்ச் செழித்து வளர்ந்திருந்த செடி கொடிகள் நீர் வளமும் நில வளமும் அபரிமிதமாய்ப் பொருந்திய பிரதேசமது, எனக்குறித்தன. இந்த அந்தகாரத்தில் திடீரென்று ஒரு ஜோதி பிரகாசிக்க அதைப் பார்க்கத் திரும்பினேன். எழிலும் காந்தியும் ஒருங்கே கூடிய ஓர் அழகிய பெண் மணி அங்கே நிற்பதைக் கண்டேன். அவளே இப்பிரகாசத்திற்குக் காரணம். அழகுமிக்க அவள் வதனம் துக்கக் குறியுடனிருந்தது.

"நான்தான் அந்த அபாக்கியவதி சீதை! ஸ்ரீராமபிரானின் ஏகபத்தினி. அவர் வனவாசம் சென்ற பொழுது, அவருடனும் இணைபிரியாத அவர் தம்பி இலக்குமணனுடனும், துணிந்து சென்றவள். மனதார இராஜ போகங்களைத் துச்சமாய் எண்ணி வந்துவிட்ட அவருடன், வனவாசம் எனக்குச் சுவர்க்கவாஸம் போலுமிருந்தது. என்ன செழிப்பான பிரதேசம்! எங்களுக்கு வேண்டிய பழவர்க்கங்கள், இன்னும் பல வகை ஆகாரப் பொருள்கள் எல்லாம் வேண்டியமட்டும் கிடைத்தன. எங்கள் வாழ்க்கை எவ்வளவு குதூஹலமாயிருந்தது. அப்படியிருக்கும் ஒரு நாளில் அந்தப் பாழும் பொன்மானும் வந்தது. ஐயோ பெண் புத்தி பின் புத்தி என்றபடி, அம்மானையடைய நான் கொண்ட மூட ஆசையினால், என் பெருமானை அதன் பின் துரத்தியனுப்பினேன். அதுவே யேற்பட்டது, என் கெடுதிக்கெல்லாம் காரணமாய்!"

"சீ! சீ! வாயை மூடு! பொன்மானல்ல, உன்னை இராவணன் அபஹரித்தற்குக் காரணம் நானே! வலிய வந்த என்னை உதறித் தள்ளின உன் மைத்துனன் இலக்குமணன் இறுமாப்பும், உன் பதியான இராமன் மேல் நான் கொண்டிருந்த ஆசைக்கும் நேர்ந்த பங்கமுமே, நீ துன்பத்திற்குட்படக் காரணங்கள்"—என்று இன்னொரு குரல் கேட்டது.

கேட்ட குரலும் பெண் குரலே. ஆனால் சிறிது காடு முரடாயிருந்தது. யாராயிருக்குமென்று குரல் வந்த பக்கம் திரும்பினேன். அப்பப்பா! என்ன கோரம்! நல்ல இலக்ஷணமமைந்த மங்கைதான். ஆனால் இதென்ன மூக்கையே காணோமே! அதற்குப் பதிலாக முகத்தில் நாசி யிருக்க வேண்டிய இடத்தில், பார்ப்போரைப் பரிஹஸிப்பதுபோன்ற ஒரு துவாரம். ஓ! இவள் சூர்ப்பநகையல்லவா! இவ்விகாரத்தை எந்நேரம் சகிப்பதென்று கண்ணை மூடினேன்.

கொஞ்சநேரத்திலெல்லாம் ஓர் அழுகைக் குரல் கேட்கக் கண்களைத்திறந்தேன். சீதையும் சூர்ப்பநகையும் இல்லை. மறைந்து விட்டார்கள். அவர்களிருந்த இடத்தில் மற்றுமோர் ஸ்திரீ—அவளும் வனப்பு மிக்கவளே! தலைவிரி கோலமாய்த் தனக்குள்ளேயே பேசுவதுபோலப் பிரலாபித்துக் கொண்டிருந்தாள்.

"ஹே இராமா! எல்லோரும் உன்னை ஸத்தியஸந்தரென்றும், தர்மவானென்றும், தயாள

குணமுள்ளவரென்றும் போற்றுகிறார்களே! ஐயோ! உன் நியாயமும் தர்மமுமெங்கே போயின; என் நாதராகிய வாலியை அதர்மமாகக் கொல்ல முன்வந்தபோது! ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் போதுமே அவரிடத்தில்! அப்பாதகன் இராவணனைப் பிடித்துவந்து உமது காலில் விழச்செய்திருப்பாரே! நானும் இழந்தேன் என் அரிய பிராணநாதனை! இக்கிஷ்கிந்தையும்—பாரததேசத்திலேயே பாலும் தேனும் பாய்ந்தோடும் இக்கிஷ்கிந்தையும்—தன் நாதனை இழந்து வறுமைப்பட்டு வாடுகின்றது.”

கொஞ்சம் கொஞ்சமாய் அவள் பேசும் தொனி குறைந்து கொண்டே வந்தது. அதற்குள் காற்றினால் அசையும் இலைகளின் ஒலி, அதிகரித்துக்கொண்டே வந்து, பிரம்மாண்டமான சப்தத்துடன் அவள் பேச்சைக் கேட்க முடியாமல் அடக்கிவிட்டது. திடீரென்று மரக்கிளைகளினின்று, என் கண்முன் ஹநுமார் குதித்தார். திரண்டு பருத்த புஜங்களுடனும், ஆஜானுபாகுவாய், புன்னகையுடன் எனக்குத் தரிசனம் அளித்ததும் நான் பயத்தைவிட்டுச் சிறிது உற்சாகங் கொண்டேன்.

“ஸ்ரீராமருக்கு மங்களம்—எம்பெருமான் ஸ்ரீ இராமச்சந்திரமூர்த்திக்கு ஜயமங்களம்! என் சொந்த நாடாகிய கிஷ்கிந்தைக்கும் மங்களம்—“கனியும் கிழங்கும் காய்கறிகளும் கணக்கின்றித்தரும்” இப்புண்ணிய பூமி கிஷ்கிந்தைக்கு மங்களம். கிஷ்கிந்தையில் ஜனிக்கும் பாக்கியம் பெற்றவரெல்லோரும், புஜபலபராக்கிரமமுடையவராய், மனோதிடத்துடன் வாழும் மனிதர்களாயிருக்கட்டும். பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரும், பல்லாயிர வருடங்களுக்குப்பின்னரும், ‘ஹனுமந்த’ என்று என்னைப் போற்றிப் பணி செய்து, என் மூலம், எம்பெருமான் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியின் கருணைக்குப் பாத்திரர்களாவார்களாக.”

இவ்வளவும் சொல்லி, கிஷ்கிந்தைப் பிரஜைகளுக்கு எவ்வளவு வலிமை யுண்டென்று எனக்கு நிதர்சனமாய்க்காட்டப் பெருத்திருந்த ஒரு மரக்கிளையை அனாயாசமாய் வளைத்தார். படார்—மரக்கிளை இரண்டு துண்டாய் ஒடிந்தது. ஹனுமாரும் மறைந்தார்—

நான் இப்பொழுதிருந்தது, கோடிசூரியப் பிரகாசமுள்ள ஒரு மண்டபத்தில் பளிங்குக் கற்களால் செய்யப்பட்ட வழுவழுப்பான பெரிய தூண்கள். நவரத்தினங்களிழைத்த கூடங்கள். அதோ அலங்காரங்களால் ஜ்வலித்துக்கொண்டிருப்பதுதான் சிங்காதனம். ஓஹோ! விஜயநகர இராஜ்யத்தின் அதிபதி, கிருஷ்ணதேவராயரல்லவா அவர்! உலகிலே ஸம்பத்திலும், நாகரிகத்திலும் முதன்மை பெற்ற விஜயநகர இராஜ்யத்தின் அதிபதியான இராயர், தம் அந்தஸ்துக்கேற்ப சர்வாலங்கார பூஷிதராய், மேனியில் விலையுயர்ந்த ஆபரணங்கள் பிரகாசிக்க, கொலுவீற்றிருக்கிறார். சுற்றிலும் மந்திரிகளும், சமஸ்தானப் பிரபுக்களும். அவர்களில் ஒருவர், கைகால்களை ஆட்டிக் கொண்டு வெகு மும்முரமாயும் தீவிரமாயும் ஏதோ வாதித்துக் கொண்டிருந்தார். அவர் அவர் பேசுவது சரியாகக் காதில் விழாமையால் சற்று அருகில் செல்ல ஆரம்பித்தேன். அதற்குள் வெளியிலிருந்து ஓரே கூக்குரல். “ஆயுதங்களை எடுத்து ஆயத்தமாகுங்கள். துருக்கன் படையெடுத்துக் கோட்டை வாயிலில் வந்துவிட்டான்” என்று பலத்த சப்தம் கேட்டது. அவ்வளவுதான். கொலு மண்டபம் உடனே அலங்கோலமாய் விட்டது. கொலுவைக் கலைத்து விட்டு உருவின கத்தியுடன் அரசர் சிம்மாதனத்தினின்றிறங்கி வெளியே வேகமாய் ஓடினர். சபையிலிருந்தவர்களனைவரும், அதே மாதிரி யுத்தசன்னத்தராகி அரசனைப் பின் தொடர்ந்தார்கள்.

* * * *

தலைக்கோட்டைக் கோரயுத்தம் முடிந்த பின்னர் பாழடைந்த விஜயநகரத்தின் இடிந்துபோன கோட்டை மதில்களுக்கு வெளியே, அழகு மிகுந்த ஓர் யுவதி அங்குமிங்கும் ஏதோ தேடிக்கொண்டிருக்கிறாள். சாதாரண உடை யணிந்திருந்தும், அவள் வனப்பு கண்ணைக் கவர்ந்தது. கண்களினின்றும் தாரை தாரையாகக் கண்ணீர் வடிந்துகொண்டிருந்தது அவள் வனப்புக்கு இன்னும் கொஞ்சம் சோபையை அளித்தது. கம்பீரமான துக்கம் கலந்த குரலில் பின்வருமாறு பேசலானாள் :—

“என் பெயர் பிரிதிலை; நான் ஓர் உழவன் மகள். என் பிராணநாதர் இக்கோர யுத்தத்

தில் மாண்டார். அவர் புனித உடலை இப் பிணக்குவியல்களுள் தேடியலைகின்றேன். ஐயோ! ஏன் இப்படி இந்துக்களும் மகம்மதியர்களும் சதா சண்டை சச்சரவு செய்துகொண்டிருக்கவேண்டும்? ஓரே தாயின் வயிற்றில் பிறந்தவர்கள்! சகோதரத்துவத்துடன் வாழ்ந்து, தங்கள் தாய் நாட்டின் ஸம்பத்தையும் பொருளாதார நிலைமையையும் உயர்த்துவது தான் தங்கள் கடமையென்று, என்றுதான் அவர்கள் புத்தியில் படுமோ?"

*    *    *    *

தூரத்தில் இடி இடிப்பதுபோல் ஒரு சப்தம்! ஒரு கூட்டமும் என் கண்ணில் பட்டது. ஏதோ சேனைதான் வருகிறது போலுமென்று நான் திரும்பி ஓட யத்தனித்தேன். இதென்ன இது! இப்புறமும் ஓர் கூட்டம். இரண்டு சேனைகளுக்கும் நடுவே அகப்பட்டுக்கொண்டு போக வழி தெரியாது திகைத்து நின்றேன். கொஞ்சம் கொஞ்சமாய் இரண்டு கூட்டங்களும் என்னை அணுகின. ஆஹா என்ன ஆச்சரியம்! வந்தவை சேனைத்திரள்களல்ல. உடம்பு எலும்புகளெல்லாம் முன்னேறி நிற்க, பஞ்சத்திலடிபட்டு, மெலிந்து வாடி வதங்கின ஸ்திரீ புருஷர்களே. அவர்கள் ஒரு கல் உருளையை இழுக்கவும் முடியாமல் தள்ளிக்கொண்டிருந்தார்கள். உண்மையில், நான் என் கனவில் நான்கு நூற்றாண்டுகளை ஒரே அடியாய்த் தாண்டி விட்டேன். என் கண்முன் தென்பட்ட காட்சி, இக்காலத்தில் பஞ்சநிவாரணத்திற்காகப் பெல்லாரி கடப்பை ஜில்லாக்களில் சர்க்காரால் ஏற்படுத்தப்பட்ட ஒரு நிகழ்ச்சியே. ஐயோ! திண்தோள் வாலியும், அதிபலவானை ஹனுமாரும், உலகெங்கும் புகழ்பரவிய விஜயநகர் மன்னர்களும் வாழ்ந்து புகழ்பெற்ற இத்தேசத்தில், இப்பொழுது உயிரைக் கையில் பிடித்துக் காலங்கழித்துக்கொண்டிருப்பவர்களெல்லாம் இவ்வெலும்புக்கூடுகளே தானே!. எங்கே போயது கிஷ்கிந்தையின் வனப்பும் செழிப்பும்! எங்கே போயது விஜயநகரின் நீர்வளமும் நிலவளமும் விவசாய முன்னேற்றமும். ஐயோ பாவம்! அடிக்கடியேற்படும் யுத்தங்கள்தானே காரணம் இப்பிரதேசத்திலுள்ள காடுகளெல்லாம் அழியவும், மழையில்லாது கொடும் பஞ்சம் ஏற்படவும்! ஐயோ! இந்நாட்டுக்கு ஒரு விமோசனமுமில்லையா?

"உண்டு! உண்டு! விமோசனமுண்டு" என்றொரு குரல் என் காதிற் பட்டது. கலால் மந்திரியின் குரலேயது. "இராயர் சீமைப் பிரஜைகளே! மனந்தளராதீர்கள். இன்று பஞ்சத்திலடிபட்டு வறுமை வாய்ப்பட்டிருக்கும் உங்கள் நாடு ஏராளமான இயற்கைப் பொருள்கள் மலிந்து கிடக்கும் ஒரு களஞ்சியமே. அவற்றை உபயோகத்துக்குக் கொணர்ந்து நாடு விருத்தியடைய ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. கொஞ்சம் பொறுங்கள்; எங்கும் பொங்கும் மங்களம், உம் நாட்டில்."

கலால் மந்திரிக்குப்பின் கம்பீரமான வெள்ளைத் தாடியுடன் நின்றுகொண்டிருந்த நீர்ப்பாசன மந்திரியும் "ஆம், பொறுங்கள். துங்கபத்திரை அணைக்கட்டு இன்னும் சிறிதே நாட்களில் கைகூடியதாகும்" என்று இனிய குரலில் தைரியஞ் சொன்னார்.

அவர்களிருவருக்கும் பின்னால் மெலிந்த தேகத்துடன் ஒரு மனிதர் நின்றுகொண்டிருந்தார். சிறிய அவயவமே உள்ளவராயிருந்தும் அவருடைய மூக்கும், சற்று நீண்டு வந்திருந்த முகவாய்க்கட்டையும் அவர் மிகுந்த மனோ உறுதி உள்ளவராயிருக்கவேண்டுமென்று காட்டிற்று. அவர் ஒன்றும் பேசவில்லை; ஆனால் புன்முறுவலுடன் தன் சகாக்கள் கூறுவதை ஆமோதிப்பவர்போல் தலையை யசைத்தார். கூரிய கண்களையும் கொண்டவராயிருக்கவேண்டும். ஆனால் அதை நான் நிர்ணயிக்க முடியவில்லை. ஏனென்றால், கறுப்பு மூக்குக்கண்ணாடி அணிந்திருந்தார் மனிதர்.

*    *    *    *

1975-ம் வருஷம் துங்கபத்திரை அணைக்கட்டு ஸ்தாபனத்தின் வெள்ளித் திருவிழா நாடெங்கும் வெகு விமரிசையுடன் கொண்டாடப் படுகிறது. தேச மெங்கும் ஓரே குதூஹலம்! இருபது வருஷங்களுக்கு முன் கரிசல் காடுகளும், கட்டாந்தரையுமாக இருந்த பூமியெல்லாம், இப்பொழுது ஓரே பசுமையும்.

செழிப்பும், புல் பூண்டுகளே நீரில்லாமல் தவிர்த்துக் கொண்டிருந்த இடங்களிலெல்லாம், இப்பொழுது சோளமும், பருத்தியும், கொழுத்து வளர்ந்து நிற்கின்றன. பருத்த மணிகளடங்கிய சோளக்கதிர்கள், உல்லாசமாய்க் காற்றில் அசைகின்றன. பருத்திச் செடிகளில் பாரத்தைத் தாங்க முடியாத புஷ்பங்கள். அவைகளில் அடைத்து வைத்திருக்கும் தூயவெண்மையான பஞ்சும், தன்னால் குடிகளுக்கு உண்டாகும் பலன் ஏராளமானதென்பதைக் குறித்துக் காட்டுகின்றது. ஆங்காங்கே பலவிதக் கனிவர்க்கங்களைக் கொடுக்கும் பழத்தோட்டங்கள்! ஏதேது! இத் தேசத்தில் "கனிகளைப் புசியுங்கள்" என்று ஓர் இயக்க மேற்பட்டால், இயக்கத்திற்குச் சந்தேகமின்றி ஜயம்தான். பழங்களும், காய்கறிவகைகளும் இவ்வளவு அபரிமிதமாய்க் கிடைக்குமானால், பிரஜைகளுக்கு வலியுள்ள ஆகாரவகைகளையும், "வைடமின்"களையும் அடைய என்ன கவலை!

விவசாய முன்னேற்றத்தின் தொடர்பாக ஏற்பட்ட தொழில் அபிவிருத்திச்சின்னங்களும் தென்படுகின்றன. துங்கபத்திரை அணைக்கட்டின் காரணமாக, நீர்வீழ்ச்சிமின்சார இயக்கம் சாத்தியமாயிற்று. நாடெங்கும் குறுக்கும் நெடுக்குமாக, மின்சாரத்தந்திகள்! அநேக தொழிற்சாலைகள் பிரஜைகளுக்கு வேண்டிய பொருள்களை உள்நாட்டிலேயே தயாரிக்கின்றன. தேசமே சுறு சுறுப்பு மிகுந்த ஓர் தேன் கூட்டை நிகர்த்தது.

இது மட்டுமோ? பஞ்சத்திலடிபட்டுப் பாழாய்ப் போய்க்கொண்டிருந்த இந்நாட்டின் புனருத்தாரணக் கைங்கரியத்தில் ஜாதிமத வித்தியாசமின்றி மாந்தரனைவரும் ஈடுபட்டிருக்கிறார்கள். ஹிந்துவுக்கும் மகம்மதியனுக்கும் ஒரே ஒற்றுமை. சண்டை சச்சரவுகள் எல்லாம் நின்றுவிட்டன. இராயர் சீமைவாசிகள், ஆந்திரப் பிரஜைகள், சர்வ வியாபியாகிய தமிழன் எல்லோரும் மனோ ஒற்றுமையுடன் விஜயநகரத்தின் பழைய கீர்த்தியை மீளப் பெறுமாறு இராயர் சீமையை விருத்தி செய்து கொண்டிருக்கிறார்கள்.

* * * *

அட்ச்சு! அட்ச்சு! என்னைத் தூக்கத்திலிருந்து எழுப்புவதற்காக என் குழந்தை விளையாட்டுத்தனமாகக் காகிதச் சுருள் ஒன்றை என் நாசித்துவாரத்தில் விட இரண்டு தும்மல்களுடன் கண்விழித்துக்கொண்டேன்.

நான் கண்டதெல்லாம் கனவே! ஆனால் மனித யத்தனத்தால் சாத்தியமாக்கமுடியாத கனவோ அது?

# குற்றத்திற்குத் தகுந்த தண்டனை.

(வ. வேணுகோபாலன்.)

இராமர் காலை நியமங்களை முடித்துக் கொண்டு வசிஷ்டர் முதலான ரிஷிகளுடனும், சுமந்திரர் முதலான மந்திரிகளுடனும், பெரிய பிரபுக்களுடனும், வழக்கப்படி நியாயஸ்தலத்திற்குப் போனார். இவர்களுடன் இராமர் வீற்றிருந்த சபையானது, இந்திர சபையையும், வருணசபையையும், போல இருந்தது. அப்பொழுது இராமர் தனது உற்ற தம்பியான இலக்ஷ்மணனை அழைத்து, அரண்மனை வாசலில் ஆதரவற்றவர் யாராவது வந்து நியாயத்திற்காகிலும், உதவிக்காகிலும், முறையிடுகிறார்களாவென்று பார்த்து வரும்படி சொல்லி அனுப்பினார். இளைய பெருமாள் இராமர் கட்டளைப்படி போய்ப் பார்த்தார். ஒருவரும் இல்லை. ஏனென்றால் தர்மமே உருவெடுத்து அரசாளுகையில் இம்மாதிரி குறைபாடுகள் ஏற்படுமா? இராமரின் அரசாளுகையில் மெய்த்துன்பங்களும் மனத்துன்பங்களும், தலைகாட்ட இடமில்லாதிருந்தது. அத்தேசம் முழுதும் மகிழ்வுடனும், அமைதியுடனும் இருந்தது. இவ்விதம் இலக்ஷ்மணர் முறையிடுவார், ஒருவரும் இல்லை என்று ராமரிடம் தெரிவித்தார். உடனே ராமர் இலக்ஷ்மணனைப் பார்த்து, அப்பா! மறுமுறை சென்று ஏதேனும் துன்புற்ற பிராணிகள் உளவோ என்று பார். அதுவுமல்லாமல் நியாயம்தான் பிரஜைகளைப் பாதுகாக்கும் என்று அனுப்பினார். அவ்விதமே இலக்ஷ்மணர் மறுமுறை சென்று பார்த்தார். அப்பொழுது வாசலில் தலையுடைந்து ஊளையிட்டுக் கொண்டிருந்த நாய் ஒன்றைப் பார்த்தார். உடனே அதனிடம் சென்று பரிவோடு உனக்குள்ள துன்பம் யாது வென்று வினவினார். உடனே நாயும் தன்னுடைய குறையை இராமரிடம் தெரிவித்துக்கொள்ள வேண்டும் என்றது. அப்படியே அந்த நாயை இலக்ஷ்மணர் இராமரிடம் அழைத்துச் சென்றார். இராமர் என்னவென்று வினவினார். அப்பொழுது நாய் பின் வருமாறு கூறிற்று:—ஏ ரகுநந்தனா! என் சொல்லைக் கோபியாமல் கேட்கவேண்டும். பிராமண வீதியில் பிச்சையெடுத்துண்ணும் ஸர்வார்த்தன் என்னும் பிராமணன் நான் ஒரு தீங்கும் செய்யாதிருக்க என் தலையை உடைத்தான் என்றது. உடனே அந்தப் பிராமணன் நியாயஸ்தலத்திற்கு அழைத்து வரப்பட்டான். உடனே இராமர் அவரை நோக்கி ஏ, பிராமணரே, ஏன் இந்த நாயை நீர் அடித்து உபத்திரவம் செய்தீர். அது உம்மை என்ன பண்ணியது. இவ்விதக் கோபம் பிராமணருக்கு இருத்தல் கூடாது. கோபம் என்பது இருபுறமும் கூர்மையாயுள்ள கத்தி போன்றது. உமது கோபத்தால் இவ்விதக் குற்றம் எனது அரசாளுகையில் ஏற்படுகிறது. அதனாலுண்டான பாபம் என்னையே சாரும். அதனால் இதற்குரிய காரணம் என்ன, உமக்குளென்ன குறை என்றார். அதைக் கேட்ட பிராமணர் "கோபந்தான் அதை அடிக்கும்படியாய் என்னைத் தூண்டிற்று. இன்று நான் மிக்க பசியாயும், அயர்ச்சியாயும், ஒரு அடிகூட மேல் நடக்க முடியாத நிலைமையாயும், வருந்திக் கொண்டு பிச்சை எடுக்கப் புறப்பட்டேன் அப்பொழுது இந்த நாய் என் முன்பு மெதுவாய் உல்லாஸமாய் அலட்சியம் செய்து போய்க்கொண்டிருந்தது. வழியை விட்டுப் போகும்படி பல தடவை சொன்னேன். அது கேட்கவில்லை. அதனால் என் பசியும், கோபமும், அதை அடிக்கச்சொல்லிற்று. ஆகையால் நான் குற்றவாளிதான். ஆனால் இக் கோபம், பசியாலும், பசியானது வறுமையாலும், இப்படி பிராமணருக்கு நேரிடும் வறுமை உனது செங்கோல் மாறுபாட்டாலும் தான் உண்டாகின்றது. அக்குற்றம் உன்னைச் சேர்ந்தது" என்றார்.

உடனே ராமர் தன் குற்றத்தையும் ஒப்புக்கொண்டு மந்திரிகளை நோக்கி, "இந்தப் பிராமணனுக்குக் குற்றத்திற்கேற்ற தண்டனை விதித்தால் நம் குற்றமும் நீங்கி விடும், குடிஜனங்களுக்கும் நம்மிடம் நம்பிக்கை குறையாது" என்றார். அதைக் கேட்டு அங்கிருந்த ரிஷிகள் இராமரை நோக்கி, "ராகவா! பிராமணஹத்திகூடாதென்று வேதங்கள் சாற்றுகின்றன. மற்றவிதமான தண்டனைகள் உமக்கே தெரியும். ஆதலால் இப் பிராமணனுக்குத்

தக்க தண்டனையை நீரே விதித்திடும்'' என்றனர். இந்தச் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்த நாயானது, சபையோரையும் ராமரையும் நோக்கி, நான் சொல்வது உங்களுக்கு ஏற்றதாய் இருக்கும் பக்ஷத்தில் இப்பிராமணனைக் கோவில் தர்மகர்த்தாவாகவாவது சத்திராதிகாரியாகவாவது நியமித்தால், அதுவே தக்க தண்டனையாகும் என்றது. அப்பொழுது ராமரது கட்டளையால் அப்பிராமணன் ஒரு கோவிலின் தர்மகர்த்தாவாக நியமிக்கப்பட்டு யானைமேல் ஏறிச் சந்தோஷமாய் வீடுபோய்ச் சேர்ந்தான். உடனே சபையோர்கள் அதிசயமுற்று, இது தண்டனையல்லவே, குற்றத்திற்கு வெகுமானமாகவல்லவா இருக்கிறது? எப்படித் தண்டனையாகும் என்றனர். உடனே ராமர், இது தேவ தண்டனை. இதன் விவரம் நமக்குத் தெரியாது, அந்த நாயையே கேட்போம் என்று அதை என்னவென்று கேட்டார்.

அதற்கு அந்த நாயானது, ''நான் முற்பிறப்பில் இந்தமாதிரி, ஒரு தர்மகர்த்தாவாக இருந்து, தர்மசிந்தனைக்கு வெகு பிரக்கியாதி பெற்றிருந்தும், இந்தப் பிறப்பில் நாயாகப் பிறந்து இந்தக் கடின ஜீவனம் பண்ண நேர்ந்தது. ஆகையால் கொஞ்சமும் அறிவும், தயையும், பொறுமையும் இல்லாத இந்தப் பிராமணன் என்னிலும் பதின்மடங்கு பாபத்துக்கு ஆளாகி, ஏழு ஜன்மங்களிலும் பரிதபிப்பான். ஆதலால் அவ்விதம் செய்தேன். ஆதலால் நீங்கள் எவனையாகிலும், நரகத்திற்குச் சமானமான தண்டனை செய்ய எண்ணினால், அவனை உடனே கோவில் தர்மகர்த்தாவாகவாவது, சத்திராதிகாரியாகவாவது நியமித்து சிறுவர்களுடைய பொருளையாவது, ஸ்திரீகளுடைய பொருளையாவது, பிராமணர்களுடைய பொருளையாவது, செலவுசெய்யச் சொன்னால் போதும், அதுவே அவனுக்கு மீளா நரகத்தைக் கொடுக்கும் என்றது. இதைக் கேட்ட இராமரும் சபையோர்களும் ஆச்சரியப்பட்டார்கள். உடனே அந்த நாய் அங்கேயே எல்லோரும் பார்த்திருக்க மறைந்தது. இது தர்மதேவதையே என்று இராமரும், சபையோர்களும் அறிந்து மகிழ்ந்தார்கள்.

# நீதியற்ற கதைகள்.

"ஸ்ரீ."

## I

நல்லூர் என்ற கிராமத்தில், தனபாலன் என்னும் ஒரு செட்டி இருந்தான். அவன், நெல் வியாபாரம் செய்தும், பணம் லேவாதேவி செய்தும், நாளடைவில் அவ்வூரில் பெரிய பணக்காரனானான். அவனுக்கு மனக்கசிவு போதாது; கை இறுக்கம் அதிகம்; எனினும், அவனுடைய செல்வம் நாள்தோறு மிஞ்சுவதைக் கண்டு, பாக்கியசாலி என்றும் பெரிய மனுஷன் என்றும் அவ்வூரார் அவனைப் புகழ்ந்தார்கள்.

வெகு நாளாகப் பிள்ளை இல்லாதிருந்த தனபாலனுக்கு ஐம்பதாம் வயதில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. பணத்தைக் காப்பதற்குத் தனபாலன் தன் சுயபுத்தியையே நம்பியிருந்தான்; குழந்தைப் பருவத்தில் வரும் கொடிய வியாதிகளிலிருந்து தன் மகனைத் தப்புவிக்க அவன் தெய்வத்துணையை நாடினான். எதிர்பாராது கிடைத்த இப்பேறு தனக்கு நிலைக்குமோ என்ற பயம் அவன் மனத்தில் குடிகொண்டது; குழந்தைக்காக அவன் பட்ட சஞ்சலம் கொஞ்சமில்லை; அதன் ஒவ்வொரு பிறந்த நாளிலும் கோவிலுக்குப் பல கட்டளைகள் நியமித்தான்; தானதருமங்கள் செய்தான். அந்தக் குழந்தை பிறந்த மகிழ்ச்சியால், தனபாலன் விரிந்த மனதுள்ளவனாயும் புண்ணியவானாயும் ஆகிவிட்டானென்று அவ்வூரார் அவனை மெச்சினார்கள்.

இவ்வாறாகப் பன்னிரண்டு வருஷங்கள் சென்றன. ஒரு நாள் அம்மகன், புது வெள்ளம் போய்க்கொண்டிருந்த ஆற்றில் இறங்கி நீந்தமாட்டாமல் மூழ்கிச் செத்தான். தனபாலன் ஏக்கம் பிடித்தவனானான். சொத்தைக் காப்பது ஒரு சுமைபோல் அவனுக்குத் தோன்றிற்று; அதைப் பிறருக்குக்கொடுக்கவும் மனம் வரவில்லை; தெய்வ நம்பிக்கையையும் இழந்தான். சில பைராகிகளுடன் சேர்ந்து அவன் பரதேசியாய்ப் போய்விட்டான். தாயாதிக்காரர் அவனுடைய உடைமையெல்லாம் கைக்கொண்டு, அவன் பெயரால் அவ்வூரில் ஒரு மடம் கட்டுவித்தார்கள். மகன் சாவால் தனபாலன் முக்திக்குரிய பக்குவமடைந்து விட்டானென்று அவ்வூரார் அவனைக் கொண்டாடினார்கள்.

## II

எதிரிகள் பற்றிக்கொண்ட கோட்டைக்குள் அப்துல்மகமதின் மனைவியிருந்தாள். கோட்டையின் மேலத்திட்டி வாசல் வழியாக உள்புகவும் வெளிவரவும் உத்தரவுச் சீட்டொன்றை அப்துல் எதிரி ஒருவனிடமிருந்து தந்திரமாய் அபகரித்து விட்டான். எனினும், மராட்டியரிடையில் தான் செல்வது அபாயமென்றே அவனுக்குப்பட்டது. அவன் தன் தோழனும் மெய்காவலாளனுமான கோவிந்தபட்டை அழைத்து, அவனிடம் அந்தச் சீட்டைக் கொடுத்தான். "என் மனைவி இன்னாளென்று தெரியாததால் அவளைத் தனிக்காவலில் வைத்திருக்கமாட்டார்கள். துலுக்கஸ்திரீகள் இருக்கும் இடத்துக்கு நீ எப்படியாவது போய், என் பெயரைச் சொல்லி, என் மோதிரத்தைக் காட்டி, அவளை அழைத்துக் கொண்டுவா. ஒருவரும் தடை செய்யாமல் போகவும் வரவும் அந்தரங்கசேவுகாரனுக்குரிய உத்தரவுச் சீட்டொன்று இதோ இருக்கிறது. இதைவிட வேறு துணைப்பலம் உனக்கு வேண்டாம்; சீக்கிரமே போய்வா" என்று அவனுக்குக் கட்டளை யிட்டான். "என் மனைவி ஒப்பற்ற அழகுடையவள்; அவளை நீ ஏறிட்டும் பார்ப்பதில்லை என்று சபதம் செய்து கொடு" என்றும் சொன்னான். கோவிந்தபட் அவ்வாறே சபதம் செய்து, சீட்டைப் பெற்றுக்கொண்டு போனான். அன்றிரவு, அவன் தான் எடுத்த காரியத்தை முடித்து விட்டுத் திரும்பினான். அவனுடன், லேசான முகமூடி இட்டுக் கொண்ட ஒரு பெண்ணும் வந்தாள். அவள் அப்துலின் மனைவியில்லை; வயது சென்ற அவனுடைய மாற்றாந்தாய்; "ரோஜாமலருக்கும் அலரிப்பூவுக்கும் வித்தியாசம் தெரியாத மூடனே! உன் சபதத்தைக் காத்து என் குடியைக் கெடுத்த துஷ்டனே! உன்னை என்ன செய்

வது?" என்று அப்துல் வெறிகொண்டு வாளை ஓங்கிக் கோவிந்தபட்மேல் பாய்ந்தான். "வீரனே, ஓடி விடு, நிற்காதே, தயங்காதே, ஓடு" என்று கூவி, அந்தஸ்திரீ தன் கைம்மாற்றைச் செலுத்தினாள். எவரையும் கூர்ந்து பார்க்கும் பழக்கத்தைக் கோவிந்தப்ட் அன்று முதல் கைக் கொண்டான்.

## III

ஓர் ஊரில், இரட்டையாகப் பிறந்து இராமன், லக்ஷ்மணன் என்று பெயரிடப்பட்ட இருவர் வெகு நாளாய் அந்நியோன்யமாய் வாழ்ந்து வந்தனர். தகப்பன் இறந்து சொத்துப் பாகமாகும் நாளில், ஒரு மனைக்காக அவர்களுக்குள் சச்சரவு ஏற்பட்டது. அந்த மனையை லக்ஷ்மணனுக்குக் கொடுப்பதாகத் தகப்பன் ஒரு காலத்தில் சொல்லியிருந்தும் அதை ஓரிடத்திலும் எழுதிவைக்கவில்லை. தனக்கு உரிய பொருள் இராமனைச் சேரவிடக்கூடாதென்று தீர்மானித்து, லக்ஷ்மணன் தைரியமாய் ஒரு பொய்ப்பத்திரம் தயாரித்தான்; அதில் கண்டபடி மனை தன்னுடையதே என்று சாதித்தான். இறந்த தந்தையின் பெயரை லக்ஷ்மணன் கள்ளக்கையெழுத்திடத் துணிந்தது இராமனுக்குப் பகீரென்றது; தன் தம்பி பழிபாவத்துக்கு அஞ்சாத நெஞ்சம் படைத்தவனா என்று அவன் எண்ணித் திகைத்தான். இதற்கு ஏற்ற சிக்ஷைவிதித்து லக்ஷ்மணனைத் திருத்துவது அவசியமென்று அவனுக்குப்பட்டது. எனவே, யாராவது ஒருவர் விட்டுக் கொடுக்கும்படி ஊரார் சொன்னமதி, அத்தனை நாள் ஒன்றுபட்டிருந்த இருவருக்கும் ஏற்கவில்லை. இருவரும் வழக்காடி நியாயஸ்தலம் ஏறினார்கள். லக்ஷ்மணனுடைய பொய் பொருந்த அமைக்கப்பட்டதால், அதுவே மெய் போலத் தோன்றிற்று; நீதிபதி அவன் பக்கம் தீர்ப்புச்செய்துவிட்டார். இந்த அநீதி பொறுக்காமல் இராமன் மனம் கொதித்துக்கொண்டேயிருந்தது. அவனுக்குத் தன் காரியத்தைக் கவனிக்கப் புத்தி செல்லவில்லை; மனைவி மக்களிடம் முகமலர்ச்சியில்லை; ஒருவரிடமும் நம்பிக்கையில்லை. உலகத்தை அவன் வெறுக்கவே, ஊராரும் உற்றாரும் அவனை வெறுக்கத் தொடங்கினர். அவன் வாழ்க்கையில் வறுமையும் கசப்பும் அதிகரித்துக்கொண்டே வந்தன. லக்ஷ்மணனோ, காரியசித்தி பெற்ற மகிழ்ச்சியால், தாராள சிந்தை உடையவனானான். எவரிடமும், அவன் சில்லறைக் குற்றங்களைப் பாராட்டுவதில்லை; 'ஆனைக்கும் அடிசறுக்கும்' என்ற பழமொழி அவன் வாயிலிருந்து அடிக்கடி வரும். நாளடைவில், அவன் செல்வந்தனாயும் பரோபகாரியாகவும் விளங்கினான்.

# வண்ணான் மூட்டை.

(மா. கிருஷ்ணன்.)

"கச்சேரிக்கு நேரமாய்விட்டது—ராயர் அவசர அவசரமாச் சாப்பிடுகிறார்—ஏண்டா, சாப்பாட்டு வேளைக்கு வராதே வராதேன்னு எத்தனை தரம் சொல்லியிருக்கேன்? அது மட்டுமா, போன வெள்ளிக்கிழமைக்கே வரவேண்டியவன் இப்ப வந்தாலெப்படி—கந்தலும் பீத்தலும் போட்டுக் கொண்டு ராயர் கச்சேரிக்குப் போவதா? என்ன, காய்ச்சலா! தடிபோலிருக்காயே, காய்ச்சல் வேறையா உனக்கு! சரி சரி, உன்னுடன் மாரடிச்சிக்கொள்ள இப்ப நேரமில்லை—பத்தரை மணிக்கு வா, தெரிந்ததா, சரியா பத்தரை மணிக்கு வா, வெள்ளை வாங்குகிறேன்"

ஒரே மூச்சில் இது அவ்வளவையும் சொல்லிவிட்டு ஸ்ரீ துங்காபாய் சமையற்கட்டினுள் மறைந்து விட்டாள். வண்ணான் கந்தசாமி தன் மோவாய்க்கட்டையை மெல்லத் தடவிக் கொடுத்தான். பின் மூட்டைகளில் ஒன்றைத் திண்ணையோரமாகச் சாத்திவிட்டு மற்றவைகளைச் சுமந்து சென்றான். அவன் காய்ச்சலாகக் கிடந்தது வாஸ்தவமே. கனத்த அரிசி மூட்டைகளைத் தூக்குபவன்போல் அவன் மெல்ல மெல்ல நடந்தான். மற்றிரண்டு இடங்களிலும் வெள்ளை ஒப்புவித்து விட்டு ராயர் வீட்டை நோக்கித் திரும்பும் பொழுதே பதினொரு மணியாய்விட்டது.

அவன் வரவை எதிர்பார்த்து நிற்பவள் போல் துங்காபாய் தெரு வாயிலிலேயே ஆயத்தமாயிருந்தாள். குறிப்பிட்ட வேளைக்கு வராது மற்றவர்களின் பொழுதை வீண் போக்குபவர் மௌட்டியங்கள் என்றும், அவர்கள் மறு ஜன்மத்தில் ஆமைகளாகப் பிறப்பார்களென்றும் தோட்டத்தைக்கடந்து திண்ணைக்குப் போவதற்குள் துங்காபாய் தெரிவித்தாள். கணக்குப் புத்தகத்தை எடுத்து வர அவள் உட்செல்லவே திண்ணை மீதுள்ள மூட்டையை அவன் அவிழ்க்கவாரம்பித்தான். அப்பொழுது, முடி தான் போட்டதுபோலில்லாமல், அவசரத்தில் கட்டின மாதிரி நெகிழ்ந்து கிடப்பதை கவனித்தான். ஆத்திரத்துடன் மூட்டையை விரித்தான்—மேலாகவிருந்த சரிகைத் தலைப்பாகையையும் ராயரின் புதுப் பட்டுச்சட்டையையும் காணவில்லை. யாரோ மூட்டையிலிருந்து அவைகளைத் திருடி விட்டார்கள் என்பதில் சந்தேகமில்லை. வண்ணான் கந்தசாமிக்கு இன்னது செய்வதென்று தெரியவில்லை. தான் நின்ற விடத்திலேயே ஸ்தம்பித்துப் போய் நின்றான். துங்காபாய் புத்தகத்துடன் வருவதையும் அவன் கவனிக்கவில்லை. எதிர்த்திண்ணையில் அமர்ந்து, புத்தகத்தைப் பிரித்து,

"உம்—பட்டுக்கரை வேஷ்டி—ஒன்னு" என்று அவள் கணக்குப் பார்க்கும் பொழுது தான் அவள் அங்கு இருப்பதை அறிந்தான்.

சட்டையும் தலைப்பாகையும் களவு போய் விட்டதை திக்கித் தடுமாறித் தெரிவித்தான்.

"என்ன—களவு போய் விட்டதா—என்னடா உளறுகிறாய் மடையா! புதுச்சட்டை, ஜாக்கிரதை, ஜாக்கிரதை, டீக்காகச் சலவை என்று நான் எச்சரித்தேனே, அது எப்படியடா கெட்டுப்போகும்?" என்று அவள் கூக்குரலிடலானாள்.

திண்ணை மேலிருக்க மூட்டையிலிருந்து யாரோ துணிகளைத் திருடிவிட்டார்களென்றும், அவை சலவையில் தொலைந்து விடவில்லையென்றும் துங்காபாயின் பேச்சை இடையிடையே குறுக்கிட்டு அவன் சொன்னான். திடீரென்று அவனுக்கு ஓர் எண்ணம் தோன்றிற்று—தெருவில் போவோர் வருவோர் எவரும் தோட்டத்துள் பிரவேசித்து மூட்டையை அவிழ்க்கத் துணியமாட்டார்

கள், வீட்டு வேலையாட்களுள் ஒருவனே இதைச் செய்திருக்க வேண்டும் என்று அவன் வாதித்தான். துங்காபாயிக்கு அளவில்லாக் கோபம் வந்துவிட்டது. துணிகளைத் தொலைத்ததுமன்றி மற்றவர்கள்மீது பழியும் சாற்ற அவன் அயோக்கியமாக முயல்வதாகவும், தன் வீட்டு வேலைக்காரர்கள் வண்ணான் கந்தசாமியைப்போல் நன்றிகெட்ட அற்ப ஜந்துக்களில்லை யென்றும், அவர்கள் இந்த அபவாதச் சொற்களைக் கேட்டால் அவன் பற்களைப் பெயர்த்து விடுவார்களென்றும், களவுபோன வஸ்துக்களின் விலைக்கு சரியாய் இருபங்கு அபராதமிட்டுவிட்டதாகவும், உடனே எங்கேனும் போய்த் தேடிப்பிடித்துத் துணிகளைக் கொண்டுவந்து தராவிட்டால் ராயரிடம் சொல்லி அவன் வீட்டை ஜப்திவிட்டு ஒரு மண் பானை பாக்கி யில்லாமல் செய்து விடுவாளென் றும் துங்காபாய் சரமாரியாகப் பொழிந்தாள்.

கந்தசாமி முன்னிலும் திகைத்து மறு பேச்சில்லாமல் நின்றான். அவன் பேசுவதற்கும் ஏற்ற சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. இதற்குள் வீட்டிலுள்ள வேலையாட்களும், அண்டை வீட்டு யஜமானியும், அவள் கணவனாகிய ஒரு வக்கீலும், தெருவில் போவோர் வருவோர் இருவரும் துங்காபாயின் கூச்சலைக் கேட்டுத் திரண்டு விட்டனர். கந்தசாமி ஏற்கனவே பயந்த சுபாவமுள்ளவன். மேலும் காய்ச்சலினால் அவன் பலஹீனமடைந்திருந்தான். இத்தனை பெயர்களும் நடந்ததை விசாரணை செய்ததிலும், அதட்டினதிலும் அவன் முழுதுமே குழப்பமடைந்து விட்டான். அவன் திடீரென்று விம்மி விம்மி அழவாரம்பித்தான். குழப்பம் அதிகரித்தது. சிலர் அவன்மீது பரிதாபப்பட்டு அவனைத்தேற்ற முயன்றனர். சிலர் அவன் அழுவதைக் கண்டு வாய்விட்டுச் சிரித்தார்கள். முடிவில் வக்கீல் ஒருவாறாக எல்லோரையும் அடக்கி, ஒரு பொருள் காணாமற் போய்விட்டால் போலீசாரிடம் சென்று முறையிடுவதே நியாய வழியென்றும், கந்தசாமி உடனே தாணாவுக்குச் சென்று நடந்ததைத் தெரிவித்தால் களவுபோன வஸ்திரங்கள் அகப்பட்டாலும் அகப்படலா மென்றும் போதித்தார். இதுவே தகுந்த யுக்தியென்று மற்றெல்லோரும் ஆமோதிக்கவே வண்ணான் கந்தசாமி தாணாவை நோக்கித் தயங்கிக் கொண்டே நடக்கலானான். அவனுக்கு வழித்துணையாகவும் உதவியாகவும் தோட்டக்காரன் முனிசாமி உடன் சென்றான். சென்றதும், முனிசாமியே ஒரு வேளை மூட்டையை அவிழ்த்திருக்கக் கூடுமென்று சந்தேகப்பட்ட வீட்டு வேலையாள் கண்ணன் தோட்டக்காரனின் குடங்களையும் பானைகளையும் புரட்டிப் பார்த்தான். வீட்டைவிட்டுப் போவதற்கு முன்பாகவே தன்மீது சந்தேகப்பட்டு முனிசாமி தன் படுக்கையைச் சோதனையிட்டது அவனுக்குத் தெரியாது.

* * * *

மூன்று தாணாக்காரர்கள் சூழ்ந்து நிற்க, ஒரு பிரமாண்டமான நாற்காலியின்மீது மேலதிகாரி தாணுப்பிள்ளை வீற்றிருந்தார். அவர் தமது மீசைகளை முறுக்கிவிட்டுக் கொண்டே, குறுக்கிடாது, பொறுமையுடன் வண்ணான் கந்தசாமி சொல்வதனைத்தையும் கவனித்துக் கேட்டார். பின் தமது இடது பக்கம் நிற்கும் தாணாக்காரனை ஜாடையாகப் பார்த்தார்: அவன் மெல்ல நகைத்தான். அவர் வண்ணானை நோக்கித் திரும்பினார்.

"உன் பெயரென்ன?"

"கந்தசாமி."

"தொழில்?"

"வண்ணானுங்க"

"ஹூம்—நீ மூட்டையைத் திண்ணையில் வைத்தபொழுது மணி என்ன?"

"ஒன்பதரை மணி."

"ஜாக்கிரதை—நன்றாய் யோசித்துச் சொல்."

"ஒன்பதரை தானுங்க."

"உனக்கு யார்மேல் சந்தேகம்?"

"எனக்குத் தெரியாதுங்க—நான் எப்படி—"

"உன் பெயரென்னவென்று சொன்னாய்?"

"கந்தசாமி."

தாணுப்பிள்ளை நாற்காலியினின்றும் இறங்கி கந்தசாமியினருகில் வந்து நின்றார். அவனை மெல்ல முதுகில் தட்டிக்கொடுத்தார்.

"பயப்படாதே கந்தசாமி, பயப்படாதே" என்று அவனை தைரியப்படுத்தினார்—"உள்ளதைச் சொல்லிவிடு—யார் திருடினது?"

தனக்குத் தெரியாதென்றும், தெரிந்தால் முதலிலேயே சொல்லியிருப்பானென்றும், எப்படித் தெரியும் சாமி என்றும் பலவிதங்களில் கந்தசாமி தன் அறியாமையைச் சாதித்தான்.

தாணுப்பிள்ளை சொல்கிறார்: அடே, உனக்கு உடந்தையாக எவனும் இருந்து எடுத்துவிட்டானென்று நான் நினைக்கவில்லை. பயப்படாதே—உனக்கு எடுத்தது யாரென்று தெரியும், சொல்லிவிடு, பயப்படாதே.

"நிஜமாகவே தெரியாதுங்க—தெரிந்தா நான்—"

"ஓஹோ, அப்படியா!" என்று தாணுப்பிள்ளை தமக்குத்தாமே சொல்லிக் கொண்டார். திருடினது யாரென்று அவருக்கு விளங்கி விட்டது. இடது கைப்பக்கம் நிற்கும் தாணாக்காரனை அவர் ஜாடையாகப் பார்த்தார்: அவன் மெல்ல நகைத்தான்.

தமக்குக் கந்தசாமியின் சூழ்ச்சி விளங்கி விட்டதென்றும், சட்டையையும் தலைப்பாகையையும் ராயர் வீட்டிற்கு அவன் கொண்டே வரவில்லை என்றும், அவனே திருடனென்பதில் சந்தேகமேயில்லை யென்றும், உடனே தன் குற்றத்தை ஒத்துக்கொண்டு விட்டால் மூன்று வருஷம் கடுங்காவலுடன் தப்பித்து விடலாமென்றும் அவர் கூறினார்.

கந்தசாமி மறுபடியும் திகிலடைந்து மௌனமாய் நின்றான். ஒருவேளை அவன் "பழைய பெருச்சாளி" யாய் இருக்கலாமென்று சந்தேகப்பட்டு, அவனது விரல் முத்திரைகளை போலீஸ் புத்தகத்தில் பதிப்பித்துக்கொண்டபின், இரண்டு தாணாக்காரர்களுடன் கந்தசாமி அவ்விடத்தைவிட்டு வெளியேறினான். சைதாப்பேட்டையை அடுத்துள்ள அவன் வீட்டையும், சுற்றுமட்டுமுள்ள மார்வாடி கடைகளையும் சோதனையிடுமாறு தாணுப்பிள்ளை உத்தரவிட்டார். இருட்டினபின் எத்தனையோ சோதனைகளிட்டும் எத்தனையோ பெயர்களை உருக்கியும் பயனில்லாமல் கந்தசாமியுடன் போலீஸ்காரர்கள் தாணாவுக்குத் திரும்பினர். ஆனால் அதற்குள்ளாகவே காணாமற் போன துணிகள் அகப்பட்டுவிட்டன.

* * * *

சாயங்காலம் ஆறரை மணிக்கு ராயர் கச்சேரியிலிருந்து வீடுவந்து சேர்ந்தார். அவர் தலையில் ஒரு வெளுத்த சரிகைத் தலைப்பாகையிருந்தது. புதிதாக விளங்குமொரு பட்டுச் சட்டையை அவர் அணிந்திருந்தார்.

# மைலாப்பூர் வக்கீல்

மா. பா.

[குறிப்பு:—இது வெறும் கல்பனையென்றும், உயிருடனிருக்கும் எவரையாவது, உயிருடன் வாழ்ந்த எவரையாவது குறித்ததில்லையென்றும் ஆசிரியர் அறிவிக்கிறார்.]

பொன்னினால் ஆக்கப்பட்டுக் கற்களிழைத்த ஸிம்ஹாஸனத்தின்மீது யமதர்மராஜன் கொலு வீற்றிருந்தான். நீலகிரிபோன்ற பிரமாண்டமான அவனது சரீரத்தில், ஸூர்யாஸ்தமனத்தில் அந்த கிரிமீது படர்ந்த பொன்னொளிப் பெருக்கைப்போல், பட்டாடைகள் பிரகாசித்தன. அந்த ஸபாமண்டபம் மூவாயிரம் தூண்கள் கொண்டது. ஒவ்வொரு தூணும் அற்புதச்சிற்பவேலை பூண்ட கருங்கல்லில் செய்யப்பட்டு, நக்ஷத்திர மண்டலத்தைத் தொட்டு நின்றது. ஆஹா, இந்தக்கூரை பூவுலகில் காணப்படும் வானமோவெனில், அன்று. நீலக்கல்லில் அதிவிசாலமான மேகங்களும், வானமும் சித்திரிக்கப்பட்டிருந்தன. கண்ணைப்பறிக்கும் பெரும்பெரும் பொதிந்த வைரங்களே, நக்ஷத்திரங்கள். யமதூதர்களும் ஸேவகர்களும், காம்பீர்ய வதனமும் பயங்கரமான புஜமார்புகளும் உடையவராய், ஆயுதபாணியராய் நின்றனர்.

மண்டபத்தின் தென்புறமாக இரண்டு பொற் தூண்கள். இவை வெள்ளிச் சங்கிலிகளால் பிணிக்கப்பட்டிருந்தன. நடுவில், சங்கிலிகளிலிருந்து வைடூர்யங்கள் இழைத்த ஒரு பெரும் பொற்தட்டு தொங்கிக் கொண்டிருந்தது. யமதூதன் ஒருவன் ஓடிவந்து, யமராஜனைப் பணிந்து, நிமிர்ந்து, கையிலேந்திய வேலாயுதத்தால் பொற்தட்டை மோதினான். உடனே மலைப்பிரதேசத்தில் தேவதாரு மரங்களின்மீது இடி ஒழுகுவது போன்ற வொரு சப்தம் கிளம்பி அலை அலைகளாக எங்கும் பரவியது. அதைக்கேட்டு அக்னிஜ்வாலையிலும், கொதிக்கும் எண்ணெய்க்குளங்களிலும், எஃகு மூக்குக் கொண்ட • கழுகுகளிடையினும் வேதனையிலாழ்ந்திருந்த பாபாத்மாக்கள், அறியாமல் நடுங்கி மயிர்க்கூச்சல் மிகுந்தனர். இதுவே இன்னுமொரு ஆத்மா யமஸந்நிதியை அடையப் போவதற்கு அறிகுறி. அடுத்த கணத்திற்குள் பத்துப்பன்னிரண்டு யமதூதர், புதிதாக கிரஹிக்கப்பட்ட வொரு ஜீவனை தர்மராஜன் முன்னிலையில் கொண்டு நிறுத்தினர்.

ஜீவனுக்கு வடிவமேது, ஆடையேது? ஆனால் லோகமே சித்தமயமென்பதை யொட்டி, அந்த ஜீவனும் பலகாலமாகப்பற்றியிருந்த ஸ்தூலதேஹத்தின் தோற்றத்தைப் பிரதிபிம்பித்தது. ஜீவர்களும் இவ்வாறு உருவங்கள் கொண்டுதான் தங்களுக்கு நியமிக்கப்

பட்ட கர்மபலன்களை நரகத்தில் புஜிக்கிறார்கள். ஆள், சுமார் ஐந்தரை அடி உயரம். பஞ்சகச்சமாய்த் தரித்த பட்டு வேஷ்டி, உருமால், கறுப்புத்துணி மேலங்கி, சரிகைத்தலைப்பாகை; கடியாரத்தின் பொன் சங்கிலியும் வெளியில் தெரிந்தது. பூவுலகில் நிச்சயமாய் ஓரளவு அந்தஸ்துள்ளவரென்பதில் ஸந்தேஹமில்லை. யமராஜனின் முன்னிலையாதலால், மனம் குழம்பி, கை கால்கள் நடுங்கிக் கொண்டிருந்தன. வெளிறின முகம், மருண்டு விழிக்கும் கண்கள்.

'ஓ, பரதகண்டத்தில் கிரஹிக்கப்பட்ட ஜீவனா?' என்றான் யமதர்மராஜன். அவன் பேசுவது பூகம்பத்தின் எதிரொலியைப்போலிருந்தது. வந்த யமதூதரில் முதன்மையானவன் பணிந்து—'ஆம், மஹாப்பிரபோ, சென்னை, மைலாப்பூர், உண்ணாமுலையம்மன் தெருவு: பெயர், வாமனவதாரமையர், தொழில் வக்கீல்.'' இதைக் கேட்டதும் அந்த ஜீவனுக்கு அவஸ்தையும் நடுக்கமும் பதின்மடங்கு அதிகரித்தன.

யமதர்மராஜனின் தேவகளை கூடிய முகத்தில் புன்னகை தவழ்ந்தது. 'ஸரிதான், உமது ஸஹாக்களை யிங்கு நிச்சயமாய்க் காண்பீர். பணம் பறிக்கும் அஸத்ய வக்கீல், முரட்டு ஜமீன்தார், கபடபூஜாரி இவர்கள் தங்கள் தொழிலுக்கே அபகியாதி விளைவிக்கின்றனர். ஆனால் இவரெல்லாம் இல்லாமல் போனால் நம் பாடு ஸங்கடம்தான்' என்றான். இதைக் கேட்டு யமதூதரில் பலர் இடிமுழக்கம்போல் சிரித்தார்கள். அவ்வளவு ஹாஸ்யம் நிறைந்த பேச்சில்லை யென்றாலும், நரகத்திலும் ராஜாவுடன் ஒத்துப்பாடுவதென்பது முதல் விதி. தவிரவும் வேதனைக்குப் பாத்திரமான மற்றொரு ஜீவன் கிடைத்ததென்பதைப்பற்றி இவர்களுக்குப் பரமஸந்தோஷம்.

இதற்குள் ஸிம்மாஸனத்தின் பின்புறமிருந்து ஒருவர் எழுந்திருந்தார். யமராஜனையும் ஏனைய ஸபையோரையும் ஒத்துத் தசைமிகுந்த சியாமளவர்ண தேஹமில்லாமல், இவர் வடிவம் வயது முதிர்ந்த பிராமணனைப் போன்று சந்தனக்கட்டை நிறமாக விருந்தது. காதில் எழுத்தாணி சொருகியிருந்தது. கையில் ஒரு பெரும் ஏட்டுத்தொகுதி ஏந்தியிருந்தார். மூக்கில், எஃகுச் சட்டத்தாலாகிய கண்ணாடிகள். 'சித்திரகுப்தரே! தொடங்கலாம்' என்று யமன் ஆக்ஞையிட்டபின், இவர் ராஜனைப் பணிந்து, ஏடுகளைக் கட்டியிருந்த பட்டுநூலை அவிழ்த்து முதல் ஏட்டைப் புரட்டினார். அதில் கருமையில், மிகப் பெரும் தமிழ் அக்ஷரங்களில், ஸபையோர் அனைவருக்கும் கண்படும் விதமாக :—''வாமனவதாரமையர் சரித்திரம். (ஆதியோடந்தம்) ஏட்டுக்கு வரிகள் முந்நூறு: மொத்தம் ஏடுகள் ஆயிரத்து மூப்பத்து மூன்று. இங்ஙனம், சித்திரகுப்தன்'' என்று எழுதியிருந்தது. இதைப் பார்த்ததும், வாமனவதாரமையர் என்ற ஜீவன் உடம்பெல்லாம் வியர்த்து, நாக்குழற மெலிந்த சொற்களில்—

'மஹாப் பிரபோ, அடைக்கலம், அடைக்கலம்! என் மாதா ஸத்தியமாக அவ்வளவு எழுத என் வாழ்க்கையில் ஒன்றும் கிடையாது. ஏதோவொரு ஆஸாமி ஸமாசாரத்தையும் சேர்த்தெழுதிவிட்டார்!' என்றது. யமராஜனும் ஸபையோர்களும் இதைக் கேட்டு 'கொல்' என்று சிரித்தார்கள். அந்த அட்டஹாஸம் ரௌரவம் என்ற கோர நரகத்தில் ஒரு புயலை உண்டுபண்ணிவிட்டது. சித்திரகுப்தர்கூடச் சிறிது வாய் திறந்து, தனக்குள் நகைத்தார். அவருக்கு இரண்டு பல்லில்லாமலிருப்பது, அப்பொழுது தெரியவந்தது.

யமதர்மராஜன் சொல்கிறான்: ''வாமனவதாரமையரே, பயம் வேண்டாம். இது நீதிஸ்தலம். இங்கே தர்மம் மயிரிழையும் பிசகாது. உமது பாவங்களை ஒன்று விடாமலும் ஒன்று மிகைபடாமலும், புராண விதிமுறையில் சீர்தூக்கிப் பார்த்த பின்புதான், உமது விஷயத்தில் தீர்ப்பு சொல்லப்படும். நீரும் மறுத்துப் பேசலாம். பிரபஞ்சம் சிருஷ்டித்த முதல் ஒரு ஜீவனைப்பற்றியும் சித்திரகுப்தர் தவறி எழுதியது கிடையாது.

ஏட்டுக் கட்டைப் பார்த்தால் நீர் பல நாள் நமது அதிதியாகத் தங்கவேண்டுமென்று தோன்றுகிறது. எது, ஸப்த நரகங்களையும், அக்கிஜ்வாலை, எண்ணெய்க்குளம், கழுகுமலை, இரும்புக்கூண்டு, சிறுவை— எல்லா வசதிகளையும்

ஒருகை பார்த்து விடுவீர் போலிருக்கிறது.' இந்தப் பேச்சைக் கேட்டு ஸபையிலுள்ள யம தூதர் யாவரும் சந்தோஷத்தினால் கரகோஷம் செய்தனர். வாமனவதாரமையரைப் பிடித்து நின்ற யமதூதரிருவருள் ஒருவன்—'பலே பேஷ் பேர்வழி!' என்று அடக்கமுடியாத உத்ஸாகத்துடன் கூறி, அவரை முதுகில் தட்டிக் கொடுத்தான். ஏனென்றால் இந்த யம தூதர் யாவர்க்கும் நாகங்களில் வேறு வேறு ஸ்தானங்கள் ஏற்பட்டிருந்தன. இதனால் புதி தாகவந்த ஜீவர்களைப்பங்கிட்டுக் கொள்வதில் இவர்களுக்குள் போட்டி, பொறாமை யதிகம் ஸாதாரணமாய் பாபாத்மாக்கள் நீடித்து வாசம் செய்வது மில்லை, எல்லா ஸ்தாபனங்களை யும் அநுபவிப்பதுமில்லை. முந்தின நாள்தான் திருட்டுத்தொழிலில் வாழ்வெல்லாம் ஈடுபட்ட மூன்று மறவர் விஷயத்தில்—'அக்நிஜ்வாலை, நூறுவருஷம்' என்று தீர்ப்புச் சொல்லப்பட்டது. இதுபற்றி எண்ணெய்க்குளம், காய்ச்சின ஈயக்கிணறு முதலிய ஸுகஸ்தலங்களை மேல்பார்வையிடும் யமதூதர்க்கு மனஸ்தாபம். தவிரவும், கலிபழுத்ததுதான் பாக்கி, ஆயிரம், இரண்டாயிரமென்ற வருஷக் கணக்கெல்லாம் போய், நூறு ஐம்பதென்பது ஸகஜமாய் விட்டது. யமதூதருள் முணு முணுப்பும் அதிருப்தியும் நாள் நாளாக வளர்ந்தன.

வாமனவதாரமையர் இதற்குள் சிறிது பயம் தெளிந்து மனதை திடப்படுத்திக்கொண்டார். 'எப்படியிருந்தாலும் நாம் வாதம் செய்யக்கூடும், எதிர்கேள்வி கேட்கக்கூடும்; நமது பழைய ஸாமர்த்தியத்தை முற்றிலும் இழந்துவிடவில்லை' என்றெண்ணி தொண்டையைக் கனைத்துக்கொண்டு உரத்துப் பேசினார்: 'மஹாப்பிரபோ! இது நியாயஸ்தலமென்று அச்சம் தவிர்த்தேன். உறுதி கொண்டேன். நியாயப்பிரகாரம் நான் குற்றவாளியானால் தண்டனை பெறச் சித்தமாயிருக்கிறேன். முதலில் நீதிமுறையை அனுசரித்து, வாதியான சித்திரகுப்தரின் வழக்குப் பத்திரத்தின் பிரதியொன்றை எனக்கு அளிக்குமாறு நியாயஸ்தலத்தை வேண்டுகிறேன். இரண்டாவது, தயவு செய்து மூன்று மாதம் தவணை கொடுத்தால், எனது மறுப்பு 'ஸ்டேட்மென்டை' தாக்கல் செய்துகொள்கிறேன், பிறகு விசாரணை தொடங்கலாம்.'

யமனுக்குக் கோபம் வந்துவிட்டது. புருவங்களை நெறித்தான். பற்களைக் கடித்தான். ஸபாமண்டபம் இருண்டு யமராஜனின் வாயினின்றும் நெருப்புப் பொறிகள் வெளிக்கிளம்பின. ஸிம்ஹாஸனம் அதிர்ச்சியுற்றது. ஸபையோரனைவரும் பயந்து தலைகுனிந்து நின்றனர்.

## 2

வாமனவதாரமையரின் விசாரணைக்காகப் பெரும் ஸபை கூடியது. அவர் புகழ் எல்லா நரகங்களுக்கும் பரவிவிட்டதால், மேலதிகாரிகளிடமிருந்து பிரத்யேக உத்திரவு பெற்றுக் கொண்டு யமதூதர் வந்து மொய்த்தனர். விசேஷமாகச் சித்திரகுப்தர் தமது 'குமாஸ்தாக்கள்' மூவருடன் வந்திருந்தார். பழைய ஏட்டு 'ரிகார்டுகள்' பல ஒரு தந்தப் பலகையில் குவிந்திருந்தன.

யமராஜனுக்கு நிர்மலமான வேனிற்கால வானத்தில் ஓரிரண்டு சாம்பல் நிற மேகங்கள் தங்குவதுபோல் கோபக்களை இன்னும் முற்றும் மாறவில்லை. முறைப்படி விசாரணை ஸபை மந்திரங்களைச் சில வேதியர் கூறியபின் சித்திரகுப்தர் எழுந்து நமஸ்கரித்து, ஏடுகளைப் புரட்டிக்கொண்டே பேசலானார்.

'இவர் பிறந்தது ஆக்கையூரில். இவர் முன்னோர் அஷ்டஸஹஸ்ர பிராமணவகுப்பைச் சேர்ந்தவர். தாயாரில்லை, தகப்பனார் அத்யயனம் செய்பவர், சில நிலங்களுமுண்டு. ஒரே பிள்ளை. இவரைத் தகப்பனார் பிரயாசையுடன் 'இங்கிலீஷ்' பள்ளியில் சேர்த்துப் படிப்பித்தார். இவர் குழந்தைப் பருவத்திலேயே சூது, வாது, வஞ்சகம், பொறாமை முதலிய துர்க்குணங்களை மிகுதியாகக் காட்டினார். ஸ்வபாவத்தில் அஸுரரென்றே சொல்லவேண்டும். எட்டு வயதில் வண்ணாரப்பூச்சிகளைப் பிடித்து ஊசியால் குத்தி வருத்தியதுண்டு. வீட்டுப்பசுவின் மூக்கில் முள்ளைவிட்டு மிரட்டுவார். தம்மினும் மெலிந்த பையன்களை அடித்து, அட்டஹாஸம் செய்து, காலணா அரையணா பிடுங்கி விடுவார். 'மெட்ரிகுலேஷ'னில் இரண்டு முறை தவறினார். மூன்றாம் முறை வெகு ஸாமர்த்தியமாகத் திருட்டுத்தனமாய்ச் சில புத்தகங்களை வேஷ்டியுள் மறை

த்து, அவற்றைப் பரீக்ஷையில் உபயோகித்து 'பாஸ்' செய்தார். உபாத்தியாயரும் இவர் தந்திரங்களைக் கண்டு நடுங்கி யிவரை 'பெருச் சாளி' என்றழைப்பது வழக்கம்.'

'மஹாப்பிரபோ! சில குறுக்குக் கேள்விகள் கேட்க விரும்புகிறேன்' என்றார் வாமனவதாரமையர், வெகு பவ்வியமான குரலில். யமராஜன் 'ஸரி'யென்று தலையசைத்தான்.

வா. ஐ :—சித்திரகுப்தரே! உமக்கு வயதென்ன?

சி. கு :—(சிறிது நகைத்து) நாற்பதினாயிரத்துக்கு மேமேலேதோ' ஆகிறது; மறந்துவிட்டேன்.

வா. ஐ :—(உரத்த குரலில்) கேள்வி கேட்டால் உமது ஓட்டைப் பல்லைக் காட்டாமல் ஸரியாகப் பதில் சொல்லும். ஓய், உமது வயதென்ன?

சி. கு :—(சிறிது மிரண்டு தாழ்ந்த குரலில்) ஏகதேசமாகத்தான் தெரியும்; அளவாய்த் தெரியாது.

வா. ஐ :—அதிருக்கட்டும். நீர் எப்பொழுதாவது சிறு பிள்ளையாகப் பள்ளியில் படித்ததுண்டா?

சி. கு :—இல்லை, பிரம்மதேவன் என்னை இப்படித்தான் சிருட்டித்தான்.

வா. ஐ :—என்ன, இப்படிக் கிழப்பிணமாகவா? (ஸபையோர் நகைத்தல்: யமராஜன் தலை குனிந்தான்.) அதிருக்கட்டும், நீர்தான் பள்ளிக்குப் போகவுமில்லை, சிறுபிள்ளையாக விளையாடவுமில்லையே. பையன்கள் சேஷ்டையில் எது உண்மையில் துஷ்கிருத்தியம், எது வெறும் பாலர் அஞ்ஞானம் என்று உமக்கு எப்படித் தெரியும்?

சி. கு :—சாஸ்திரப் பிரகாரம்...............

வா. ஐ :—ஓய், நான் சாஸ்திரம் கேட்கவில்லை. உமக்கு ஸ்வயமாகத்தெரியுமா என்று கேட்டேன்.

சி. கு :—[பதிலில்லை.]

வா. ஐ :—அதிருக்கட்டும், நான் எத்தனை வண்ணாரப்பூச்சிகளை ஊசி குத்தித் துன்புறுத்தினேன்?

சி. கு :—ஆஹா, சொல்லிவிடுகிறேன். ஹிரண்யகர்ப்பா! அந்தப் பழைய ஏட்டுப்பிரதியைச் சற்றுப் பார்த்து......................

வா. ஐ :—ஓய், உம்மைக் கேட்டேனா, உமது 'குமாஸ்தா'வைக் கேட்டேனா? இப்பொழுது பழைய பிரதிகளை யெல்லாம் புரட்ட அவகாசமில்லை. உம்மால் நேரே சொல்லமுடியுமா?

சி. கு :—அதெப்படி முடியும், முடியாது.

வா. ஐ :—இருக்கட்டும். நான் மெலிந்த பையன்களை அடித்துப் பணம் பிடுங்கினதாகச் சொன்னீரே? ஒரு உதாரணமாவது சொல்ல முடியுமா?

சி. கு :—ஆஹா! 1897-ம் வருஷத்தில் நீர் நாகநாதையர் பையன் முத்துவைப் பலமாய் அடித்து, அரை அணுவும் ஒரு பம்பரமும் பறிக்கவில்லையா?

வா. ஐ :—நீர் என்னைக் கேள்வி கேட்க வேண்டாம். முத்து அப்படிச் சொன்னானக்கும். நாகநாதையர் உமக்கென்ன உறவு?

சி. கு :—(திடுக்கிட்டு) எனக்குப் பல்லாயிரம் ஜனங்கள் பல்லாயிரம் வகையில் உறவாயிருக்கலாம். அவர் கணக்கெல்லாம்கூட நான்தானே எழுதுகிறேன். அதற்கும் இதற்கும்..............

வா. ஐ :—(தன் முன்னிருந்த மாச்சட்டத்தை ஓங்கி அடித்து) கேள்விக்கு பதில் சொல்லும்.

சி. கு :—நாகநாதையர்—ஸபிண்ட முறையில்—தாயாதி......தான்.

வா. ஐ :—நினைத்தேன். நான் 'மெட்ரிகுலேஷன்' பரீக்ஷையில் திருட்டுத்தனமாய்ப் புஸ்தகத்தை ஒளித்துப்போய் உபயோகம் செய்ததாகச் சொன்னீரே. உமக்கு ஸ்வயமாய்த் தெரியுமா?

சி. கு :—இதெல்லாம் ஞானதிருஷ்டி.

வா. ஐ :—ஓஹோ! ஆனால் எதற்கு மூக்குக் கண்ணாடி யெதற்கு? (சபையோர் சிரித்தல்.) நீர் எப்பொழுதாவது பரீக்ஷையில் விடையெழுதி யிருக்கிறீரா?

சி. கு :—நான்தான் எப்போதும் இம்மாதிரி—............

வா. ஐ :—ஓ, ஸரி, ஸரி. ஆனால் உமக்குப் பரீக்ஷை சமாசாரம் ஒன்றும் தெரியாதுபோலிருக்கிறது. பரீக்ஷையில் தேறுவதற்கு வேண்டிய குணங்கள் எவையெவை?

சி. கு :—முக்கியமாய் ஸாமர்த்தியமும், ஞாபகசக்தியும்.

வா. ஐ :—அப்படி வந்தீரா வழிக்கு? நான் செய்த பிரகாரம் புத்தகத்தை வேஷ்டியுள் ஒளித்து மேல்பார்வை யிடுபவர் சிறிதேனும் சந்தேகப்படாமல் உபயோகிக்க ஸாமர்த்தியம் வேண்டாமா? அவ்வப்போது அந்தக் கேள்விகள் பிரகாரம் துரிதமாகவும் ஜாக்கிரதையாகவும் புஸ்தகத்தைப் புரட்டிப் பார்க்க ஞாபகசக்தி வேண்டாமா? வேண்டுமா, வேண்டாமா ஒரு வார்த்தை.

சி. கு :—வேண்டும். ஆனால், மஹா அதர்மமான முறையில்...............

வா. ஐ :—ஓ, அதர்மமோ? ஸரி, பரதகண்டத்தில் பிராம்மண குலத்தில் பிறந்த என்னை, இங்கிலாந்தில் 1066-ம் வருஷத்தில் மது மாம்ஸங்களைப் புஜிக்கும் காட்டுமிராண்டியான 'வில்லியம்' என்ற அதமசூத்திரனின் செயல்களைப்பற்றி நீசபாஷையான ஆங்கிலத்தில் எழுதும்படி வற்புறுத்தியது தர்மமோ, அதர்மமோ? என்ன தர்மமையா?

சி. கு :—[பதிலில்லை.]

வா. ஐ :—போனால் போகிறது. நீர் நமக்கு எழுதிக் கொடுத்த "சார்ஜ்" ஷீட்டில், 'முப்பது நாற்பது வயதில் வீட்டில் சம்சாரம், குழந்தைகள் இருந்த போதும்கூட இவர் தெருத்திண்ணையில் உட்கார்ந்து கொண்டு ஸ்நானத்திலிருந்து ஈரப்புடவையுடன் வீட்டிற்குச் செல்லும் குலஸ்திரீகளை உற்று நோக்குவார், ஓரிரண்டு முறை கண்ணும் சிமிட்டுவார்' என்று கண்டிருக்கிறதே. உண்மைதானா, உமக்குத் தெரியுமா?

சி. கு :—ஆமாம், இது கேவலம் ஸத்தியம். ஞானதிருஷ்டியில் தெரிகிறது.

வா. ஐ :—சித்திரகுப்தரே, நான் நரகாவஸ்தையிலிருப்பவன். ஸத்தியமாகச் சொல்லும். அவ்வாறு நடந்தது உமக்கு நன்றாகப் பிரத்தியக்ஷமா?

சி. கு :—ஸந்தேகமில்லை. பலமுறை ஞானதிருஷ்டியில் தீர்க்கமாய் கவனித்திருக்கிறேன்.

வா. ஐ :—ஸபையோர்களே, ராஜனே, நீங்களே தீர்ப்புச் சொல்லவேண்டும். இவர் பிறவிக்கிழவர். காமக்குரோதாதிகளைக்கடந்தவர். நான் கேவலம் மனுஷ்யன், சரீராபிமானமும் சபலபுத்தியுமுடையவன். பாருங்கள், இவரே அந்தக் குலஸ்திரீகளை ஞானதிருஷ்டியில் தீர்க்கமாகவும் ஸ்பஷ்டமாகவும் கவனித்திருக்கிறாராம். ஒத்துக்கொள்கிறார். இல்லாமற்போனால் எப்படி அவர் அணிந்த ஈரப்புடவை முதல் விவரம் தெரிந்தது? நான் ஊனக்கண்ணால் செய்த வேலைக்கு வந்து விட்டதாம பாவம். (எல்லோரும் சிரித்தல்.)

3

ரௌரவம் என்ற கோர நரகத்தின் தலைவனை ததிமுகன் என்ற உத்யோகஸ்தன், வேலைக்கு விரைந்து வரும் ஒரு யமதூதனைக் கேட்டான்—'வாமனவதாரமையர் விசாரணை என்னவாயிற்று? எத்தனை வருஷம், எந்தெந்த நரகங்கள்? நான் வரவேண்டுமென்று மிகவும் ஆசைப்பட்டேன். ஆனால் இந்தப் பாழும் ஈயக்கிணறுகளில் இன்று வேலை யதிகம்.'

யமதூதன்—'ஒன்றுமில்லை. விசாரணை முடிந்த பின் சித்ரகுப்தர் பல்வலியென்று ஆயிரம் வருஷத்துக்கு 'லீவு' எடுத்துக்கொண்டிருக்கிறார். வாமனவதாரமையரை அவருக்கு பதிலாக நியமித்திருக்கிறார்கள்' என்றான்.

# கீதப் பகுதி

## ஸ்ரீ தியாகையர் அவர்களது ஸம்ஸ்கிருத கீர்த்தனைகள். 3.

(ஸ்ரீ. ய. மஹாலிங்க சாஸ்திரிகள். M.A., B.L.,)

### ரவிசந்த்ரிகா.

பல்லவி.

நிரவதி ஸுகத! நிர்மலரூப! நிர்ஜிதமுனிசாப!

அனுபல்லவி.

சரதிபந்தன! நதஸங்க்ரந்தன!
சங்கராதி கீயமான! ஸாது மானஸஸுஸதன!

சரணம்.

மாமவ! மரகத! மணிநிபதேக! ஸ்ரீரமணீ லோல!
ச்ருதஜனபால! பீமபராக்ரம!
பீமகரார்ச்சித! தாமஸராஜஸ மானவதூர!
த்யாகராஜ நுதசரண!

*நிரவதிஸுகத—கரைகடந்த ஸுகத்தை அளிப்பவனே!*
*நிர்மலரூப—மாசற்ற உருவமுடையவனே!*
*நிர்ஜிதமுனிசாப—பரசுராமனின் வில்லை ஜயித்தவனே!*
*சரதிபந்தன—சமுத்திரத்தை அணைபோட்டுக் கட்டினவனே!*
*நதஸங்க்ரந்தன—தேவேந்திரனால் வணங்கப்பட்டவனே!*
*சங்கராதிகேயமான—பரமசிவன் முதலியவர்களால் ச்லாகிக்கப்பட்டவனே!*
*ஸாதுமானஸஸுஸதன—ஸாதுக்களின் மனதில் குடியிருப்பவனே!*
*மரகதமணிநிபதேக—பச்சை மணியைப்போன்ற தேகமுடையவனே!*
*ஸ்ரீரமணீலோல—லக்ஷ்மீதேவியிடம் காதலுடையவனே!*
*ச்ருதஜனபால—ஆச்ரிதர்களை ரக்ஷிப்பவனே!*
*பீமபராக்ரம—(சத்ருக்களுக்கு) பயங்கரமான பராக்ரமமுடையவனே!*
*பீமகரார்ச்சித—ஈச்வரனால் பூஜிக்கப்பட்டவனே!*
*தாமஸராஜஸ மானவதூர—தமோகுணம் ரஜோகுணம் நிரம்பிய மனமுடையவர்களால் அடையத்தகாதவனே!*
*த்யாகராஜநுதசரண—தியாகராஜனால் வணங்கப்பட்ட திருவடிகளையுடையவனே!*
*மாம் அவ—என்னை ரக்ஷிப்பாய்.*

இக்கீர்த்தனத்தினால் ஸ்ரீராமசந்திரனின் பராக்கிரமத்தையும் அழகையும் தியானம் செய்கிறார் ஐயர் அவர்கள். வழக்கம்போல் இதுவும் ஸம்போதனங்கள் நிறைந்த கீர்த்தனை. ஸம்ஸ்கிருத பதங்கள் பெரும்பாலும் இறுதியில் விஸர்க்கமுடையனவாயும், நினைத்தபடி வளைக்கக்கூடாதனவாயும் இருப்பதுபற்றி ஐயர் அவர்கள் தன்னுடைய ஸம்ஸ்கிருத கீர்த்தனங்களை ஸம்போதன மயமாய்ச் செய்துவிட்டார்போலும். மேலும் ஸம்ஸ்கிருத கீர்த்தனைகளில் அதிக "ஸங்கதிகள்" அமைப்பதும் அரிது. இதனால்தான் தெலுங்குக் கீர்த்தனைகளைப்போல் ஸம்ஸ்கிருத கீர்த்தனைகளை ஐயர் அவர்கள் அவ்வளவு மனோதர்மம் நிறைந்தபடியும் ஸ்வதந்திரமாயும் இயற்றவில்லை என்று தோன்றுகிறது. ஆனாலும் ராகபாவத்தை ஒட்டிப் பதங்களை அமைத்திருக்கிறார். அர்த்தத்திற்கு அனுரூபமான ராக அமைப்பும் தந்திருக்கிறார் என்பதை நாம் இங்கு விவரிப்போம்.

இது ரவிசந்த்ரிகை என்று பெயரிடப்பட்ட ராகம். இதை நாம் அதிகம் பாடிக் கேட்டதில்லை. பைரவி காம்போதி முதலிய ராகங்களைப்போல் இதன் யதார்த்த ஸ்வரூபத்தை நாம் அறியோம். "இந்த ராகத்தின் ஜீவகலை என்ன? அது கேட்போர்களை எவ்விதம் ஆனந்திக்கச் செய்கிறது? எந்த ரஸத்திற்கு அநுகுணமானது?" என்று அனுபவத்திலிருந்து நாம் சொல்லமுடியாது. ஆனால் இந்த ராகம் ஐயரவர்களுக்குப் பரிசயமானதாய் இருந்திருக்கவேண்டும். இல்லையேல் இதில் அவர் எப்படிக் கீர்த்தனம் இயற்றினார். ராகத்தைப் பாடிப் பாடியல்லவா தக்கவாறு கிருதியை அமைக்கவேண்டும். ஆகையால் ஐயரவர்கள் இந்த ராகத்தை எப்படி அநுபவித்தார் என்று இக்கீர்த்தனையின் உட்கருத்தினின்று தெரிந்து கொள்ள நாம் யத்தனிப்போம்.

சுருக்கமாக இக்கீர்த்தனையில் வீரமும் சிருங்காரமும் வெகு ரஸமாக ஒன்றுசேர்ந்திருக்கின்றன. "நீரஜாக்ஷி கைநீரதிதாடின நீ கீர்த்தி" வின்னுனரா? என்றதின் பாவம் இதில் இருக்கிறது. ஸ்ரீராமன் நிர்மல ரூபமுடையவர்; மரகதமணி போன்ற பச்சை நிறமுடையவர்; ஸீதாரூபமுடைய ஸ்ரீதேவியிடம் காதல் கொண்டவர். ஸமுத்திரத்தையும் அணையால் கட்டித்தன் பத்தினியை அபஹரித்த துஷ்டனை நிக்கிரஹம் செய்து வென்று ஸகல தேவர்களாலும் ஸ்தோத்திரம் செய்யப்பட்டு ஸாதுக்களை

ரக்ஷித்த மஹாபுருஷன். இந்தக்கீர்த்தனையில் ஒருவாறு ராமாயணக்கதை பூர்த்தியாக சொல்லப்படுகிறது. "ஏகச்லோக ராமாயணம்" என்பதுபோல் இது ஏககீர்த்தனை ராமாயணம். இதில் பல்லவி அநுபல்லவிகளில் சொல்லப்பட்ட கதையே சரணத்தில் வேறு சில விசேஷங்களுடன் திருப்பிச் சொல்லப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. பாருங்கள்—பல்லவியில் "நிர்மலரூப" சரணத்தில் "மரகத மணி நிபதேக" என்று முதலில் ரூபமும் பின்பு அந்த ரூபத்தின் விசேஷாம்சமான பச்சை நிறமும் சொல்லப்படுகிறது. மேலும் ரூபத்தைக் குறித்ததின் பலனாக சிருங்காரமும் "ஸ்ரீரமணீ லோல" என்பதால் சரணத்தில் வருணிக்கப்படுகிறது.

"நிர்ஜித முனி சாப" "சரதிபந்தன" என்ற பல்லவி அநுபல்லவி பதங்களுக்கு எதிரிடையாக சரணத்தில் "பீமபராக்ரமம்" என்ற பதம் தோன்றியிருக்கிறது. அப்படியே அநுபல்லவியிலுள்ள "நதஸங்க்ரந்தன" "சங்கராதி கீயமான" என்ற ஸம்போதனங்களுக்கு ஏற்றபடி சரணத்தில் "ச்ரிதஜனபால" "பீமகாரார்ச்சித" என்ற பதங்கள் அமைந்திருக்கின்றன. அநுபல்லவியிலுள்ள "ஸாது மானஸ ஸுஸதன" என்ற பதத்தின் அர்த்தத்தைச் சரணத்தில் "தாமஸ ராஜஸ மானவதூர" என்ற பதம் விசேஷித்துப் புலப்படுகிறது ஆஹா! இயற்கை அமைப்பைப்போல் என்ன சாதுர்யமான அமைப்பு!

இங்கு "நிர்ஜித முனி சாப" என்பதற்கு நாம் கூறியுள்ள பொருளைப்பற்றி ஒரு வார்த்தை சொல்வதவசியமாகிறது. இப்பதத்திற்கு அநேகர் கௌதம முனியின் சாபத்தைத் துலைத்து அஹல்யையைக் காப்பாற்றியவரே என்று அர்த்தம் சொல்லுகிறார்கள். இதைவிட ஸரளமாய்க் கிடைப்பது நாம் இங்குக் கூறியுள்ள பொருள். அதாவது, ஜயிக்கப்பட்ட பரசுராம முனியின் சாபத்தை, வில்லை—உடையவரே என்பது. கௌதமர் சாபத்தை இவர் ஜயித்தார் என்பதும் அதற்கு அஹல்யா சாப விமோசனம் தாத்பரியமென்பதும் கொஞ்சம் "க்லிஷ்ட கல்பனை"யாகத் தோன்றுகிறது. மேலும் வீரரஸத்தை முக்கியமாகக் கொண்டதும் பராக்கிரமத்தினால் ஸ்ரீராமன் அடைந்த ஜயங்களைக் குறிப்பிடும் நோக்கமுடையதுமான இந்த கிருதியில் பரசுராம ஜயம்தான் பொருந்தினதென்று தோன்றுகிறது.

இவ்விதம் ஸாஹித்யத்தின் உட்கருத்தை ஆராய்ந்தபின் இதற்கும் ராகபாவத்திற்கும் இருக்கும் பொருத்தத்தை விசாரிப்போம்.

முதல் பதத்திலேயே ஐயர் அவர்கள் இந்த ரவிசந்திரிகை என்று வழங்கப்பட்ட ராகத்திற்குரியதான பாவரஸத்தைத் தெரிவித்திருக்கிறார். நிரர்க்களமான ஆனந்தப்பெருக்கை அளிக்கக்கூடியது ரவிசந்திரிகை. ஆகையால் ஸந்தோஷ பாவரஸத்திற்கு அநுகுணமானது. "நிரவதிஸுகத" என்று ஸ்ரீராமனை அழைக்கிறார். லோகத்தில் துஷ்டநிக்கிரஹம் செய்து சிஷ்டபரிபாலனம் செய்யும் மஹாபுருஷன் "நிரவதி ஸுகதன்" ஆகிறான். அவ்விதம் துஷ்டநிக்கிரஹம் சிஷ்டபரிபாலனம் செய்த வரலாறுதான் கீர்த்தனத்தில் வருணிக்கப்படுகிறது. வீரனல்லவா ஜனங்களுக்கு அளவில்லா ஆனந்தத்தை அளிக்கக்கூடியவன். வீரபுருஷனின் ஆதரவின்கீழ்த் தன்னை ரக்ஷித்துக்கொள்ளச் சக்தியற்ற கோடிக்கணக்கான மக்கள் லோகயாத்திரையை நடத்தி வருகிறார்கள். முன் ராவணன் செய்த அட்டூழியத்தை எவராலும் தடுக்கமுடியவில்லை. தேவமனுஷ்ய திர்யக் ஜாதிகள் எல்லாம் தத்தளித்தன. அக்கொடும் பாவியை மஹாவீர புருஷனான ஸ்ரீராமன் நிக்கிரஹம் செய்து மூன்று லோகங்களையும் ரக்ஷித்தார். அந்த விஜயத்தால் இந்திரன் ரகுபதியை வணங்கினான்; ஈச்வரனும் பூஜித்தார். சந்தோஷம் நிரம்பிய இச்செய்தியை உணர்த்தும் இந்தக் கீர்த்தனம் சந்தோஷக்கலை பொங்குகிறதாய் அமைக்கப்பெற்றிருக்கிறது. ரவிசந்திரிகையில் இயற்றப்பட்ட மற்றொரு க்ருதியும் இவ்விதமான பாவரஸத்தையே உடையதாயிருப்பது கவனிக்கத்தக்கது. "மாகேலரா விசாரமு" "எனக்கு ஏன் விசாரம்" என்று உள்ளம் பூரித்து ஐயர் அவர்கள் சகல பாரங்களையும் ஸ்ரீராமனது திருவடிகளில் தள்ளிவிட்டு நிம்மதியாய் இந்த ராகத்தில் மறுபடி பாடியிருக்கிறார். லோகத்தில் ஸுகதுக்கங்கள் மனிதனின் மனோநிலைமையைப் பொறுத்தவை. ஒருவனுக்கு ஸுகத்தைத் தரக்கூடியது மற்றொருவனுக்குத் துக்க

த்தைக் கொடுக்கலாம். விரஹிகளுக்குச் சந்தனம், சந்திரன், தென்றல், குயிலின் கானம், புஷ்பங்கள் இவை துன்பம் தருவனவென்று கவிகள் வருணிப்பார்கள். உதாஹரணமாய், ஸ்ரீஜயதேவ கவி ராமனின் விரஹதாபத்தை இவ்விதம் தெரிவிக்கிறார்:

*ஸௌமித்ரே நனு ஸேவ்யதாம் தருதலம்*
*சண்டாம்சுருஜ்ஜ்ரும்பதே*
*சண்டாம்சோர் நிசி கா கதா ரகுபதே*
*சந்த்ரோதயமுன்மீலதி*
*வத்ஸைதத் விதிதம் கதம்னுபவதா*
*தத்தே குரங்கம் யத:*
*க்வாஸி ப்ரேயஸி ஹா குரங்கநயனே*
*சந்த்ரானனே ஜானகி.*

இரவில் நிலா வீசுகிறது; ஸ்ரீராமனுக்குச் சந்திரிகை நெருப்பை வாரி வீசும் சூரியவெப்பமாய் மாறியிருக்கிறது. "ஹா லக்ஷ்மணா! வெய்யில் பொறுக்கமுடியவில்லையடா! ஒரு மர நிழலை அடைவோம் வா" என்று கூவுகிறார் ராமபிரான். லக்ஷ்மணன் அண்ணாவின் பரிதாப நிலையைப் பார்த்து மிகவும் துக்கிப்பவராய்த் தெரிவித்துக்கொள்கிறார்: "ஹே ரகுபதே! இரவில் சூரியன் உண்டா? என்ன நீங்கள்கூட இப்படிப் பிரமிக்கிறீர்களே! சந்திரன் அல்லவா ஒளி வீசுகிறான்" என. அப்போது ஸ்ரீராமன் "அப்பா, குழந்தாய்! எதைக்கொண்டு இப்போது பிரகாசிப்பவன் சந்திரன் என்று நீ தெரிந்துகொண்டாய்?" என்று கேட்கிறார். தாபத்தைத் தருவதால் இது சூரியனே என்று அவருடைய தாத்பரியம். இதற்கு பதில் சொல்லும் லக்ஷ்மணனும் குளிர்ந்த கிரணங்களுடையவனாதலால் சந்திரன் என்று சொல்லாமல் 'களங்கம் மத்தியில் தோன்றுவதால் இது சந்திரன்" என்று போதிக்கிறான். இவ்விதம் இருப்பது துக்கிகளின் நிலைமை. ஸுகிகளுக்கோ சூரியப்பிரகாசம் கூடச் சந்திரிகைபோல் குளிர்ந்து விடுகிறது. அதை ரவிசந்திரிகை என்று சொல்லாம் அல்லவா? இப்படிப் பொருள் கொண்டதாக இல்லாவிட்டால் "அக்னினா ஸிஞ்சதி" "நெருப்பினால் நனைக்கிறான்" என்றதுபோல் 'ரவிசந்திரிகை' என்பதும் பிதற்றலாகும். ஆகையால் இப்பெயர் இந்த ராகத்தின் மர்மத்தைத் தெரியப்படுத்துகிறது. இந்த மர்மத்தை ஸ்ரீ தியாகையர் அவர்கள் தன் ஸாஹித்தியத்தில் ததும்பும் பாவரஸத்தினால் வெளிப்படுத்தியிருக்கிறார். ஸந்தோஷம் ததும்பும் இந்த மஹானின் உள்ளம் ரவிசந்திரிகையாகப் பெருகியது. இவர் ஸுகபாரவச்யமானது ஒரு கடும் கோடைக்கானலில் அனலையும் குளிர்ந்த நிலவாக அனுபவிக்கச் செய்யவல்லது. அந்த மனோநிலைமையில் அவர் "நிரவதி ஸுகத" என்று பாடினார்.

*

இந்த ராகத்திற்கு ஏற்கெனவே இந்தப் பெயர் இருந்திருந்தால் இதன் விசேஷ ரூபத்தை அறிந்து ஐயர் அவர்கள் இதில் இவ்வித பாவம் பொருந்திய கீர்த்தனத்தை இயற்றினாரென்றும், இப்பெயர் இந்த ராகத்திற்கு ஐயர் அவர்களுக்குப்பின் ஏற்பட்டிருக்குமானால் இந்த மர்மமறிந்து பெயரிட்டவர் மஹாமேதாவி என்றும் நாம் கொள்ளவேண்டும்.

---

* ரவி சந்திரிகை என்ற பெயருக்கு பிரம்மஸ்ரீ மஹாலிங்க சாஸ்திரிகள் வெகு அழகாகப் பொருள் கூறியுள்ளார்கள். ஆனால் சாஸ்திரத்திலாவது, ஸம்பிரதாயத்திலாவது இப் பெயருள்ள ராகம் இருப்பதாகத் தெரியவில்லை. ஈசமனோஹரி என்ற ராகத்தையே பிற்காலத்தவருள் ஒரு சிலர் 'ரவிசந்திரிகை' என்றழைத்த காரணமாக, இப்பெயர் தற்காலத்தில் வழங்கி வருகிறது போலும். 'ரவிசந்திரிகை' யென்றால் ரவிசந்திரிகையான ஈசமனோஹரி என்று கொள்வதே பொருத்தமுடையதாகும்—பத்திராதிபர்.

# ஸ்ரீராம சுகந்தம்.

(விசாரதன் எழுதியது.)

பரம் பொருளின் குணங்களை எடுத்துக் கூறும் உபநிடதமொன்று அதனை சர்வகந்த முடையது சர்வரசமுடையது என்று அறுதியிட்டது. எனவே, மோப்பத்தால் அறிந்து இன்புறக் கூடியது பரம்பொருள் என்று அறிகிறோம். அளவுடை ஐம்புலன்களால் அறிய முடியாது என்னும் கருத்தோடு மாறுபடுவது இக்கூற்று. இதற்குக் காரணம் இவ்வுபநிடத வாக்கியத்தின் நோக்கம் அவதாரங்களிலேயும் தன் நிலை குன்றாத பரம்பொருளின் வடிவத்திலே யாதலால். இந்த இரகசியத்தை விளக்கும் வகையிலே ஸ்ரீராமாயணத்திலே சில வருணனைகள் உள்ளன.

மாரீசன் மாயமான் வடிவுகொண்டு பஞ்சவடியின் அருகாமையிலே இதர மான்களோடு சஞ்சரிக்கிறான். அந்த மான்களும் இதர மிருகங்களும் தம்மிடையே தோன்றிய அபூர்வப் பிராணியை உற்று நோக்குகின்றன; சற்று நெருங்கிவந்து மோந்து பார்க்கின்றன; உடனே பத்து திக்குக்களிலும் பாய்ந்தோடுகின்றன. ஏன் என்று வால்மீகி முனிவர் விரித்துக் கூறவில்லை. நிர்மல இதயமுடைய மிருகங்களுக்கு மோப்பத்தால் உண்மையை அறியும் சக்தி அதிகம். மாரீசனுடைய மாயாசரீரத்தினின்றும் ராக்ஷஸகந்தம் வீசுவதை இயற்கையறிவுள்ள மான்கள் அறிந்தன என்பது வால்மீகி முனிவரின் கருத்துப் போலும்.

இது போலவே, ஸ்ரீராமனை அணுகுவோர் ஒருவகை சுகந்தத்தை அனுபவிப்பர். "கமலப்பூ நாறுமோ?" என்று ஆண்டாள் வெண் சங்கத்தை வினவுகின்றாள் அன்றோ? அவளைப் பெற்றெடுத்த பெரியாழ்வாரும் கண்ணன் தயிருண்ட வாய் தாமரைப்பூ நாறும் என்பர். கண்ணனுடைய திருமுகமண்டலத்தைப்போல, ஸ்ரீராமனுடைய திருமுகமண்டலமும் உத்தமமான பதுமநிசுவாசத்தோடு விளங்குவது. பலகாலும் உச்சி மோந்து இவ் வுத்தம கந்தத்தை அனுபவித்த கோசலாதேவி தன் மகன் காட்டிற்குப் புறப்படவே, "பதுமவண்ணமுடையதாயும் சுகந்தம் பரிமளிக்கும் கேசாந்தங்களை யுடையதாயும் தாமரைக் கண்களை யுடையதாயும் உத்தமமான பதுமநிசுவாசத்தோடு கூடியதாயுமுள்ள ராமன் திருமுகத்தை இனி எப்பொழுது காண்பேன்" என்று ஏங்குகிறாள். இவளைப்போலவே, ராமசுகந்தத்தை அனுபவிக்கும் பாக்கியம் பெற்ற தசரத மன்னனும் "சரத்காலச் சந்திரனையும் கமலப்பூவையும் ஒத்து சுகந்தத்தோடு கூடிய அம்முகத்தைக் காண்போர் தன்னியர் ஆவர்" என்று தமக்கு அவ்வானந்தம் இனிக்கிடையாதே என்று சோகிப்பர். "விசுவாமித்திர முனிவரிடம் ஸ்ரீராமனை சமர்ப்பித்தபோது தசரதமன்னன் தன் பிரிய புத்திரனை உச்சிமோந்து ஒரு முறை இச் சுகந்தசுகத்தை அனுபவித்தார்" என்று குறிப்பால் உணர்த்துவர் வால்மீகிபகவான். அதனைக் கண்ட கௌசிகரும் தாடகாவதமானதும் இராமனை மெச்சும் பாவனையாய் உச்சிமோந்து பரமசுகத்தை அடைந்தார் என்று ராமசுகந்தத்தின் அருமைப்பாட்டினைத் தோற்றுவிக்கிறார் ஆதிகவி. இவ்வாறே காட்டுக்குப் போய் வா" என்று விடைகொடுக்கும் தறுவாயில் கோசலாதேவியும் இராமனுடைய தலையை வணக்கி உச்சிமோந்து அணைத்துக்கொண்டே, "மகனே! நீ சித்தார்த்தனுகச் சென்று வா" என்று சொன்னாள் என்று வருணிப்பர். இராமசுகந்தத்தை இடையறாது அனுபவித்தும், அதுகொண்டு இளையபெருமாளின் ஸௌகந்தியத்தை ஊகித்தும் அறிந்த சீதாப்பிராட்டி சர்வகந்தப்பொருளின் வீரகந்தத்தை நினைந்தவளாய் இராவணனைப் பார்த்து, "ராமலக்ஷ்மணர்களின் கந்தம் வீசினாலும் உன்னால் அவர்கள் முன் நிற்க முடியாதே. புலிகளின் எதிரில் நாய்போல் ஓடுவாயே" என்று ஏசுகிறார்.

சர்வகந்தப்பரம்பொருளை மோப்பப் பொறியாலும் அறிந்து அனுபவிப்பதற்கே போலும் யோகிகள் மூக்கின் நுனியே கண்ணாக பரமனது வரவை எதிர்பார்க்கின்றனர்.

# அனுஷ்டானப் பகுதி

## * விநாயக வைபவம்.

(டாக்டர் வே. ராகவன்.)

[பாத்திரங்கள்.]

அர்ச்சகர்
ராஜ ராஜன்
லோகமஹாதேவி
ஒருவன்
ஸிப்பந்திகள்
கவி
விக்னஸைரன்

*விக்னஸைரனின் படர்கள்:*

விகாரன்
அழுகை
சோம்பல்
அஜாக்கிரதை
புத்திக்கோளாறு

ஸித்தி தேவி
அஷ்டலக்ஷ்மிகள்

*ஸித்திதேவியின் காவலர்கள்:*

சுறுசுறுப்பு
ஜாக்கிரதை
யுக்தி
ஞாபகன்

கணேசர்
சிவன்
இந்திரன்
நாரதர்
ப்ரம்மதேவன்

### 1

(பாட்டு: ஸ்ரீ மஹாகணபதி—கௌளம்)

(தஞ்சை ப்ருஹதீச்வரன் ஆலயம்; லோகமஹாதேவி முதலிய தன் மஹிஷிகளுடன் அக்கோயிலைக் கட்டிய ராஜராஜ சோழன் அங்குள்ள விநாயகரின் ஸந்நிதானத்தில், பாத்ரபத சுக்ல சதுர்த்தியன்று, தர்சனம் செய்ய வந்திருக்கிறான்; விநாயகருக்குப் பூஜை நடக்கிறது.)

* இது 5—9—40 விநாயக சதுர்த்தியன்று சென்னை ரேடியோவில் போடப்பட்டது.

(பூஜையின் ஒலிகள், மணி, அர்ச்சனை.)

அர்ச்சகர் :—ஓம், வக்ரதுண்டாய நம: ஹேரம்பாய நம:, லம்போதராய நம:, விக்ன-ராஜாய நம:.........(மணியோசை நிற்கிறது). மஹாராஜா! கர்ப்பூர ஹாரதி ஆகலாமா?

ராஜராஜன் :—ஆகா, நடக்கட்டும். லோக மஹாதேவி! விநாயகரை வேண்டிக்கொள். விநாயகரின் அனுக்கிரஹத்தால் சோழரின் கீர்த்தி கடல் கடந்து உலவவேண்டுமென்று வேண்டிக்கொள்.

(மணியோசை; கர்ப்பூர ஹாரத்தி.)

அர்ச்சகர் :—"ஏக தந்தாய வித்மஹே
வக்ர துண்டாய தீமஹி
தந்நோ தந்தி: ப்ரசோதயாத்"

[பாட்டு : ஸ்ரீகணபதி—ஸௌராஷ்ட்ரம்.]

ஒருவன் :—மஹாராஜா! நாடக சாலையில் எல்லாம் ஸந்நத்தமாயிருக்கின்றன. கவியும், நடரும், ஸபையோரும் தங்கள் வரவை எதிர் பார்த்தவராய் நிற்கின்றனர்.

ராஜராஜன் :—அப்படியா? இதோ வந்து விட்டோம். லோகமஹாதேவி! இதோ நம் ராஜராஜேச்வர நாடகமேங்கேறிய ப்ருஹதீச்வரன் திருவரங்கத்திலே, விநாயக சதுர்த்தியைக் குறித்து நம் ஆஸ்தான கவியொருவரால் இயற்றப்பட்ட "விநாயக வைபவம்" என்ற புதிய நாடகமொன்றை நமது ந்ருத்த வளநாடு கூத்தச்சாக்கையன் பரதமாராயன் நடித்துக் காட்டப்போகிறான். வா, பார்த்துக் களிக்கலாம்.

(மஹாராஜா முதலியவர் புறப்படுகிறார்கள்; மிருதங்க காஹள வாத்தியங்கள் ஒலிக்கின்றன.)

ஸிப்பந்திகள் :—வாழ்க ராஜராஜ மஹாராஜன்!
வாழ்க சிவபாத சேகரன்!
வாழ்க பாண்டிய குலாசனி!
வாழ்க கேரளாந்தகன்!
வாழ்க தக்ஷிணமேருவிடங்க ஆடவல்லான் ராஜராஜ ப்ருஹதீச்வர தேவஸ்தாபகாசாரியன், அருண்மொழிவர்மன் சோழமஹாராஜன் வாழ்க, வாழ்க!

(வாத்ய குதபத்தில் 'கிரிராஜஸுதாதநய' வாசிக்கப்படுகிறது.)

## 2.

(தஞ்சை ப்ருஹதீச்வராலயத்திலுள்ள கூத்தம்பலம்; 'விநாயக வைபவத்தை நடித்துக் காட்டும்படி நாடகமாய் எழுதிய கவி ராஜராஜ மஹாராஜனை வரவேற்கிறார்.)

கவி :—இதோ வந்துவிட்டார் மஹாராஜா. மஹாராஜரே, அமரவேண்டும். லோகமாதேவி, அமரவேண்டும். அரசே! முன் ஸோமகாந்தன் என்ற ஸௌராஷ்ட்ர தேச மன்னன் தனக்கேற்பட்ட பெரும்வியாதியினின்று பாத்ரபத சுக்ல சதுர்த்தியில் விநாயகரை பூஜித்து அப்பிணியிலிருந்து விடுபட்ட ஐதிஹ்யத்தைக் கொண்டு நாம் இன்னும் விநாயகசதுர்த்தியைக் கொண்டாடி வருகிறோம். ஸோமகாந்தனுக்கு ஏற்பட்ட பெரும் வியாதியைவிடப் பெரிய வியாதியொன்று ஸகல ஜனங்களையும் பிடித்துக்கொண்டு, அவர்களுடைய காரியங்கள் கைகூடாதபடி செய்துவருகிறது. அப்பிணிக்குத் 'திறமையில்லாமை' 'சக்தியில்லாமை' என்று பெயர். இந்தப் பிணியால் பீடிக்கப்பட்ட நாம் காரியங்களை நடத்துவதற்கு ஆரம்பித்தால் 'விக்னம்' என்றது மலைபோல் நமக்கெதிரில் நின்று தடைசெய்கிறது. 'சோம்பல்', 'அறிவின்மை', 'புத்திமயக்கம்' 'யுக்தித் தவறுகள்' முதலியவர்களை தனக்குப் படையாகக் கொண்டு இந்த 'விக்னன்' என்ற அஸுரன், நாம் 'ஸித்தி'யை யடையவிடாமல் கெடுத்துவருகிறான். ஆகையால் நாம் அனைவரும் சக்தியின் உருவாயும், திறமையே திரண்டிருப்பதுபோலுமிருக்கும் ஸித்திவிநாயகரை வழிபட்டு அவருடைய அருளால் விக்னாஸுரனை ஜயிப்போமாக. மஹாகணபதி அந்த விக்னாஸுரனைச் சண்டையிட்டு நமக்காக ஜயித்துக்கொடுக்கும் நாடகத்தை இப்பொழுது மஹாராஜா மனங்கொடுத்துக் கண்டருள வேண்டும்.

ராஜராஜன் :—கவீச்வரரே! விக்னேச்வரரின் மஹிமையை நன்கு உணர்த்தினீர். உமக்

குக் காவிரிக்கரையில், கணபதிமங்கலம் என்ற கிராமமொன்றை நாம் வழங்கினோம். நாடகத்தைத் துவக்கலாம்.

கவி :—உத்தரவு. விக்னேஸ்வரன் தன் படர்களுடன் பிரவேசிக்கிறான்.

(படர்களும் அஸ்வரனும் வரும் சப்தம்)

விக்னேஸ்வரன் :—படர்காள்! அதோ அழகிய தோட்டமொன்று தென்படுகிறதே, அதில் அஷ்டலக்ஷ்மிகளும் தன்னைப் புடை சூழ்ந்து சாமரம் வீசி நிற்க "ஸித்தி" என்ற தேவி உல்லாஸமாய் உட்கார்ந்திருக்கிறாள்.

(வீணை வாதனம் கேட்கிறது.)

ஆகா, என்ன இசை பெருகுகிறது! என்ன அற்புதமான வாஸனை!

(பெண்கள் சிரித்து விளையாடும் சப்தங்கள்.) என்ன விளையாட்டும், வினோதமும், சிரிப்பும் பார்த்தீர்களா! என் மந்திரிசிகாமணிகாள்! ஏ தரித்திரா, ஏ விகாரா, ஏ அழுகை! இவ்வழகிய தோற்றத்தைக்காண என்னால் ஸஹிக்க முடியவில்லையே! என்ன சொல்லுகிறாய், ஏ விகாரா!

விகாரன் :—(விகாரமாகப் பேசுகிறான்.) அதென்ன கஷ்டம் மஹாராஜ்! இதோ இவ்வழகு முழுவதையும் ஒரு நொடியில் குலைத்து விடுவோமே. என்ன சொல்லுகிறாய், ஏ அழுகை!

அழுகை:—(அழுதுகொண்டே பேசுகிறான்.) இந்தச் சிரிப்பையெல்லாம் இதோ அடக்கி விடுகிறேன் நான். கவலைப்படாதீர்கள் விக்னேஸ்வர மஹாராஜ்!

விக்னேஸ்வரன் :—படர்காள், ஏ சோம்பல், ஏ அஜாக்ரதை, ஏ புத்திக்கோளாறு! என் அரும் போர்வீரரே! இந்த இன்பக்காக்ஷியை கெடுத்து அந்த ஸித்திதேவியை நான் கைப் பற்றவேண்டும். அவள் இன்பமற்று நம் சிறையில் கிடக்கவேண்டும்.

படர்கள் :—இதோ, ஸ்வாமி, நிமிஷத்தில் செய்து விடுவோம்.

விக்னேஸ்வரன் :—ஏ சோம்பல்! இதோ நீ இந்த மந்தியைச் சேர்த்துக்கொண்டு, இத் தோட்டத்தின் முதல் வாயிலிலுள்ள 'சுறுசுறுப்பு' என்ற காவல்காரனை அமுக்கு, போ.

சோம்பல் :—அப்படியே, மஹாராஜ்.

விக்ன :—ஏ அஜாக்ரதை! இதோ இத் 'தூங்குமூஞ்சி'யும் நீயுமாய்ப்போய் இரண்டாம் வாயிலில் காவலாய் நிற்கும்'ஜாக்கிரதை' என்றவனை கீழே தள்ளிக் கட்டிப்போடுங்கள்.

அஜாக்ரதை :—இதோ செய்து விடுகிறோம்.

விக்ன :—அடே, புத்திக்கோளாறு! உனக்குத்தான் பெரிய வேலை வைத்திருக்கிறேன். மூன்றாவதான கடைசிவாயிலில் "யுக்தி" என்ற வீரன் கத்தியும் கையுமாய், சித்திதேவியையும் அவளுடைய அஷ்டலக்ஷ்மிகளையும் காப்பாற்றிக் கொண்டிருக்கிறான். நீ போய் அவனை ஆக்ரமித்துக்கொள். நான் அதன் பிறகு ஸித்திதேவியைக் கைது செய்துகொள்ளுகிறேன்.

யுத்திக்கோளாறு :—ஸரி, இதோ. (படர்கள் புறப்படும் சப்தம்.)

## 3.

(ஸித்திதேவியின் உத்யானம்; விக்னேஸ்வரனின் படர்கள் நுழைகிறார்கள்; சண்டையின் சப்தங்கள் கேட்கின்றன; ஸித்திதேவி தன் தோழிகளோடு ரமக்கத்துடன் பேசிக்கொண்டிருக்கிறாள்.)

ஸித்திதேவி :—லக்ஷ்மிகளே! இதென்ன நம் தோட்டவாயிலில் சண்டையிடும் சப்தங்கள் கேட்கின்றனவே?

ஒரு லக்ஷ்மி :—இதோ 'ஞாபகன்' என்ற காவலன் மட்டும் தப்பி ஓடி வருகிறானே! என்ன அபாயமோ? அவனைக் கேட்டால் தெரியும்.

ஞாபகன் :—தேவி! என்ன செய்வது? தாங்கள் இனித் தப்ப வழியில்லை.

ஸித்தி :—என்ன ஆபத்தடா, சொல்லு... சட்டென்று சொல்லேன்.

ஞாபகன் :—தேவி, விக்னன் என்ற அஸுரன், மலைபோலிருக்கிறான்; அவன் தன் படர்களைக் கொண்டு நம் காவலாளிவரையும் கட்டிப் போட்டுவிட்டு, தங்களையும் தங்கள் தோழிகளையும் பிடிக்க ஓடிவந்து கொண்டிருக்கிறான். இதோ வந்து விடுவான்...........

ஸித்தி :—ஹா! (என்றலறிக் கீழே விழுகிறாள்.)

ஒரு லக்ஷ்மி :—தேவி, தேவி, எழுந்திருங்கள்! ஏ தைர்ய லக்ஷ்மி, தேவியைத் தாங்கிக் கொள். தேவி, முன் திரிபுராஸுரர் தேவலோகத்தைப் பாழாக்கிக்கொண்டிருக்கையில், சிவபெருமான் தன் மைந்தன் விநாயகர் என்பவரை உபாஸித்து அவர்மூலம் திரிபுராஸுரரை ஜயித்தார். பின்பு விநாயகரின் தம்பி முருகனும் அவ்விநாயகரின் உதவியைக் கொண்டே தாரக சூரபத்மாதிகளை வென்றான். அவ்விநாயகரே இந்த விக்னஸுரனை வெல்ல வல்லமையுடையார். அவரே சக்தி; அவரே திறமை; அவரே எல்லா முயற்சிகளுக்கும் மூலாதாரம்.

(பாட்டு—ஸ்ரீ மூலாதார)

(கணேசபகவான் பிரஸன்னமாகிறார்.)

ஸித்தி :—ஆகா, இதோ, பகவான் கணநாதர் நம் துதிக்கு இசைந்து நமக்கு அருள் செய்ய வந்து விட்டார்.

(யானையின் பீட்காரம் கேட்கிறது.)

இதோ அவர் போடும் ஜயகோஷம் கேட்கிறது. ஏ, விக்னஸுரா, இதோ நீ தொலைந்தாய்.

விக்னஸுரன் :—ஸித்தி, உன் கணநாதர் வருமுன் நான் உன்னை அழித்து விடுவேன். இதோ உன்னைத் தூக்கிக்கொண்டு போகிறேன், பார். (என்று நெருங்குகிறான்.)

ஸித்தி :—ப்ரபோ, வக்ரதுண்டா, ஹேரம்பா, கணநாயகா!

கணேசர் :—ஸித்திதேவி! பயப்படவேண்டாம். இதோ நான் உன்னைக் காப்பாற்ற வந்துவிட்டேன். அடே, துஷ்டா, உன் படர்கள், சோம்பற்சாவடி, தூங்குமூஞ்சி, துக்கிரிமுதலியவர் என் ஜயகோஷத்தைக் கேட்டதுமே பறந்தோடி விட்டனரே. நீ எவ்வளவு நேரம் நம்முடன் யுத்தம் செய்யப்போகிறாய்? இதோ சக்தியின் கொழுந்தான என் துதிக்கையால் உன்னை வாரி எறிகிறேன் பார்.

(கணேசரின் பீட்கார ஜயகோஷம்.)

விக்னு :—ஆ! (அலறி, தூரத்தில் வாரி எறியப்பட்டு விழுகிறான்.)

அஷ்டலக்ஷ்மிகள் :—ப்ரபோ! உயிர்ப்பிச்சை யளித்தீர்கள். எங்கள் தேவியைக் காப்பாற்றினீர்கள்.

ஸித்தி :—ப்ரபோ! ஸித்தி வணங்குகிறேன். இதோ என்னைத் தங்களுக்கே அர்ப்பணஞ் செய்தேன்.

ஆகாசவாணீ :—ஆகா, இன்றே என் மைந்தன் ஸித்தி விநாயகன் ஆனான்.

அஷ்டலக்ஷ்மிகள் :—என்ன ஆச்சர்யம்! சிவபெருமானல்லவோ பேசுகிறார்......ஆகா...... இதோ இந்திராதிதேவர்களுடனும், நாரதாதி மஹாரிஷிகளுடனும் சிவபெருமானே வருகிறாரே!

(சங்க நாதம்; 'ஜயமஹாதேவ' என்ற கோஷம்)

கணேசர் :—ப்ரபோ, பிதாவே, நமஸ்கரிக்கின்றேன்.

சிவன் :—இந்திரா! இன்று எல்லா நன் முயற்சிகளுக்கும் தடையாய் தோன்றும் விக்னன் என்ற அரக்கன் நம் கணேச்வரனால் கொல்லப்பட்டான்.

இந்திரன் :—இன்று முதல் இவரை நாம் விக்னேச்வரன், விக்னராஜன் என்று அழைப்போம். நாரதரே, நீரே இப்பெயரை கணேச்வரனுக்கு வழங்கவேண்டும்.

நாரதர் :—வெறும் பெயரை வழங்கி என்ன பயன்? ப்ரபோ விக்னேச்வரா! உமக்கு இப்பொழுதே கல்யாண ப்ராப்தி உண்டாகட்டும்.

கணேசர்:—இதென்ன நாரதா, உன் ஹாஸ்யத்தை ஆரம்பித்துவிட்டாய். ப்ரம்மதேவரே, உம் மைந்தன் தான்மட்டும் தேவலோகத்தில் போட்டியில்லாத ஏகப்ரம்மசாரியாக இருக்க வேண்டும் என்று பார்க்கிறான் போலும்.

ப்ரம்மதேவன் :—நாரதா! எனக்கு ஸரஸ்வதி சக்தி; விஷ்ணுவுக்கு லக்ஷ்மீ சக்தி; சிவபெருமானுக்கு பார்வதி சக்தி. ஆனால் ஸ்வயம் சக்தி ஸ்வரூபமாயுள்ள விக்னேச்வரனுக்கு வேறு சக்தி எதற்கு?..........சிவபெருமான் என்ன நினைக்கிறாரோ?

சிவன் :—ப்ரம்மதேவன் சொன்னது தத்வம். ஆனாலும் வேண்டுபவர் வழிபட்டு உபாஸிப்பதற்காக நம் சக்திஸ்வரூபமான விக்னேச்வரனுக்கும், அவன் விக்னஸுரனைக் கொன்று சிறைமீட்டிய இதே ஸித்தியை தேவியாகக் கொடுப்போம். லக்ஷ்மிகாள்! இது உமக்குப் ப்ரியந்தானே?

அஷ்டலக்ஷ்மிகள் :—நாங்கள் முன்னதாகவே ஸித்திக்கும் விக்னேச்வரருக்கும் ஸ்வயம்வர விவாஹத்தை முடித்து விட்டோமே! நமஸ்தே ஸித்திவிநாயகா, நமஸ்தே ஸித்திவிநாயகா!

எல்லோரும் :—நமஸ்தே ஸித்திவிநாயகா! நமஸ்தே ஸித்திவிநாயகா!

(எல்லோருமாய் பாடுகின்றனர்—ஸ்ரீகணநாதம் பஜரே ஸித்தி பராசக்தி யுதம்—ஈச மனோஹரி.)

# கண்ணபிரானது முகமதிய பக்தர்கள்.

"பார்க்கவன்."

அப்துல் ரஹீம் என்பவர் அக்பர் சக்கிரவர்த்தி காலத்தில் வாழ்ந்த கிருஷ்ணபக்தர். உத்தவரைப் போலவும், ஆழ்வாரைப் போலவும் 'கோவிந்தன் குழல் கொடுதிய' கோகுலத்தில் 'செடியேனுமாவேனே, கொடியேனுமாவேனே' என்றெல்லாம் பாடுகிறார். 'ரஹீமின் மனமாய சகோரமே! கண்ணன் எனும் சந்திரனை அல்லும் பகலும் மனமாரப் பருகி ஆநந்த பரிதமாய் இருப்பாய்!' என்கிறார், இன்னொரு பாசுரத்தில். 1640-வது வருஷத்தில் இருந்த முபாரக் என்பவர் ராஸக்ரீடை விஷயமாகச் சிறந்த காவியமொன்றை இயற்றியுள்ளார். கிருஷ்ணனது பால சரிதங்களில் ஈடுபட்டவர் நஜீர் அக்பராபாதி என்பவர். பெருமிதத்துடன் இவர் 'என் இஷ்ட தெய்வம் கண்ணனே' என்பார். இவரது எளிய நடையிலுள்ள கவிகளில் ஒன்று வருமாறு:

ஸப் மில்கே கம்ஸ கரவப்ரஹாரீகீ போலோஜெய்!
கோவிந்த சைல குஞ்சவிஹாரிகீ போலோஜெய்!
தத்சோர் கோபிநாத கராரீகீ போலோஜெய்!
கம்பீ 'நஜீர்' கிருஷ்ணமுராரிகி போலோஜெய்!

முகமதியப் பெண்மணிகளும் பலர் கண்ணனைப் பாடியுள்ளார். இவர்களுள் தலைவி அக்பர் சக்ரவர்த்தியின் தர்மபத்தினியான தாஜ் என்பவள். இவள் ஒருசமயம் கண்ணனது லீலா சேஷ்டிதங்களை நினைந்துருகிப்பாடி மூர்ச்சை யடைந்தாள்.' அப்போது பரிஜனங்கள் கோவர்த்தனத்துக்கு அவளைத் தூக்கிச் சென்றனராம். அங்கு யதி யொருவர் தாஜ் பாடிய பாசுரங்களைத்தான் பாடிக்கொண்டிருந்தாராம். மூர்ச்சை தெளிந்த தாஜ், இதைக் கண்டு,

முரளி முகுட் விராஜஹீம் ஹோ கடி படபாந்தபீத்
ந்ருத்யத ஆவத தாஜ்கே ப்ரபூ காயத ஹோரீ கீத்

என்ற சரணத்தைப் பாடி, கண்ணனது குழலையும், கிரீடத்தையும், பீதவஸ்திரத்தையும், ஆடியும் பாடியும் வரும் வைபவத்தையும் கண்டு நெக்குருகி, பகவத்பாத கமலங்களை அடைந்தாள். இவள் ஆராதித்த மூர்த்தி 'லலித தரிபங்கி ராஜன்' என்பர். இவர் இன்றளவும் கோகுலத்தில் உள்ள கட்ரா என்ற இடத்தில் கொலுவிருக்கிறார்.

அலிகான் பட்டாணி என்பவரும் அவர் மகளும் சிறந்த கிருஷ்ண பக்தர்கள். இவர்கள் ஆராதித்த மூர்த்தி, உஜ்ஜயினியில் உள்ள 'மதன மோஹனர்' என்பர்.

இவர்கள் எல்லாம் முன்காலத்தில் இருந்தவர்கள். இக்காலத்திலும் அநந்ய பக்தையான முகமதியப் பெண்மணி ஒருத்தி இருக்கிறாள். இவள் பரோடா ஜட்ஜூம், காந்தியடிகளின் சீடருமான அப்பாஸ் டயாப்ஜியின் செல்வப் புதல்வியான ரைஹனா டயாப்ஜீ என்பவர். இவர், 'கோபியின் உள்ளம்' என்ற ஆச்சரியகரமான நூலை இங்கிலீஷில் எழுதியுள்ளார். இப்பெண்மணியின் வாக்கியங்களின் அழகையும் ரசனையையும், தமிழில் காட்டுவது அரிது. என்றாலும் கருத்தை மட்டும் ஒருவாறு தெரிவிக்கலாம்.

'கோபியின் உள்ளம்' என்ற சரித்திரம், கோபாலன் ஒருவனால் பேராபத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டவளும், பிறகு அவனது தர்ம பத்தினியானவளுமான சர்மிளா என்ற அரசிளங்குமாரியின் கூற்றாக அமைந்துள்ளது. கோகுலத்தில் கோபிகளுடன் தானும் ஒரு கோபியாகவிருந்த சர்மிளா தனது அனுபவங்களை வர்ணிக்கிறாள். முதலில் இறைவன் உறையும் கோகுலத்தைக் காண்கிறாள். பிறகு நீராடும் சமயத்தில் கோபஸ்த்ரீகளை அறிகிறாள். அவர்கள் சல்லாபத்தில் கண்ணன் திருநாமத்தைக் கேட்டுப் பரவசமாகி "கண்ணன்! என்ன மோஹனப் பெயர்! யமுனையின் வெள்ளித் திவலைகள் மேல் தவழும் நிலவென என் உள்ளம் புகுந்து விளையாடுவது! சோலையுள் நுழையும் சந்திரிகை என இதயம் புகுவது! ஒளியும் இசையும் ஒருங்கே கூடிய ஸௌந்தரத் திருநாமம்! கண்ணன்! என்ன மதுரமான பெயர்! இப்பெயர் பூண்ட அவனும் ஒளிமயமானவனே! இசையை உருவாகக் கொண்டவனே! ஒருநாள் அறிவேன். அவ்வறிவும்

தக்க காலத்தில் தானாகவே சித்தித்திடும். அதை இப்போதே அறிய ஆத்திரப்படுபவள் நானல்ல. அக்கண்ணனை அறிந்துகொள்ளா திருப்பதும் மதுரமானதே! கண்ணனைப்பற்றிய எனது சிற்றறிவானது ஒளியிழை என மிளிரும் இளம் பிறையையொத்தது. மேகத்தில் உள்ளும் புறமும் துவளும் இளம்பிறையென, அவன் திருநாமம், பேதைமை என்னும் என் துகிலில் ஒளிந்தும், தோன்றியும்

* * * *

மறைவது. அவனை மோஹனன் என்பர்; ஹரி என்பர்; நந்த கிசோரன் என்பர்; கண்ணன் என்பர்; இன்னும் பல பல நாமங்களுமுள. ஒவ்வொரு புதுப்பெயரும் கந்தர்வகானத்தில் புதிதாய் அமைந்த புது ஸ்வரமோ? தோழிகள் வாயினின்றும் உதிரும் இப்பெயர்களென்னும் முத்துக்களை ஞாபகம் என்னும் பொன் நாணில் இட்டு, ஹாரமென அணிவேன்'' என்றெல்லாம் எண்ணி ஈடுபடுகிறாள்.

பிறகு ராதையைத் தரிசனம் செய்கிறாள். பின்னர் இறைவனது வேணுகானத்தைக் கேட்டு 'கானத்துக்கு என்ன சக்தி! பகவானது அருளே கானரூபமாய்ப் பெருகியதோ! அல்லது பாட்டு என்பது இறைவனது இனிய குரலோ!' என்றெல்லாம் நினைந்துருகுகிறாள்.

'ராதை என்பவள் யார் என்று கேட்கும் தன் பதிக்கு சர்மிளா சொல்வதாவது: ''கோபிகளால் பெரிதும் போற்றப்படுபவளே ராதை. ராதையின் பக்தி காரணமாக அவள் மேல் பொறாமையும் கொள்ளுவர் கோபிகள். இம்மாதிரியான பொறாமையும் ஆராதனமன்றோ? ராதையும் ஆராதிக்கத்தக்கவளே. அவள் தரிசனமே மனதை ஜோதி மயமாகவும், ஆநந்தமயமாகவும் ஆக்குவது. அவள் அருகில் இருந்தால் இறைவனும் நமதருகில் வருகிறார்.''

பிறகு பதிபக்தி, கிருஷ்ண பக்திகளின் ஸ்வரூபத்தை வெகு அழகாக விளக்குகிறாள்.

பின்னர் 'கண்ணன் ஊதிய குழலின் முதல் ஸ்வரத்தைக் கேட்ட க்ஷணமே நான் புதிதாய்ப் பிறந்தேன். இனி எனக்கு மரணமில்லை' என்கிறாள்.

பின்னர் 'உலகத்தை பழம் புடவையெனக் களைந்தேன். ஒளிமயமான பக்தியே எனது ஆடையாகும். கண்ணா! இதோ வந்துவிட்டேன், உன் பாதகமலங்களில் உள்ள அன்பு எனும் தேனைப் பருக. கூந்தல் கலைந்துவிட்டதே! இதோ திருத்தி விடுகிறேன். நெற்றியில் குங்குமத்தைக் காணோமே! காதில் பூஷணங்களைக் காணோமே' என்று பதறியும், 'அடி பெண்ணே! அவன் குழலிசை நிறைந்த காதுக்கு பூஷணமேனடி! நக்ஷத்திரமகுடம் சூடப்பெறும் உனக்கு ஆபரணமேன்' என்று தேறியும், கடைசியாக நீல ஒளியால் சமைந்த இறைவன் திருவுருவத்தை தரிசனம் செய்கிறாள்.

அனுபவ பூர்வமான இவ்வரிய நூலின் மூலத்தை ரஸிகர்களும் பக்தர்களும் படித்து இன்புறுவார்களாக.

# கண்ணா! கண்ணே!

(வே. ரா.)

கண்ணா! என் கண்மணே! இதென்ன உன் சோதிவாயில் ஒரு சிரிப்பொளி! இதன் ஒளி மின்னும் வானிலுமில்லை; கதிரவனும் கைரவக் காதலனும் எழும் கடலிலுமில்லையே!

கண்ணா, காலை உதைக்காதே, திக்குகள் இடிந்து விழப்போகின்றன! யாரை உதைத் துத்தள்ளுகிறாய், என்னை இல்லையே?

சாகோபசாகமான வேதோபநிஷதங்கள் நிரம்பிக்கிடக்கும் உன் செவ்வாய் ஏன் ஒன் றும் ஓதாமலிருக்கிறது? ஓகோ, ஓதி என் பயன்? ஓய்ந்தே பயன் என்று மௌனவியாக் யானம் செய்கின்றனையோ?

ஆகா, இதென்ன மெல்லிய இன் ஸ்வரம், "பாரேழையும் பண்ணாய்ப் பாடிய பரஞ் சோதி!"

பசிக்கிறதோ, யசோதையைப் பால் கேட் கிறாயோ? பாற்கடலில் ஊறிக் கிடப்பவனுக்கு யசோதை பால் கொடுக்கிறாளாம்! உன் வாயில் பாலுடன் யசோதை வைத்த சங்கை ஊதி விடாதே! அண்டங்கள் அதிர்ந்துவிடும், அசுர மஹிஷிகளின் கருக்கள் உதிர்ந்துவிடும்!

"உறங்கு கண்ணா; தூங்கு கண்ணே" என்று உன்னையா நான் சொல்வது? நித்திரை செய்து கொண்டே உலக நலத்திற்கு விழித்துக் கொண்டிருப்பவன் அல்லவா நீ?

ஆனால், விளையாடேன் கண்ணா! ஓகோ, 'நீ விளையாட அதை நான் ஸாக்ஷியாய் நின்று அனுபவிப்பவன்' என்கிறாயோ, வாஸ்தவம் தான்!

என்ன, இத்தொட்டில் சுகனுடைய மனம் போல் மெத்தென்று இல்லையோ, ஏன் இப்படி புரளுகிறாய்! நாம் குழந்தையாயிருக்கும்போது உன்னை ஆலிலையில் வைத்த கோலத்தை நம் தந்தை தொட்டிலுக்குமேலே கட்டினார்; உன க்கு நந்தகோபன், பாவம், என்ன பொம்மை யைக் கட்டினானோ!

முன் ஞானமே பெரிதெனக் காண்பித்தனை! ஞானம் பெருந்தீயாய்ப் பற்றி இரண்டாவ தொன்றில்லாமல் செய்தது.........

பின் கருமத்தைக்காட்டி, விஷத்திலேயே மருந்தையும் கண்டுபிடித்தனை; ஆனால் பற் றற்ற கருமத்தை நீ ஒருவன் செய்கிறாய், நமக் குள் எவருக்கு அது முடிந்தது?

பின் உன் அருமைக்கும் அருமையான குணங்களையும் மேனியின் திருவையும் காட்டி, மனத்தை இழுத்தனை; அன்பு பெருகிற்று; ஆறாக ஓடிய அவ்வன்பு அனைவரையும் அடித் திழுத்துப் போயிற்று. உன்பால் அன்பு கொண்டவரில் எவ்வளவு வகையோ?

கடவுளென கடமைப்பட்டு வணங்கி நிற்பவ ரை விட்டு, 'என்ன, கண்ணா' என்று உன் அத் தை மகன் நட்புகொண்டு உன்னுடன் உறவாடி னான். ஊழியமும் நட்பும் காலடியில் கிடைக்க, விதர்ப்பராஜகுமாரி உன்னை மணாளனாய்க் கொ ண்டாள்; மனைவியின் காதலிலுள்ள ருசியை வெறுத்து, நீரை அமுதாக இச்சித்த ஆயர் மகளிர் உன்னைத்தேடி யலைந்த தைரியந்தான் என்னவோ! ஆனால் ஆயச்சிகளின் காதலையும் தூற்றவா இவ்வுலகில் ஒருவரும் இல்லை?

கண்ணா! 'இனி எப்படியிருந்தாலோ குறைக் கூற்று இல்லா அன்பை இம்மானிடரிடமிரு ந்து இழப்பேன்' என்றோ உனக்குப் பெருங் கவலை தோன்றிவிட்டது?

இதென்ன கவலை; ராஸக்ரீடை ஆய்விட் டதா, கண்ணா? கல்யாணஞ் செய்து கொண்டு விட்டாயா, கண்ணா? கீதை உபதேசித்து விட் டாயா? உத்தவோபதேசமும் முடிந்ததா? ஸரி, வா, கண்ணா! இப்படி இத் தொட்டிலில் படு; குழந்தையாகவே இருந்துவிடு, என் கண்ணே!

# ரேடியோப் பகுதி.

(கா. வே. ராமச்சந்திரன்.)

ரேடியோ வந்த பிறகு, நமது தேசத்தில் வழங்கும் ஹிந்துஸ்தானி, கர்நாடகம் என்ற முறைகள் இரண்டையும் அடுத்தடுத்துக் கேட்டு, இரண்டு முறைகளையும் ஒப்பிடுவது சுலபமாய்விட்டது. இப்படி ஒப்பிட்டுப் பார்த்தபோது, தற்காலத்துக் கர்நாடக முறையிலுள்ள குறைகள் சில புலப்பட்டன.

முதல் குறையாவது. கர்நாடக ஸங்கீதமானது கானக்கலைக்கு ஜீவனென மதிக்கதக்க விளம்ப காலத்தை இழந்துவிட்டது. ராகம் என்ற தாமரை பூர்ணமாய் மலருவது விளம்பகாலத்திலேயே. விளம்பகாலத்தில்தான் ராகத்தின் பூர்ணஸ்வரூபத்தைக் காணலாம். மத்யம காலப் பாட்டு, பிரதமகாலப் பாட்டின் ஸங்கிரஹம் அல்லது சுருக்கமேயாம். மூன்றுவது காலம், மத்யமகாலத்தின் சுருக்கமாகும். அபிநயத்துக்கு ஜீவனும் பிரதமகாலமே. நிருத்தத்தின் பூரணஸ்வரூபமும் முதல் காலத்திலேதான் சித்திப்பது. விளம்பகாலத்தில் பாடும் முறை கர்நாடகபத்ததியில் உண்டு என்பதற்கு 'சவுக்கம் சீனுவய்யர்' 'கனம் கிருஷ்ணய்யர்' முதலிய பெயர்களில் உள்ள அடைமொழிகளும், புரந்தரதாஸர், க்ஷேத்ரக்ஞர் முதலிய காயகோத்தமர்களது மஹாகீதங்களும், தீக்ஷிதர் கீர்த்தனங்களுமே சான்றுவன. இக்காரணங்களால், விளம்பகாலத்தை கானத்தின் முக்கியமான அங்கமாகக்கொள்வது தவறுகாது. ஹிந்துஸ்தான் பத்ததியில், ராகங்களை விளம்ப காலத்தில் ஆலாபனம் செய்வதே பெருவழக்கமாக, இன்றளவும் வந்துள்ளது. ஆனல் கர்நாடக வித்துவான்களோ, விளம்பகாலத்தைப் பூர்ணமாகக் கைவிட்டபடியால், ராகங்களையும் உடன் இழந்தனர் என்று சொல்லிவிடலாம். முக்கிய அங்கமான விளம்பகாலத்தை இழந்தமையால், தற்போது வழங்கும் கர்நாடக ஸங்கீதம் அங்கஹீனமானது என்றே கருதத்தகுந்தது. பாலர்களுக்கென்று அமைந்தனவே ஸங்கிரஹங்களாம். ராகங்களை விட்டுவிட்டு, அவற்றின் ஸங்கிரஹங்களையே நாம் பெரிதும் போற்றுவதாய், கானவித்தையில் நாம் இன்னும் பால தசையிலேயே உள்ளோம், யௌவன தசையை இன்னும் அடையவில்லை என்பதும் இதனல் வெளியாவது.

தாளத்தில் அதிசூரர்கள் என்று நம்மை நாமே சம்மதித்துக் கொண்டோம். ஆனால், விளம்ப காலத்தில் தாளத்தை நிர்வஹிக்க இயலாமலன்றோ நாம் அதைக் கைவிட்டது! ஆகையால் தாள ஞானத்திலும், நாம் பால தசையிலேயே உள்ளோம் என்பதும் நிச்சயம்.

இரண்டாவது, ரஸத்துக்கும் ராகத்துக்கும், பாட்டுக்கும் வார்த்தைகளுக்கும் சம்பந்தம் இருப்பதாக நம்மவர் அறிந்திருப்பதாகவும் தெரியவில்லை. இவ்விஷயத்திலும் நாம் சிசுக்களாகவே யிருக்கிறோம். நவீன தமிழ் ஸாஹித்யங்களையும் பாட்டையும் என்னென்று வர்ணிப்பது? பதங்களைத் திருடுபவன் பத சோரனாவான்; வாக்கியத்தைத் திருடுபவன் வாக்கிய சோரனாவான். நவீனத் தமிழ்ப் பாட்டுகளைச் செய்பவர்களுள் பெரும் பாலர், பதம், வாக்கியம் அன்றியும் கானத்தையும் கண்ட விடத்தில் அபஹரித்து விடுகிறார்கள். சொந்தமாக ஒன்றுமில்லை; எல்லாம் இரவலே; கடன் வாங்குவதிலும், வாங்குவது பொன்னும், மணியும், பட்டும் அன்று, இமிடேஷன் தங்கமும் ரங்கோன் கமலமும், 'மூர்மார்கட்'டில் அகப்படும் பழைய சொக்காய்களுமே. சிருஷ்டி என்ற அம்சம் ஒரு சிறிதும் காணப்படவில்லை. சொந்தமாய் நம்மிடம் குடி கொண்டுள்ளது தாரித்ரியமே! நம்மிலும் தரித்திரரும் உளரோ?

இனி நம்மவர் கச்சேரிகளிலும் ரேடியோவிலும் தெரிந்தெடுக்கும் ராகங்களைக் கவனிப்போம். எவ்வளவு தரம் பாடினாலும், எவ்வளவு விஸ்தாரமாகப் பாடினாலும் சிறிதும் அலுக்காத கனராகங்களை முதலில் பாடுவதும், அடுத்தபடியாக ரக்தி ராகங்கள் எனப்பட்ட நய ராகங்களைப் பாடுவதும், கடைசியாக பாமர ரஞ்சகமான தேசிராகங்களைப் பாடுவதுமே, சிறந்த முறையாகும். பிரஸித்தமின்மையால் 'அபூர்வ' மெனப்பட்ட ராகங்களுள் பல நய ராகங்களாலும் சில கனராகங்களாலும் இருப்பதால், இவைகளுக்கும் கச்சேரியில் இடமுண்டு. இவைகளை யெல்லாம் தவிர்த்து, ரக்தி ஒரு சிறிதுமில்லாத மேளகர்த்தாக்களை (முக்கியமாக பிரதிமத்திய மேளங்களை) ராகங்களென்றெண்ணி, அவற்றின் ஸ்வரங்களைக் கண்டவாறு கோத்து, மணிக்கணக்காகக் கூட்டிப் பெருக்குவது, வீணான முயற்சியே. எழுத்துக்களைப் பலவாறு கோப்பதால் ஆன சித்திரக்கவி எப்படி காவிய ஆபாஸமோ, அப்படியே ஸ்வரக்கோவைகளான மேளங்களும், கான ஆபாஸமேயல்லது ராகங்களாகமாட்டா.

சென்ற சில மாதங்களுக்குள் நடந்த ரேடியோ கச்சேரிகளுள், வித்துவான் கரூர் சின்னஸ்வாமி ஐயரவர்களது வாசிப்பு சிறந்து விளங்கியது. இருபது வருஷங்களுக்கு முன்பு இவரும் வித்துவான் ஸஞ்ஜீவிராயரும் சேர்ந்து வாசிப்பது வழக்கம். இருவர் வாசிப்பும் அதிக வித்தியாசமில்லாமல், ஒன்றாகவே அமையும். ஆனால் சமீபத்தில், சின்னஸ்வாமி ஐயர் வாசித்தது, அழகிய கற்பனைகளால் மனோஹரமாயிருந்தது.

இருபது வருஷங்களுக்கு முன் வெகு அழகாக வாசித்துக் கீர்த்தி அடைந்தவர், வித்துவான் காரைக்குடி ஸாம்பசிவ ஐயர் அவர்கள். இவர் முன்பு வாசித்ததற்கு ஒரு சிறிதும் அழகில் குறையாமல், சமீபத்தில் வாசித்தார். இவர் வாசித்தபோது விளம்பகால ஞாபகங்கள் பல தொனித்தன.

வாய்ப்பாட்டில் உயர்ந்ததாகக் கொள்ளத் தகுந்தது மதுரை கேசவ பாகவதரது பாட்டும், மைஸூர் தேவேந்திரப்பாவினது பாட்டும். சென்னையில் பேகட ராகத்தைக் கேசவ பாகவதர் விசித்திரமாயும், அரிய கற்பனைகளுடனும் பாடினார்; ஆனால் அச்சமயம் இவரது பக்க வாத்தியம் பக்கவாதமாகவே இருந்தது. தேவேந்திரப்பா, 'மோஹனராம' என்ற கீர்த்தனத்தை ரஸம் ததும்பப் பாடினார். ஆனால் கேதார கௌள ராகம் மட்டும், புஷ்பவனம் நாளிலிருந்தே கெட்டுவிட்டது. இதை ஒருவராவது நேராகப் பாடக் காணோம். ஒரே ஒரு தரம், வித்துவான் ராஜமாணிக்கம் பிள்ளை இதை சுத்தமாக வாசித்தார்.

பெண்மணிகளுள் ஸ்ரீமதி லலிதாங்கி வெகு அழகாகப் பாடினார். ஸ்ரீமதி நவநீதம்மாளது சிறந்த புல்லாங்குழலும், ஸ்ரீமதி ஸுந்தர காமாக்ஷி அம்மாள் ஸ்ரீமதி T. ஞானம்மாள் முதலியவர்களது சிறந்த பாட்டும்

அடிக்கடி கேட்கத்தக்கனவே. ஸ்ரீமதி எம். எஸ். ஸுப்பலக்ஷ்மி அவர்கள் தியாகராஜ கீர்த்தனங்களையும், பதங்களையும் பாடியபோது அவரது அழகிய சாரீரமும் ஸாஹித்யங்களும் ஒருங்கே சோபித்தன. ஆனால் நவீனத் தமிழ்ப் பாட்டுகளைப் பாடியபோது, சாரீரம் மட்டுமே சோபித்தது.

கிருஷ்ண ஜன்மாஷ்டமியை, வட இந்திய ரேடியோ நிலயங்கள் மஹோத்சவமாகக் கொண்டாடின. கட்டுரைகள் என்ன, நாடகங்கள் என்ன, பஜனைகள் என்ன—எல்லாம் வட இந்திய மக்களது உற்சாகத்தை எடுத்துக் காட்டின. வட மதுரையில் நிகழ்ந்த பூஜா வைபவங்கள் வெளியிடப்பட்டன. அச்சமயம் கான்பூரில் நடந்த இசை மகாநாடும், கிருஷ்ணனது ஜன்மதினக் கொண்டாட்டமாகவே அமைந்தது. ஆனால் தென் இந்திய நிலயங்களில் ஓரூரில், அதை சிராத்தமாக நடத்தினார்கள்; இன்னொரூரில், அதைப்பற்றிய பேச்சையே காணோம். இதனால் ஏற்பட்டது என்னவென்றால், வட இந்திய ரேடியோ நிலய நிர்வாஹிகள், நம்மவர்களைவிட கிருஷ்ணனுக்கும் நமது கானத்துக்கும் உள்ள ஸம்பந்தத்தை நன்றாக அறிந்துள்ளார்கள் என்பதே. வட இந்தியாவில் இன்னொரு விசேஷம். வித்துவான்கள் அனைவரும் முஸல்மான்கள்; ஆனாலும் பாட்டுகள் எல்லாம் ஸமஸ்க்ருதம்; பாட்டுக்கு விஷயம் சிவனும், ராமனும், கிருஷ்ணனுமே.

# பூனை.

பார்வதி.

பூனையை அறியாதவர்கள் கிடையாது. சிறு குழந்தைகள் சாதாரணமாக இரண்டாவது வயதிலிருந்து பேச ஆரம்பிக்கின்றனர். முதல் முதலில் நாம் அவர்களுக்கு வெகு சகஜமாகத் தெரிந்த மிருகங்களாகிய மாடு, பூனை, ஆடு, குதிரைகளின் வெவ்வேறு சப்தங்களை 'மா கா' என்றும், 'மியா—மியா' என்றும், 'மெ—மெ' என்றும், 'ப்ரு—ப்ரு' என்றும் சொல்லிக் கொடுக்கிறோம். பூனைகளைக் கண்டு பயப்படுகிற குழந்தைகளும் உண்டு. ஏன், எங்கள் வீட்டில் எல்லாக் குழந்தைகளும் பூனைக்குப் பயப்படுவார்கள்.

பூனைகள் பல வகைப்பட்டன. வால் நீண்ட பூனைகளும், வாலில்லாப் பூனைகளும், பட்டுப் போல் நீண்ட சருமமுடையவைகளும், 'குட்டை மயிர்' பூனைகளும் இருக்கின்றன. இவைகளுள் எத்தனையோ வர்ணங்கள்: வெள்ளை, கருப்பு, கபில நிறம், மூன்றும் கலந்தவை, தவிட்டு நிறப் பூனைகள், சாம்பல் நிறப் பூனைகள் இவை எல்லாவற்றையும் நான் கண்டிருக்கிறேன்.

மதுரையில், எனக்குத் தெரிந்தவர் ஒருவர் வீட்டில், ஒரு பொன்னிறப் பூனை இருக்கிறது. அதன் பெயர் 'முருகன்.' முருகனுக்கு அதன் யஜமானியிடம் அதிக அன்பு; யஜமானிக்கும் அதனிடம் மிகப் பிரியம். எப்பொழுதும் அது அவள் பக்கத்திலேயே இருக்கும். அவள் சொன்னதையெல்லாம் முருகன் செய்யும். தட்டில் பாலை வைத்து விட்டுக் குடி என்றால் தான் குடிக்கும். குடிக்காதே என்றால் குடிக்காது. அவ்வளவு அன்பாகவும், உண்மையாகவும், விச்வாசமாகவுமிருக்கும். விளையாடுவதிலோ அதற்கு மிகவும் குதூகலம்; அதிலும் ஒளிந்து விளையாடுவதில் சந்தோஷ மதிகம்.

நான் எத்தனை முறையோ முருகனுடன் விளையாடி யிருக்கிறேன். அது கடிக்கவே கடிக்காது. ஆனால் சிற்சில வேளைகளில் தன் கூரிய நகங்களால் பறூண்டி விடும்.




மேல் நாட்டார் அநேகர் பூனைகளைப் பிரிய ஜந்துக்களாக வளர்க்கின்றனர். முக்கியமாக அவர்கள் கருப்புப் பூனைகளையே விரும்புகின்றனர். ஏனெனில் இவை அதிர்ஷ்டத்தைக் கொடுக்கும் என்று கருதுகின்றனர். மேல் நாட்டுச் சீமாட்டிகள் உலோகத்தால் செய்த சிறு கருப்புப் பூனைகளைத் தங்கள் உடையிலோ தொப்பியிலோ அணியப் பார்த்திருக்கிறேன். மேலும் இவர்கள் தங்கள் மோட்டார் வண்டிகளின் முன் பக்கத்தில் இத்தகைய பூனைகளை ஸ்தாபிக்கின்றனர். பின்னாலும் கம்பளியில் செய்த கரும் பூனைகளை தொங்க விடுகின்றனர். இந்தப் பழக்கங்கள் நம் நாட்டிற்கும் வந்து கொண்டிக்கின்றன. நமக்குள், புறப்படும் பொழுது பூனை குறுக்கிட்டால் அதை ஒரு அபசகுனமாகக் கருதுகிறோம்.

பூனையின் முக்கிய ஆகாரம் பாலும் எலியும். மிகவும் மெதுவாக, ஓசைப்படாமல் அது

நடக்கும். நமக்குள்ளும் மெதுவாகச் சப்தம் போடாமல் எவரேனும் நடந்து வந்தால் 'என்ன, பூனை போல் வருகிறாயே' என்று சொல்லுகிறோம். மேலும், ஒருவன் பார்ப்பதற்கு மிக சாதுவாகவிருந்து, எவரும் எதிர் பாராதபடி துணிவான தொரு காரியத்தைச் செய்து விட்டால், 'இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா என்றல்லவா நினைத்திருந்தேன்!'' என்று சொல்வதுண்டு.

பூனைக்கு ஆழ்ந்த தந்திரமும், திருடுவதில் விருப்பமும் உண்டு. தவிரவும் அதற்கு இருட்டில் நன்கு கண் தெரியும். பூனையும் புலியும் அநேகமாய் எல்லாவற்றிலும் சமம்தான். ஆனால் புலிக்கு மரமேறத் தெரியாது.



# மொழிபெயர்ப்புப் பகுதி.

## கதைக் கடல்.

### மதனமஞ்ஜூகா என்ற ஆறுவது லம்பகம்.

ஐந்தாவது அலை.

(டாக்டர் வே. ராகவன்.)

பிறகு மறுநாள் தோழி ஸோமப்பிரபை வந்ததும் அவளுடன் ஏகாந்தமாய் பேசிக் கொண்டிருக்கும் களிங்கஸேனை சொன்னாள்: "என்னை அரசன் நிச்சயமாய் பிரஸேனஜித் மஹாராஜனுக்குக் கொடுக்கப்போகிறான்; இதை நான் தாயிடம் கேள்விப்பட்டேன். அக்கிழவனையோ நீ பார்த்திருக்கிறாய். வத்ஸராஜனின் அழகைப்பற்றியோ நீயே சொல்லியிருக்கிறாய்; செவிவழிசென்று அவ்வத்ஸராஜன் என்னுள்ளத்தைக் கொள்ளைகொண்டு விட்டான். ஆகையால் முதலில் எனக்கு அந்த பிரஸேனஜித்தைக் காண்பித்துவிட்டு, பிறகு வத்ஸேச்வரன் இருக்குமிடம் என்னை அழைத்துப் போ; தாயால் ஆவதென்ன, தந்தையால் ஆவதென்ன?"

இப்படிச் சொல்லிவிட்டு ஏங்கி நிற்கும் களிங்கஸேனையைப் பார்த்து ஸோமப்பிரபை சொன்னாள்: "போகவேண்டுமானால் இதோ வானில் செல்லும் யந்திரத்தில் போகலாம். ஆனால் உன்னுடைய ஸிப்பந்திகள் அனைவரையும்கூட அழைத்துக்கொள்; ஏனெனில், வத்ஸராஜனைப் பார்த்துவிட்டு இங்கு திரும்பி வரமுடியாது; உன் தாய் தந்தையர்களை மறுபடியும் பார்க்கவும் முடியாது, நினைக்கவும் முடியாது. கணவனை அடைந்த பிறகு தூரத்திலிருந்து வரும் என்னைக்கூட மறந்து விடுவாய். தோழி, இப்பொழுது இங்கு வந்துகொண்டிருப்பதுபோல் உன் கணவன் வீட்டில் நான் வந்துகொண்டிருக்கமுடியாது." இதைக் கேட்டு அழுதவண்ணமாய் ராஜகுமாரி ஸோமப்பிரபையிடம் சொன்னாள்: "அப்படியானால் அந்த வத்ஸேச்வரனை, தோழி! நீ இங்கேயே என்னிடம் கொண்டு வந்து விடு; நீயில்லாமல் ஒரு க்ஷணம்கூட அங்கு என்னால் இருக்கமுடியாது. சித்திரலேகை தந்திரமாய் அநிருத்தனை அழைத்து வரவில்லையா? உனக்கே அக்கதை தெரியும்; ஆனாலும் நான் சொல்லுகிறேன், கேள்.

## உபகதை 1.

பாணாஸுரனுக்கு உஷை என்று புகழ்பெற்ற பெண் இருந்தாள்; கணவனையடைய வேண்டி, அவள் கௌரீதேவியை வழிபட, தேவி அவளுக்கு வரனளித்தாள்: "நீ கனவில் எவனுடைய சேர்க்கையை அடைகிறாயோ, அவன் உனக்குக் கணவன் ஆவான்" என்று. பிறகு உஷை தைவச்சேய் போன்ற ஒருவனைக் கனவில் கண்டாள்; அக்கனவிலேயே கந்தர்வமுறையில் அவனால் மணக்கப்பட்டாள். அவனுடன் உண்மையிலேயே கூடியவளாய் பொழுது புலர்ந்ததும் விழித்துக் கொண்டாள். கணவனைக் காணவில்லை; ஆனால் அவன் வந்திருந்த அடையாளங்கள் தென்பட்டன; உடனே கௌரீதேவி அளித்த வரன் ஞாபகத்துக்கு வர, துன்பமும், பயமும், வியப்பும் உண்டாயின. கனவில் தான் கண்ட கணவனை அடையாதவளாய் சிரமப்பட்டுக் கொண்டிருக்கும் உஷை 'இதென்ன' என்று கேட்ட தன் தோழி சித்திரலேகையிடம் எல்லாவற்றையும் சொன்னாள். கனவில் வந்தவனைக் கண்டு பிடிக்க அவன் பெயர் முதலியன சித்திரலேகைக்குத் ஒன்றும் தெரிதுகொள்ளமுடியவில்லை; ஆனாலும் யோகவித்தை தெரிந்த சித்திரலேகை உஷையிடம் சொன்னாள்: "தோழி! தேவியின் வரத்தினுடைய பிரபாவம், என்ன சொல்வது! ஆனால் அடையாளங்கள் ஒன்றும் தெரியாத அந்த உன் காதலனை எப்படிக் கண்டு பிடிப்பது? உனக்கு அவனைத் தெரியுமல்லவா? நான் தேவர், அஸுரர், மானிடர் எல்லோருமடங்கிய உலகம் முழுவதையும் சித்திரமாய் வரைகிறேன், அந்த வடிவங்களில் அவனிருந்தால் காண்பி; நான் அவனை அழைத்து வருகிறேன்" என்று. 'அப்படியே செய்' என்று உஷை சொல்ல, சித்திரலேகை ஒருவரொருவராய் உலகிலுள்ளவரனைவரையும் வர்ணக்குச்சிகளைக்கொண்டு வரைந்தாள். அப்படங்களுக்கிடையே துவாரகையில் யதுகுலத்திலிருக்கும் அநிருத்தன் என்பவனை "இவர்தான்" என்று உஷை களிப்புற்றவளாய் துடிக்கும் விரலால் சுட்டிக்காட்டினாள். சித்திரலேகை அதன்மேல் சொன்னாள்: "தோழி, நீ மிகவும் பாக்கியம் செய்தவள்; விஷ்ணுபகவானின் பேரனான அநிருத்தனை நீ கணவனாய் அடைந்தாய்; அவன் இங்கிருந்து அறுபதினாயிரம் யோஜனை தூரத்தில் வஸிக்கிறான்." இதைக் கேட்டு மேலும் ஏக்கங்கொண்டவளாய் உஷை சொன்னாள்: "தோழி! இன்றே நான் குளிர்ந்த சந்தனமுள்ள அவனுடைய மார்பையடையாவிட்டால், மிஞ்சிப்போன காமத்தீயில் நான் எரிந்து மடிந்ததாகவே வைத்துக்கொள்" என்று. இதைக் கேட்டு சித்திரலேகை தன் அன்பான தோழியைத் தேற்றிவிட்டு, அக்ஷணமே ஆகாயத்தில் எழும்பி துவாரகைக்குச் சென்றாள். மறுபடியும் கடைவதற்காகப் போட்ட மந்தரமலையின் சிகரங்களோவெனப் கடலிடையில் பெரிதாயும் உயரமாயும் கிளம்பியிருந்த வீடுகளோடு தோன்றும் துவாரகையைக்கண்டாள். அங்கு இரவில் உறங்கிக் கொண்டிருக்கும் அநிருத்தனைக் கண்டுபிடித்து அவனை எழுப்பி, கனவுகண்டதிலிருந்து உஷைக்கு அவன்பால் ஏற்பட்ட காதலை யறிவித்தாள். தனக்கும் அவ்விதமே ஏற்பட்ட கனவு நிகழ்ச்சியொன்றினால் ஏக்கங்கொண்டிருக்கும் அவ்வநிருத்தனை தன் யோகஸித்தியின் மஹிமையால் தூக்கிக்கொண்டு ஒரு நொடியில் திரும்பி வந்தாள் சித்திரலேகை. தோழி வரும் வழியையே பார்த்து நிற்கும் உஷையின் அந்தப்புரத்தினுள் வானவழியாய் வந்து மறைவாய் அவள் காதலனை நுழைய வைத்தாள். அநிருத்தன் வந்து சேர்ந்ததும் அவனைக் கண்ட உஷைக்கு, சந்திரனைக் கண்ட கடலைப் போல், உடல் பூரித்ததுக்கட்டுக்கடங்கவில்லை. அவ்வந்தப்புரத்திலேயே தன் தோழியால் தனக்கு அளிக்கப்பட்டவனாய், தன் உயிரே உருவெடுத்தாற்போலிருக்கும் அக் காதலனோடு இன்பமாய் இருந்தாள். இதை யறிந்து கோபித்த உஷையின் தகப்பன் பாணனை தன் வீரியத்தாலும் தன் பாட்டனாருடைய படைகளைக் கொண்டும் அநிருத்தன் வென்றான். பிறகு துவாரவதீ சென்று அங்கு உஷையும் அநிருத்தனும் பார்வதீ பரமேச்வரர்கள் போல் பிரிவற்றவராய் இருந்தார்கள்.

"இப்படியாக சித்திரலேகையால் உடனேயே உஷை தன் காதலனோடு கூடினாள். நீ சித்திரலேகையைவிட மேலான சக்திவாய்ந்தவள் என்று நான் எண்ணுகிறேன். ஆகையால் இங்கு என்னிடம் வத்ஸராஜனைக் கொண்டு வா; காலதாமதம் செய்யாதே."

இப்படிக் களிங்கஸேனை சொல்லக் கேட்டு, ஸோமப்பிரபை பதிலளித்தாள்: "சித்திரலேகை தேவஸ்த்ரீ; பரபுருஷனை தூக்கி வந்துவிட்டாள்; பரபுருஷனைத் தொடக்கூடாத என் போன்றவள் என்ன செய்யக்கூடும்? ஆகையால், தோழி, வத்ஸேச்வரனிருக்குமிடத்திற்கே உன்னை நான் கொண்டுபோகிறேன்; அதற்கு முன் உன்னை வேண்டிக்கொண்டிருக்கும் பிரஸேனஜித்தையும் உனக்குக் காண்பிக்கிறேன்."

இப்படி ஸோமப்பிரபையால் தெரிவிக்கப்பட்ட களிங்கஸேனை "அப்படியே" என்று ஒப்புக்கொண்டு, அவளுடன் அவள் தயார் செய்த மாயாயந்திர விமானத்தில் அப்பொழுதே ஏறி, தன் பொக்கிஷத்தோடும், தன் பரிவாரத்தோடும் கிளம்பி, வானவழியாய்த் தன் தாய் தந்தையருக்குத் தெரியாமலேயே அவ்விடம்விட்டுச் சென்றாள்.

காமனால் மிகவும் தீவிரமான நிலைக்குக் கொண்டுபோகப்பட்ட ஸ்த்ரீ, (ஸவாரி செய்யும்) வீரனால் விரட்டப்பட்ட குதிரைபோல் எதிரிலிருக்கும் மேடுபள்ளங்களைப் பார்ப்பதில்லை.

முதலில் சிராவஸ்தியையடைந்து அங்கு வேட்டையிலிருந்து திரும்பிவந்திருக்கும், கிழத்தனத்தால் வெளுத்துப் போயிருந்த பிரஸேனஜித்ராஜனை அப்பொழுதே நிலையில் தூரத்திலிருந்து பார்த்தாள். பிரஸேனஜித்தின் முன் விடாமல் வீசப்பட்ட சாமரம் தூரத்திலிருந்தே களிங்கஸேனையை 'இக்கிழவன் உனக்கு வேண்டாம்' என்று தடுப்பது போலிருந்தது. "இவன் தான் பிரஸேனஜித் ராஜன்; இவனுக்குத்தான் உன்னைத் தகப்பன் கொடுக்க இச்சைகொண்டிருக்கிறான்; பார்" என்று பரிஹாஸஞ் செய்து கொண்டு ஸோமப்பிரபை காண்பித்தாள். "தோழி! கிழத்தனம் இவனைச் சூழ்ந்து நிற்கிறதே, இவனை வேறு யார் வேண்டுவள்? இங்கிருந்து என்னை வேகமாய் அழைத்துக் கொண்டு வத்ஸேச்வரனிடம் செல்" என்று சொல்லிவிட்டு களிங்கஸேனை ஸோமப்பிரபையுடன் வானவழியாகவே கௌசாம்பீ நகரத்திற்கு வந்தாள்.

அங்கு உத்யானத்தில் இருக்கும் வத்ஸராஜனை ஸகி காண்பிக்க தூரத்திலிருந்தே ஏக்கத்துடன், பெண்சகோரம் சந்திரனைக் காண்பதுபோல், கண்டாள். களிங்கஸேனையின் கண்கள் விரிந்தன; கையை ஹிருதயத்தின் மேல் வைத்துக்கொண்டாள்; இதைப் பார்த்தால் இக்கண்கள் வழியாய் இந்த ஹிருதயத்திற்குள் இவன் நுழைந்துவிட்டான் என்று களிங்கஸேனை தெரிவிப்பது போலிருந்தது. "தோழி! இப்பொழுதே இவ்விடமே என்னை இவருடன் சேர்த்துவை; இவரைக் கண்ட பிறகு ஒரு க்ஷணம்கூட என்னால் பிரிந்திருக்க முடியாது." இதைக் கேட்ட ஸோமப்பிரபை "இன்று அபசகுனம் ஒன்றைக் கண்டேன்; ஆகையால் இன்று இவ்வுத்யானத்திலேயே பேசாமல் ஒருவர் கண்ணிலும் படாமல், அதிக தூரம் நடக்காமல் காத்திரு. காலையில் வந்து நீிருவரும் கூடுவதற்கு யுக்தியொன்றை ஏற்பாடு செய்கிறேன்; இப்பொழுது என் கணவனுடைய வீட்டிற்கு நான் போகவேண்டும்; நீ என் மனதில் குடிகொண்டிருக்கிறாய்" என்று சொல்லி, களிங்கஸேனையை அத்தோட்டத்தில் வைத்துவிட்டு, ஸோமப்பிரபை அவ்விடம்விட்டுச் சென்றாள். வத்ஸராஜனும் தோட்டத்தைவிட்டு அரண்மனைக்குள் நுழைந்தான்.

பிறகு அத்தோட்டத்தில் தங்கியிருக்கும் களிங்கஸேனை சகுனம் தெரிந்த தன் தோழியால் முன் தடுக்கப்பட்டவளாயிருந்தும் தன் ஸிப்பந்திகளில் முக்கியமானவன் மூலம் உண்மைப்படி தன் செய்தியை வத்ஸேச்வரனுக்கு சொல்லியனுப்பினாள். புதிதாய் மனதை ஆட்கொண்ட பெண்களின் காமம் சுயேச்சையாய்த்தான் நடக்கும். அந்தத் தூதனும் அரண்மனைக்குச் சென்று வாயிற்காப்போன் மூலம் தெரிவித்து, உள்ளே நுழைந்து வத்ஸராஜனிடம் சொன்னான்: "அரசே! உம்மை மிகவும் அழகு வாய்ந்தவரெனக் கேள்விப்பட்டு தக்ஷசிலாநகர ராஜன் களிங்கதத்தனின் மகள் களிங்கஸேனை தன் உறவினரைவிட்டு தன் பரிவாரங்களுடன் இவ்விடம் உம்மை ஸ்வயம்வர முறையில் வேண்ட வந்திருக்கிறாள்; மயாஸுரனின் மகளும் நளகூபரனின் மனைவியும் மறைவாய் ஸஞ்சரிக்கும் சக்தியுள்ளவளுமான

தன் தோழி ஸோமப்பிரபை யென்றவளால், களிங்கஸேனை வானில் போகும் மாயா யந்திர விமானத்தில் இங்கு கொண்டுவரப்பட்டாள். அக்களிங்கஸேனை உம்மிடம் தெரிவித்துக் கொள்ள என்னை அனுப்பினள்; அவளை ஏற்றுக்கொள்ளும்; நிலவுக்கும் சந்திரனுக்கும் போல் உம்மிருவருக்கும் சேர்க்கை ஏற்படட்டும்.''

இதை களிங்கஸேனையின் முக்கிய ஸிப்பக் தியிடம் கேட்ட வத்ஸேச்வரன் 'அப்படியே ஆகட்டும்' என்று ஆமோதித்து, களிப்புற்றவனாய், அத்தூதனை பொன்னையும் ஆடைகளையும் எடுத்து கௌரவித்தான். தன் முக்கிய மந்திரியாயிருக்கும் யௌகந்தராயணனைக் கூப்பிட்டுச் சொன்னான்: ''களிங்கதத்தமஹாராஜனின் புதல்வி, பூமியிலேயே புகழ்பெற்ற அழகுவாய்ந்தவள், களிங்கஸேனை என்றவள் என்னைக் கணவனாய் வேண்ட தானே நேராக வந்திருக்கிறாள்; அவள் மறுக்கமுடியாதவள்; சீக்கிரம் சொல்லு, நாம் அவளை எப்பொழுது மணம் செய்து கொள்ளலாம்'' என்று. இப்படி வத்ஸராஜனால் சொல்லப்பட்ட மந்திரி யௌகந்தராயணன், அரசனின் வருங்கால நன்மையை எண்ணினனாய் ஒரு நொடிப் போது யோஜனை செய்தான்: ''அக்களிங்கஸேனை உண்மையில் மூவுலகிலும் அழகால் புகழ்பெற்றவளே; அவளைப்போல் வேறொருத்தி யில்லை; தேவர்களும் அவளை இச்சிக்கின்றனர். அவளை இந்த வத்ஸராஜன் அடைந்தால் மற்றெல்லாவற்றையும் விடுப்பான்; மஹிஷி வாஸவதத்தையும் உயிர் துறப்பாள்; அதன்மேல் ராஜகுமாரன் நரவாஹனதத்தனும் இறப்பான். அரசனுக்குக் களிங்கஸேனையிடம் ஏற்பட்ட அன்பின் மூலம் பத்மாவதியும் ஜீவிப்பது கஷ்டமாகி விடும். அதன்மேல் இருமஹிஷிகளின் தந்தையர் சண்டமஹாஸேனனும் பிரத்யோதனும் உயிரை விட்டாலும் விடுவர், அல்லது நம் அரசனிடம் விரோதம் கொண்டாலும் கொள்ளுவர். இப்படியாக எல்லாம் அழிந்துபோகும்; ஆனாலும் அரசனைத் தடுப்பதும் தக்கதன்று; தடுத்தால் அரசனுக்கு அவ்விஷயத்தில் பற்று அதிகப்படும். ஆகையால் அரசனின் மனதுட் புகுந்து நாம் சொன்னபடி அவன் கேட்பதற்காக காலத்தை இழுத்துப் போடுகிறேன்.'' இப்படி யோஜித்து வத்ஸராஜனிடம் யௌகந்தராயணன் சொன்னான்: ''அரசே! நீர் மஹாபாக்கியசாலி; உனக்காக உன் வீட்டிற்கே இக்களிங்கஸேனை வந்துவிட்டாள்; இனி இவளுடைய தகப்பனும் உனக்கு அடிமையாகிவிட்டான். ஆகையால் ஜோஸியர்களைக் கேட்டு நல்ல லக்கினத்தை வைத்து, விதிப்படி கல்யாணத்தை நடத்திக்கொள்ள வேண்டும்; இவள் பெரிய அரசனின் குமாரி அல்லவா? தற்போது அவளுக்குத் தக்கதான தனி விடுதியைக் கொடும்; ஆட்களையும் ஆடை ஆபரணங்களையும் அவளுக்கு அனுப்பும்'' என்று. இப்படி தன் பிரதான மந்திரி சொன்னதும் ''ஸரி'' என்று வத்ஸராஜன் ஸந்தோஷப்பட்டு மந்திரி சொன்னவற்றை மேலும் விசேஷமாகவே செய்து வைத்தான். தனக்குக் கொடுக்கப்பட்ட விடுதியில் நுழைந்த களிங்கஸேனையும் தன் மனோரதம் நெருங்கி வருவதை யெண்ணி இன்புற்றாள். புத்திமானான யௌகந்தராயணனும் அந்த க்ஷணமே அரண்மனையைவிட்டுத் தன் இருப்பிடம் வந்து யோஜித்தான்: ''அனேகமாய் நன்மை மிக்கதாயில்லாத காரியத்திற்கு ஒத்திப் போடுவதே தடை; விருத்திரனைக் கொன்ற இந்திரன் பிரம்மஹத்தியிலிருந்து பயந்து ஓடினபோது, நஹுஷன் இந்திரனுடைய ராஜ்யத்தை அடைந்தவன் இந்திராணியை இச்சித்தான்; இந்திராணி தேவகுருவைச் சரணம் புக, அவர் அவளைக் காப்பாற்றி வந்தார். 'இதோ, காலை உன்னிடம் இந்திராணி வருவாள்'' என்று தேவகுரு ஒத்திப்போட, அதற்குள் பிராம்மண சாபத்தின் ஹுங்காரத்தினால் நகுஷன் அழிந்தான். பிறகு இந்திரன் முன்போல் தேவலோக ராஜ்யத்தை அடைந்தான். அதுபோல களிங்கஸேனை விஷயத்திலும் நான் ஒத்திப்போடவேண்டும்.'' இப்படி யோஜனை செய்து, மந்திரி மணமுகூர்த்தத்தை முடிந்தவரையில் தள்ளி வைக்கும்படி ஜோஸியரோடு ரஹஸ்யமாய் ஏற்பாடு செய்துகொண்டான்.

பிறகு, இந்த ஸமாசாரத்தை அறிந்த வாஸவதத்தை கூப்பிட்டனுப்ப, மந்திரி யௌகந்தராயணன் அவளுடைய மாளிகைக்குச் சென்றான். வந்து வணங்கி நின்ற மந்திரியிடம்

கண்ணீர் விட்டுக்கொண்டு வாஸவத்தை சொன்னாள்: "ஆர்ய! நானிருக்கும் வரையில் பத்மாவதிக்குமேல் மற்றொரு மனைவி அரசனுக்கு ஏற்படமாட்டாள் என்று முன் எனக்கு வாக்குக் கொடுத்தீரே? இதோ பாரும், இக்களிங்கஸேனை அரசரை மணக்கப் போகிறாள். அவளோ அழகு வாய்ந்தவள்; அவளிடம் அரசரும் ஈடுபடுவார்; நீர் பொய் வார்த்தை கொடுத்தீர்; நானும் இதோ மடிந்தவளானேன்" என்று. அதைக் கேட்டு மந்திரி யௌகந்தராயணன் சொன்னான்: "தேவி! தைர்யத்தைக் கைக்கொள்; நான் உயிருடனிருக்கும் வரை நீ சொல்லியது எப்படி நடக்கும்? நீயும் அரசனுக்கு விரோதமாயொன்றும் செய்யக்கூடாது. அதுமட்டுமல்ல; அரசருக்கு அனுகூலமாகவிருப்பதாகவே காண்பித்துக் கொண்டிருக்கவேண்டும். வியாதியிலிருப்பவன் எதிர்த்துச் சொல்லிக்கொண்டிருந்தால், வைத்தியனுக்கு வசப்பட்டிருக்கமாட்டான்; ஆனால் அனுகூலமாய்ப் பேசிக்கொண்டு நல் வார்த்தைகளுடனேயே காரியங்களைச் செய்து கொண்டிருந்தால் வசப்பட்டிருப்பான். எதிர்த்து இழுக்கப்பட்டவன் கரையேறமாட்டான்; ஆனால் ஆற்றின் வெள்ளப் போக்கோடு இழுக்கப்பட்டால் கரையேறுவான்; அதுபோலவே தான் ஒரு பற்றிலிருந்து கரையேறுவதும். ஆகையால் உன்னிடம் அரசன் நெருங்கும் போது, மனது மாறுபடாமல், உன் மனோபாவத்தை மறைத்துக் கொண்டு உபசாரங்களைக் கொண்டு உபசரிப்பாயாக. தற்போதிற்கு களிங்கஸேனையை ராஜா ஏற்றுக்கொள்வதை நீயும் களிங்கஸேனையின் தந்தையின் ஸஹாயம் ஏற்பட்டு அதன்மூலம் ராஜ்யம் விருத்தியடையும் என்று சொல்லி ஆமோதனஞ்செய். நீ இப்படிச்செய்தால் உன் பெருமனதை நினைத்து உன்னிடம் ராஜா அன்பும் கௌரவபுத்தியும் அதிகம் கொள்ளுவர். களிங்கஸேனை ஸுலபமாய் தனக்குக் கிடைத்துப் போனால், அவளைக்குறித்து ஏங்க இடமில்லை; தடுத்தாலல்லவா விஷயங்களில் வாஞ்சை அதிகரிக்கிறது! இதை பத்மாவதிதேவிக்கும் நீ சொல்லிவைக்கவேண்டும். இப்படிச் செய்தால் நாம் அரசனைக்காலதாமதத்தைப் பொறுக்கும்படி செய்யலாம். அதன் மேல் என்ன செய்வதென்று எனக்குத் தெரியும்; என் யுக்தியின் வலிமையை நீயும் பார்க்கலாம். புத்திமான்களை ஸங்கடங்களில் பரீக்ஷிக்கவேண்டும்; சூரரை சண்டையில் பரீக்ஷிக்கவேண்டும். ஆகையால், தேவி, வருந்தாதே." இப்படி வாஸவதத்தைக்கு நன்மதி சொல்லிவிட்டு, அவளால் ஆமோதிக்கப்பட்டவனாய் யௌகந்தராயணன் அவ்விடம் விட்டு விலகினான். வத்ஸராஜனோ அன்று பகலிலோ, இரவிலோ, இருமஹிஷிகளுடைய மாளிகைக்கும் செல்லவில்லை; தானாய் வந்து வேண்டும் ஸ்வாரஸ்யத்தோடு கிடைக்கப்போகும் களிங்கஸேனையின் ஒப்பற்ற புதுமணத்தைக் குறித்தே அவ்வளவு ஏங்கிக்கிடந்தான்!

அவ்விரவை வாஸவதத்தை இன்பமே கிட்டாததாயும், அரசன் ஏக்கமே நிரம்பியதாயும், முக்கிய மந்திரி யௌகந்தராயணன் யோஜனைமயமாயும் களிங்கஸேனை பெருவிழாமயமாயுமிருப்பதாக, தனித்தனியே தம் தம் இருப்பிடங்களில் கழித்தனர்.

ஐந்தாவது அலை முற்றிற்று.

# உமரு கையூமின் ருபையத்து.

"பரத்வாஜன்."

இகத்துள வின்பம் துய்ப்பானேங்குவர் சிற்சில ரிவையெலாந்துரந்துப்
பரத்துள மாதர் போகம் முகம்மது சொற்றவாறு நைந்துளம் வேட்பரந்தோ!
ஜகத்துள மாந்தரே! கரத்தினில் சொக்கமு முளதெனின் பற்றுமின் கடனெனி
லெழுமின்! சேண்
அகத்திடை யாவரேனு மறைந்திடு பறைமுழக்கை சிறிதெனும் செவி கொளா
தெழுமின்!

துவரிதழ்ச் செவ்வாய் ரோஸையே தெளிமின்! அன்னவ ளறைகுவள் "அஹ்ஹா!
மலர்தலை யுலகில் நானும் முறுவ லோடுற்றேன்; உகுத்தேன்
பலபல புன்கணினீர் பரப்பினேன் பைம்பூங்காவின்
நிலந்தனி லெந்தன் அருந்தனப் பொக்கிஷ மிழந்தனன் இறந்தனரந்தோ!

ஆடகச் செம்பொனணுவுட னணுவாய்ச் சேமிய சிக்கனத்தோரும்
தேடிய பொருளைத் திவலையாய்ச் சிதறி மழையென வையகத் திறைத்திடுவோரும்
மூடிய மண்மிசை மாண்டபின் மாந்தரும் பொன்னாய் மாறிலரந்தோ!
காடிடை யவருடல் கவருவான் வேட்டில ரெவரும் பிடி சாம்பரா யினரன்றோ?

இதுவது காமுற்றழுங் குவாயந்தோ! யஃதெய்திடி னுறுவாய் அளப்பரி வுவகை
ததியது பொய்த்திடலக் கணந்தானேங்குவா யளப்பரும் கம்பல் பாலை
பொதுவழி தனிலுறு பனிதனிமய பளிங்குமான் றேற்றம் நாழிப்
பொதுவரை விளங்கி யுடனுடன் மயங்கி நழுவிடல் மானும்!

உன்னிடு! உளத்திடைப் பகலிரவெனுங் கதவுடைப் பூதலச் சந்தையிற்
முன்னிடு மன்னரும் மாக்களுமவரவர் தவணை வாரமர்ந்தனர் சென்றனர்
அன்னவாற்றலோ டாடலும் பாடலும் அடல் செறுக் கமளியு மியாவும்
என்னலமாயினும் "இருந்தனர், ஏகினர்", என்றலோ யியம்புவர் புவனச் சாவ
டிதனிலே!

களியயர்ந் தாற்றும் ஜாமுஷேத்தின் மங்கையர் கொங்கையர் புணர்ந்த
ஒளியவிர் மாடமி ரத்தினக் கூடமிலங்கிடு கோபுர
வெளிதனி லுலவிடுஞ் சீயம் கரைந்திடும் பல்லியோர் காதல்
இளிவுறு கத்தபம் கால்கொண்டோச்சிப் புடைத்துமே பஹராவில்லி எய்துவ
னிடையறாவுறக்கம்!